விலை ரூபா: 14.00 பக்கங்கள்:-[08+20] Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 28 திங்கட்கிழமை (14.10.2002) தொலைபேசி- 2223378 ஒலி 299

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT



யாழ் பல்கலைக்கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றபோது துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பீடாதிபதிகள் சகிதம் பட்டமளிப்பு நடைபெறும் கைலாசபதி கலையரங்கிற்கு அழைத்துச் செல்லப்படும் காட்சி. படம்:- காந்தன்

## திருமலையில் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த

# இருநூறு தமிழ் இளைஞர்களை ஊர்காவல் படையில் சேர்க்குக!

## உட்துறை அமைச்சரிடம் சம்பந்தன் கோரிக்கை சமாதானக் குழுவும் அமைக்கப்படும்


(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை அன்புவழிபுரத்தில் இடம்பெற்ற படுகொலைச்சம்பவங்கள் வருங்காலத்தில் இடம்பெறாமல் தடுக்கும் வகையில் சமாதானக் குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா அறிவித்துள்ளார்.

இதேவேளை திருகோணமலையில் தமிழ் இளைஞர்களை ஊர்காவல் படையில் அரசு நியமிக்கவேண்டுமென திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் உட்துறை அமைச்சரைக் கேட்டுள்ளார்.

திருகோணமலை அன்புவழிபுரத்தில் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு- கிரனைட் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக நேரில் நிலைமைகளை ஆராயும் பொருட்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கா

(08ம் பக்கம் பார்க்க)



நேற்று திருமலைக்குச் சென்ற அமைச்சர் குழு இரா.சம்பந்தன் எம்.பி வீட்டில் சந்தித்த போது...

# திருமலைப் படுகொலைக்கு பொலிஸாரே காரணம்!

### அமைச்சர் மகேஸ்வரன் குற்றச்சாட்டு அமைச்சர் ஜோன் அமரதுங்கா மறுப்பு

(கொழும்பு)

திருகோணமலையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களுக்கு பொலி... துறை அமைச்சர் ஜோன அமரதுங்க மறுத்துள்ளார்.

பி.பி.சி.யின் சிங்கள சேவையான

# விடுமுறையில் சென்ற படையினருக்கு புலிகள் பாதுகாப்பு வழங்கினர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இருந்து விடுமு... துணைப் பாதுகாப்பு வழங்கி அனுப்பி வைத்தனர். முன் பின்னாக விடுதலைப்புலிகளின் வாகனங்கள் சென்று பாதுகாப்பு



சர் ஜோன் அமரதுங்கா அறிவித்துள்ளார்.

இதேவேளை திருகோணமலையில் தமிழ் இளைஞர்களை ஊர்காவல் படையில் அரசு நியமிக்கவேண்டுமென திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் உட்துறை அமைச்சரைக் கேட்டுள்ளார்.

திருகோணமலை அன்புவழிபுரத்தில் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு- கிரனைட் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக நேரில் நிலைமைகளை ஆராயும் பொருட்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கா

(08ம் பக்கம் பார்க்க)

# திருமலைப் படுகொலைக்கு பொலிஸாரே காரணம்!

## அமைச்சர் மகேஸ்வரன் குற்றச்சாட்டு அமைச்சர் ஜோன் அமரதுங்கா மறுப்பு

(கொழும்பு)

திருகோணமலையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களுக்கு பொலிஸாரே காரணமென இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்த குற்றச்சாட்டை உட்துறை அமைச்சர் ஜோன அமரதுங்க மறுத்துள்ளார்.

பி.பி.சி.யின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த மறுப்பை

(08ம் பக்கம் பார்க்க)

# விடுமுறையில் சென்ற படையினருக்கு புலிகள் பாதுகாப்பு வழங்கினர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இருந்து விடுமுறையில் சென்ற இராணுவத்தினருக்கு விடுதலைப்புலிகள் நேற்று வழித்துணைப் பாதுகாப்பு வழங்கி அனுப்பி வைத்தனர்.

மட்டக்களப்பு படைமுகாம்களில் இருந்து விடுமுறையில் 120 இராணுவத்தினர் மூன்று வாகனங்களில் தமது வீடுகளுக்குப் புறப்பட்டனர். இவர்களின் வாகனங்களிற்கு முன் பின்னாக விடுதலைப்புலிகளின் வாகனங்கள் சென்று பாதுகாப்பு வழங்கின.

அம்பாறையில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து மக்கள் கொதிப்படைந்திருப்பதால் அச்சமடைந்த

(08ம் பக்கம் பார்க்க)

# கொழும்பு ஊடாக பாலசிங்கம் வருவதை தலைவர் பிரபா விரும்பவில்லை

## பாதுகாப்பு இல்லையெனத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வன்னிக்கு வருவதை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பாதுகாப்புக்கருதி விரும்பவில்லை என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாம் சுற்றுப்பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் கலந்துரையாட வேண்டிய அவசரம் இருப்பதால் அவர் வன்னிக்கு வரவேண்டியுள்ளது.

இந்நிலையில் கட்டுநாயக்கா விமாநிலையம் ஊடாக அவர் வன்னிக்குச் செல்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ள போதும்

(08ம் பக்கம் பார்க்க)

## காஞ்சிரங்குடாப் படுகொலைச் சம்பவம்

# விசாரணைகளை மேற்கொள்ள மூவர் கொண்ட குழு நியமிப்பு

(அம்பாறை)

அம்பாறை காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் முன்பாக இடம்பெற்ற படுகொலைச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள மூன்று பேர் கொண்ட குழு வொன்றை உட்துறை அமைச்சு நியமித்துள்ளது.

ஓய்வு பெற்ற விமானப்படைத் தளபதி எயர் வைமார்ஷல ஹரி குணதிலக தலைமையிலான இக் குழுவில், ஓய்வு பெற்ற மேல் நீதி

(08ம் பக்கம் பார்க்க)


கணனி தொழில் நுட்பத்தோடு, விஞ்ஞான முறைப்படி ஆய்வுகூடத்தில் தரம் உறுதி செய்யப்பட்டது

சமநிலை போசனைப் பதார்த்த கலவையானது




சீ.ஐ.சீ. உரம்

இலங்கையில் சர்வதேச தரம் 9001 ஐ உறுதிப்படுத்திய ஒரே உரம் இதுவே

CIC

சீ.ஐ.சீ. போர்டிலைசர் (பிறைவேட்)லிமிட்டெட்
205.டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தை
கொழும்பு – 10

Telephone : 01 – 688200 – 2 Fax : 01 – 691909 E.mail: cicf @sltnet.lk Website: www.cicagribusinesses.com

## அமெரிக்காவுடன் இலங்கை

# எத்தகைய ஒப்பந்தத்தை செய்தாலும்

# அது கூட்டுச்சேரா கொள்கையை குழப்பாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அமெரிக்காவுடன் என்ன ஒப்பந்தத்தைச் செய்தாலும் அது இலங்கையின் கூட்டுச்சேரா நிலைப்பாட்டை குழப்புவதாக இராது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துளார், ஆயினு அரசாங்கம் அமெரிக்காவுடன் ஒருஒப்பந்தத்தை செய்து கொள்ளப் போகும் சத்தியக் கூறுகளை அவர் மறுக்கவில்லை.

அவர் மேலும் பேசுகையில் அரசாங்கம் அத்தகைய ஒரு ஒப்பந்தத்தில் இன்னும் ஒப்பமிடவில்லை அவ்வாறு ஒப்பமிடுவதற்கு முன் கட்சிகளின் தலைவர்களுக்கு அதுபற்றி தெரிவிக்கப்படும்.

செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தம் எமது படையினருக்கு போர் உபகரணங்கள், உணவு வசதிகள், வேலைவாய்ப்புகள், போக்குவரத்து வசதிகள், மருத்துவ வசதிகள் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளில் ஒத்துழைப்பு என்பன போன்ற வசதிகளை அளிக்கும்.

இலங்கை அதன் துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் அமெரிக்காவின் பயன் பாட்டிற்கு அனுமதிக்கும் என்று தெரிவித்தார்.

காலி மாவட்டத்தின் சமசமாஜ கட்சி எம். பி. பத்தேகம சமிந்த தேரர் எழுப்பிய கேள்வியொன்றிற்கு பதிலளிக்கு முகமாகவே பிரதமர் மேற்படி விளக்கத்தை அளித்தார்.

இலங்கை அரசின் மீது அமெரிக்கா அழுத்தம் கொடுக்கும் நிலை ஏற்படாதாஎன்று அவர் கேட்டிருந்தார்.

ஈராக் மீதான தாக்குதலிற்கு இலங்கையை, அமெரிக்கா ஒருதளமாகபயன் படுத்தலாம் என்ற கருத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் தெரிவிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியான அலகு

# பொ. ஐ. முன்னணியின் அரசியல் தந்திரம்

## குற்றம் சாட்டுகிறார் அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும்முஸ்லிம் மக்களுக்கான தனியான அலகொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு தமக்கு ஆதரவு உண்டு என பொது ஜனஐக்கிய முன்னணி தெரிவித்தமை ஒரு அரசியல் தந்திரம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிறுவனத்துக்கு அளித்த சிறப்பு பேட்டியின் போதே அமைச்சர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அப்பேட்டியின் போது தற்போதைய அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தி பொதுஜன ஐக்கிய முன்னணி உண்மைக்குப்புறம் பானசெய்திகளைதிரிவுபடுத்தி கூறிவருகிறது.

2000 ஆம் ஆண்டில் பொது ஜன ஐ கிய முன்னணி முன்வைத்த அரசியல் அமைப்பு நகலில் இந்தத் தனி அலகு பற்றிகுறிப்பிடப் பட்டிருந்தது உண்மையே.

ஆனாலும் அவ்விதம் அரசியல் அமைப்பு நகலில் குறிப்பிடப்பட்டமை ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின் கோரிக்கையின் பேரிலேயே எனவும் அமைச்சர் ஹக்கீம் சுட்டிக் காட்டியுள்ளார்

இவ்வரசியல் அமைப்பு நகலின்படி திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் யாவரும் நிபந்தனை இன்றி இவ் வலகு தொடர்பான கோரிக்கையை ஏற்றால் மாத்திரமே தனி அலகு ஒன்றை அமைக்க முடியும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதனை ஒரு மாற்றுத் திட்டமாக ஏற்றுக் கொள்ள மாட்டாது எனவும் ஹக்கீம் உறுதி படத் தெரிவித்துள்ளார்.

தனி அலகுக் கோட்பாடு ஆனது மட்டக்களப்பு திருகோணமலை போன்ற பிரதேசங்களில் வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என கட்சிகருதுகின்றது.

இதனால், சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம் மக்களின் அரசியல்உரிமைகளும்பறிபோகும் நிலை ஏற்படும்.

எனவே, இத்தகைய தனி அலகொன்றை முஸ்லிம் மக்களுக்கு என பெற்றுக் கொள்வதென்பது நாட்டுக்கும் அம் மக்களுக்கும் உகந்தது அல்ல என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

இது போன்ற சில கோடிகளை காட்டி முஸ்லிம் மக்களைபோல ஏனைய மக்களையும் தூண்டிவிடும் முயற்சிகளிலேயே தற்போது பொது ஜன ஐக்கிய முன்னணி முனைந்து வருகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அன்று முன்வைத்த தனியலகு யோசனைக்கு முஸ்லிம் காங்கிரஸ் திருத்தம் கொண்டுவந்தது என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர்,

அந்தத்திருத்தத்தை ஏற்றுக் கொண்டு பொ ஐ மு. மீண்டும் அரசியல் அமைப்புநகலை முன்வைக்குமானால், அதனை பரிசீலனை செய்ய தமது கட்சிதயார் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு தனியாக நிர்வாக அலகு அல்லது தென்கிழக்கு மாகாணசபை ஒன்று அமைக்கப்படுமானால், அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம அண்மையில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

## அரச ஊழியரின்

# ஆகக் குறைந்த சம்பளம் 6000 ரூபாவாக சிபார்சு

(கொழும்பு)

திஸ்ஸ தெய்வேந்திர ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் சம்பள மீளாய்வு அறிக்கைகளை ஜனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார்.

இதற்கமைய 2000ம் ஆண்டு கொழும்புநுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்கு அமைவாக அரசாங்க ஊழியர்களின் குறைந்தஅளவு சம்பளம் 6ஆயிரபரூபாவாக இருக்கவேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் [illegible]வித்துள்ளது.

குறைந்த ஊதியம் பெறும் அரச தொழிலாளர்களின் சம்பளம் 70-76வீதம்வரையும் அப்பிரிவைச்சேர்ந்த உயர்ந்த ஊதியம் பெறுவோரின் சம்பளம் 52-60வீதம்வரையும் உயர்த்தப்பட வேண்டும்என ஆலோசனைகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

மத்திய மற்றும்தொழில் நுட்ப பிரிவுகளில் குறைந்த ஊதியம் பெறுவோருக்கு59-70வீதமும்உயர்ந்த ஊதியம் பெறுவோருக்கு 53 64வீத வரையும் நிறைவேற்று அதிகார உளபிரிவுகளை சேர்ந்தோருக்கு 47-59 வீதமும் சம்பளஉயர்வுவழங்கப்பட வேண்டும்.

சிரேஷ்ட மற்றும்முகாமைத்துவ பிரிவுகளில் கடமைபுரியும் குறைந்தஊதியம் பெறுவோருக்கு 36-49வீதமும் உயர்ந்தஊதியம் பெறுவோருக்கு43-54வீதமும் வழங்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதியசம்பளத் திட்டக் கொள்கைஒன்றை உருவாக்கும் பொருட்டும் அரசசேவைகளை மறுசீரமைக்கும் பொருட்டும் நிரந்தர ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் எனவும் திஸ்ஸ தெய்வேந்திர ஆணைக்குழு பரிந்துரை செய்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சகல அரச திணைக்களங்களும் ஏ.பீஎன வகைப்படுத்தப்படவுள்ளன. (க-8)

## யா. வீரசிங்கம் மண்டபத்தில்

# மானுடத்தின் தமிழ்க்கூடல் 4 தினங்கள் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நிதர்சனம் நிறுவனத்துடனும், தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002' எனும் நிகழ்வை எதிர்வரும் 19,20,21,22 ம் திகதிகளில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவுள்ளது.

நிகழ்வுகள் 'மானிட விடுதலை நோக்கிய திசையில் ஈழத் தமிழர் உரிமைப் போராட்டமும் கலை இலக்கிய ஊடகங்களின் வகிபாகமும்' எனும் அடிப்பொருளில் தினமும் புதிய நேரம் காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் பேராளர்கள் முன்கூட்டியே தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக தகவல்களை எந்நேரமும் 0777245569 எனும்தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## திறப்புக் கோர்வை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம)

மோட்டார் சைக்கிள் திறப்புக் கோர்வை ஒன்று யாழ். நகரில் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம்காட்டிப் பெற்றுக் கொளளவும். (க)

## 75 ஆயிரம்

இலங்கை உயர்ஸ்தானிகராலயம் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-08)

## திருமலையில் சுட்டுக் கொல்லப்பட்ட

# இரு இளைஞரின் சடலமும் தகனம் செய்யப்பட்டது

(திருகோணமலை)

கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்காவின் ஊர்காவல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர்களின் சடலங்களுக்கு பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

திருமலை இந்துகலாசார மண்டபத்தில் வைக்கப்பட்ட இருசடலங்களுக்கும் மக்கள் அஞ்சலி செலுத்தியதை அடுத்து திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன், எஸ். துரைரட்ணசிங்கம், என். கே. சிவாஜிலிங்கம், ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வுகளின் போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து க. சஜீந்திரன், கோ. கோணலிங்கம் ஆகிய இருஇளைஞர்களது உடல்களும் இந்துகலாசார மண்டபத்தில் இருந்து ஊர்வலமாகஎடுத்துச் செல்லப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.

இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டமக்கள் சோகமே உருவாக வீதியின் இருமருங்கிலும் நின்றவாறு தமதுஅஞ்சலியைச் செலுத்தினர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொது முகாமையாளர்களை கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

## நினைவுப் பேருரையும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கைலாசபதியரங்கில் இன்று பி.ப3மணிக்கு சீமாட்டிலீலாவதிஇராமநாதனின்நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை ஒட்டிய கலை நிகழ்வுகள் இடம்பெறுமென பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி கலை நிகழ்வு நேற்று நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (த)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவைநடத்தி வரும் வாராந்த நிகழ்வு எதிர் வரும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில்யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேலின் பகவத் கீதை (தொடர்) சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (க-08)

## கோப்பாயில் திட்ட நடவடிக்கைகள்

(கோப்பாய்)

மழைநீரைத் தேக்கிவைத்து நீர்ப்பற்றாக்குறை, மற்றும் நீரியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான திட்ட நடவடிக்கைகள் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலும், வலயத்துக்கு ஒன்று என்றவகையில் ஐந்து பாடசாலைகளில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

ஜி. ரி. சற். நிறுவனத்தாரின் அனுசரணையுடன் முதற்கட்டமாக இத்திட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-79)

## புலமைபரிசு வழங்கும் நிகழ்வு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்குக்-கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்குவது தொடர்பாக நாளை செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் நடைபெறவிருந்த வைபவம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை கடற்படைத்தளத்தில் நடைபெறவிருந்த இந்தவைபவம் தற்போது திருகோணமலையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி புலமைப்பரிசில்களைப் பெறுவதற்காக வடக்கு கிழக்குப் பாடசாலைகளில் இருந்து 300மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# நவராத்திரி பாமாலை
## (எட்டாம் நாள்)



### ஒளி விளக்கே அருள்வாய்

நாமகளே எம் நற்றமிழ் கலை மகளே
பாமகளே அறியாமை களை மகளே
கல்விக் கடல் காண இன்பங்கள் சேர
கல்வி ஒளிதனை கலங்கரை விளக்காய் அருளிடு
- தாயே!

சி. திருச்செந்தூரன்
யா/ நெ.ம.ம வி

### வரம் தருவாய் நாயகியே

துணிவின் நாயகியே துர்க்காதேவி!
நல்லதை நான் செய்ய வரம் தருவாயே!
தர்மங்கள் வாழவும் அருள் தருவாயே!

திரு நிறைய அருள் தரும் திருமகளே
நிதியைத் தந்து நிம்மதியைத் தா தாயே!
நல்லவர்கள் கையில் நாணயங்கள் தரவேண்டும்

கல்விக் அதிபதி நாயகியே
காதலால் உனைதொழுது நின்றோம்
கருணையில் அருளினைத் தருவாய்

ச. ரவிவர்மன்
யா/ அச்சுவேலி மத்தியகல்லூரி

### சரஸ்வதித் தாயே

பண்ணோடு பரதமும் பலவகைக் கலைகளும்
என்னும் போதெல்லாம் எளிமையாய் வழங்குவாய்
கண்ணும் கருத்துமாக நின் கால்பிடித் தேனம்மா
மண்ணுளோர் போற்றமகத் தானகல்வி தருவாய்

து. ஜென்சிகா
தாவடி. இ.த.க. பாடசாலை

### கல்விக்கு ஒரு மகள்

கல்விக்கு ஒரு தாய் சரஸ்வதியாம் - நாம்
கற்றிடத் துணையாய் நிற்பவளாம்
வெண்டாமரை தனில் இருப்பவளாம்- அவளை
வேண்டி நிதமும் பணிந்திடுவோம்

ஆர். சங்கிதா
கொடிகாமம்

### நல் ஆசி வேண்டும் அம்மா

கல்வியால் அரியாசனம் நான் அமர
வேண்டும் அம்மா!
செல்வத்தால் ஏழைகளின் பசி தீர்க்க
வேண்டும் அம்மா!
வீரத்தால் இந் நாட்டை வழி நடத்த
வேண்டும் அம்மா!
இதற்கெல்லாம் நல்லாசி நீ அருள
வேண்டும் அம்மா!

எஸ் கிரித்தா
யாழ். இந்து மகளிர் கல்லூரி

### கல்வித் தாய்

கல்வித் தாயே கலை மகளே
கருத்தாய் என்னுள் இருப்பவளே
நாவில் உறையும நன் மகளே- என்
நாவில் உறைந்தருள் புரிவாயம்மா

ஆர். சங்கீதா
கொடிகாமம்

### அருள் தந்திருவாய்

அகிலம் எல்லாம் போற்றிடும்
அம்பிகை பராசக்தியே
துன்பங்கள் தீர்ந்து நன்மையே பெருக
என்றும் உன் அருள் தந்திடுவாய்

க. அனுஷன்
இந்துக்கல்லூரி

## அரசு- புலிகள்
# புரிந்துணர்வு ஒப்பந்தமானது
# மக்களின் இறைமையை மீறும் செயல்
## பாதுகாப்பிற்கானதேசியஅமைப்புதெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டு மக்களின் உரிமையை மீறும் செயல் என்று நாட்டின் பாதுகாப்புக்கான தேசிய அமைப்பு தெரிவித்து இருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி ஆகியகட்சிகள் ஒன்றிணைந்து இந்த அமைப்பை உருவாக்கியிருக்கின்றன;

இவ் அமைப்பின் மாநாடு எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பில் இடம்பெறும் என அறிவிக்கப்படுகின்றது.

இந்த மாநாட்டின் போது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சேனநாயக்க, மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரெல்வின் செல்வா, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் பேரியல் அஸ்ரப், மக்கள் முன்னணியின் தலைவர் தினேஸ்குணவர்த்தன ஆகியோர் இவ் அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையில்கையொப்பமிட்டுள்ளனர்.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணி எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பு ஹைட்பார்க்கில் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பொதுக் கூட்டமொன்றையும் நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது; (க- 07)

## ஓய்வூதியர் சமாதான பேரணி

(கொழும்பு)
ஒக்டோபர் 8 ஆம் திகதி தேசிய ஓய்வூதியர் தினத்தை கொண்டாடுமுகமாக தேசிய ஓய்வூதியர் சம்மேளனம் ஒரு சமாதான பேரணியையும் கூட்டத்தையும் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நடத்தியது.

நாட்டின் பலபகுதிகளிலுமிருந்துவந்த ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதில்உள்ள தடைகள் அகற்றப்படவேண்டும், வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்பஓய்வூதியக்கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படல்வேண்டும், 1994 க்கு முன்னர் ஓய்வூதியம்பெற்றுச் சென்றவர்கள் ஏனையவர்களின் ஓய்வூதியத்தை விட இரண்டுமடங்குகுறைவாகவே பெறுகின்றனர், சேனாரத்ன குழுவினரால் சிபார்சு செய்யப்பட்ட ஓய்வூதிய உயர்வு வழங்கப்படவில்லை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். (க)

## ஜி.ரி.சற் நிறுவன நடவடிக்கை

(கோப்பாய்)
கோப்பாய்க் கோட்டத்திலுள்ள 24 பாடசாலைகளில் பின்தங்கிய மாணவர்களின் கற்றல் தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் ஜி.ரி.சற் நிறுவனத்தின் அனுசரணையுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2000,2001ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் அனுசரணையுடன் மலசலகூட புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகளே முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுபங்காளி முகாமைத்துவத்தின் கீழ் மக்கள் நலன்காக்கும் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடுகளிலேற்பட்ட மாற்றங்களை நவம்பர் மாதம் 30ஆம் திகதியை உள்ளடக்கியதாக அறிக்கைப்படுத்தி குறிப்பிட்ட காலத்தின் இறுதிப் பகுதியில் தம்மிடம் ஒப்படைக்கும் படியாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-79)

## புத்தூரில் மாலை நேர வகுப்புகள்

(கோப்பாய்)
புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பின்தங்கிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் மாலைநேர வகுப்புக்கள் நடைபெற்று வருவதாக கல்லூரி அதிபர் வ. ஆறுமுகம் தெரிவித்துள்ளார்;

இம் மாணவர்களுக்கு மதிய வேளையில்சத்துணவுவழங்கப்பட்ட பின் வகுப்புக்கள் ஆரம்பமாவதாக தெரியவருகின்றது; (க-79)

## ஐ.தே. முன்னணி அரசின் நாட்கள்எண்ணப்படுகின்றன

(கொழும்பு)
ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியிலிருக்கக்கூடிய நாட்கள் எண்ணப்படுகின்றன என்று பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரசபை சீர்திருத்தச் சட்டத்தில் அரசாங்கத்திற்கு சார்பாக 108 வாக்குகளே கிடைத்திருந்த நிலையில்மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் செய்தியாளர் சந்திப்பில் இதுபற்றி தெரிவித்த பிரதான எதிர்க்கட்சி கொரடா மங்கள சமரவீர, இவ்வாண்டு முடிவதற்குள் பொ.ஐ மு. யின் அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி தமக்கு நம்பிக்கைஉள்ளதென்றும், தாம் தயாராகவேஇருப்பதாகவும் தெரிவித்தார்.

ஐ தே.மு. அரசை நாம்ஒரு சிறுபான்மையரசாகவே கருதுகிறோம்; இப்பொழுது பொ.ஐ மு. க்கு சார்பாகவே விவகாரங்கள் திரும்புகின்றன; சரத் அமுனுகம பேசுகையில், வடக்கு - கிழக்கின் நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைப்பதாயின் முஸ்லிம்களுக்கும் ஒரு தனி நிர்வாக அலகு வேண்டும் என்ற முஸ்லிம் காங்கிரசினதும், 'றுகு' வினதும் கோரிக்கைகளை நாம் ஆதரிக்கிறோம்.

19 வது திருத்தச் சட்டம் பற்றி இப்போது ஐ.தே.மு; யினர் மௌனமாக இருக்கின்றனர் என்றார். (க)

## பிரிட்டிஷ் எம். பிக்கள் யாழ்ப்பாணம் விஜயம்

(திருநெல்வேலி)
பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இன்று திங்கட் கிழமை யாழ். குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் குடா நாட்டின் நகர் பகுதிகளில் பாதிக்கப்பட்ட இடங்களையும்பார்வையிடவுளளனர்.

சாவகச்சேரி, வடமராட்சி' வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன் குடத்தனை, மணற்காடு ஆகிய இடங்களுக்குவிஜயம் செய்யவுள்ளனர்.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடமராட்சிப் பகுதிக்கு நேரடியாகவிஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும்; (க-43)

## பொலிஸாருக்கு தமிழ் கற்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)
பொலிஸாருககு தமிழ் மொழி கற்பிக்க தேசிய ஒருங்கிணைவு திட்டப்பிரிவு உத்தேசித்துள்ளது;

பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் இன்னல்களை கருத்தில் கொண்டே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் வி.ஐ மு ;லொக்குபண்டார தெரிவித்துள்ளார்:

வடக்கு- கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களிலே இப்பிரச்சினைகள் அதிகமாகவுள்ளன.

இதற்கமைய ஆரம்பகட்டமாக களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நாளை தமிழ் மொழி கற்பிக்கப்படவுள்ளது; (க-08)

## மட்டக்களப்பில் நேற்றும் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பிரதேசங்களில் நேற்று இரண்டாவது நாளாகவும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் மாவட்டத்தின் இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது;

அம்பாறை, காஞ்சிரம்குடா, திருகோணமலை போன்ற இடங்களில் 10 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களை கண்டித்தே, வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தால் நேற்று முன் தினம் ஹர்த்தால் நடத்தப்பட்டது. (க-08)

### மக்கள் சுதந்திரமாக வாழ

# நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதே விடுதலைப் புலிகளின் இலட்சியம்!

## வாழ்த்துச் செய்தியில் தலைவர் பிரபா

(கிளிநொச்சி)

**இருதசாப்தங்களாக நடைபெற்றுவந்த யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வந்து, நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதே தற்போதைய எனது இலட்சியம் ஆகும்.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ பெண்கள் எழுச்சி தின நிகழ்வினையொட்டி தலைவர் விடுத்துள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடிருப்பதாவது;

நாட்டுமக்கள் அனைவரும் சமாதானமாகவும், சுதந்திரமாகவும் வாழ்துவே எமது இயக்கத்தின் குறிக்கோள் ஆகும்.

எனவே, கடந்த காலங்களில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களை போலன்றி, இம்முறை அனுபவ ரீதியாகவும் ஆழ்ந்த சிந்தைகளுடனும் முன்னெடுத்துச் செலலப்படுகின்றது.

இப் பேச்சுவார்த்தைகள் கடந்த 8 மாதங்களாக கடைப்பிடித்துவரும் யுத்த நிறுத்தம் போல் இடையூறின்றி தொடருமானால் நிச்சயம் சமாதானச் சூழ்நிலை நிலவும் எனவும் தலைவர் பிரபாகரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழீழ பெண்கள் எழுச்சி தின நிகழ்வையொட்டி தலைவர் விடுத்துள்ள செய்தி சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் தலைவரின் உரையானது சர்வதேச மட்டத்தில் விடுதலைப்புலிகள் மீதான நல் அபிப்பிராயத்தை மேலும் வளர்க்க உறுதுணையாக அமையும் என்றும் தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முன் முயற்சிகளுக்கு மேலும் உத்வேகத்தை ஏற்படுத்தும் என்றும் சர்வதேச அரசியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-8)

### கரப்பந்தாட்ட

## போட்டிகள் இடைநிறுத்தம் சிறுப்பிட்டியில் சம்பவம்

(சுண்டுக்குளி)

சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையே கடந்த மாதம் 1ஆம் திகதி சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆதரவாளர்களுக்கு இடையே ஏற்பட்ட சர்ச்சை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இச்சர்ச்சை காரணமாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டசங்கம் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் கப்டன் டி. ஏ எம். குணசிங்கம் தலைமையில் அவர்களது பணிமனையில் கலந்துரையாடல் ஒன்றை நேற்று நடத்தியது.

கலந்துரையாடலின் இறுதியில் இரு கழகங்களுக்கு இடையே இருந்த பிணக்கு நீக்கப்பட்டுள்ளது. (க- 110)

### கிராமப்புறப் பிள்ளைகள்

# நகரப்புறப் பாடசாலைகளை நாடினால் கிராம பாடசாலைகளின் தரம் குறையும்

## கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கோப்பாய்)

பாடசாலை ஒன்றை மூடுவது சிறைச்சாலை ஒன்றைத் திறப்பதற்கு ஒப்பானதாகும் என்பது கல்வியியலாளர்களின் ஏகோபித்த முடிவு ஆகும்.

நீர்வேலி தெற்கு சி. த. க. பாடசாலையில் இடம்பெற்ற ஆசிரியர் தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. சிவஞானசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் தலைமையில்நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

புதிய கல்விச் சீர்திருத்தத் திற்கமைவாக மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகவிருந்தால் அயலிலுள்ள பாடசாலைகள் இரண்டு ஒன்றாக இணைக்கப்படும். எனவே கிராமத்துப் பிள்ளைகள் நகரப் பாடசாலைகளை நாடிச் சென்றால் கிராமத்துப் பாடசாலைகளின் தரம் குறையும் என்பதையும் மூடப்பட்ட பாடசாலையை மீண்டும் திறப்பது இலகுவான காரியமல்ல என்பதையும் இப் பகுதி மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாணவர் எண்ணிக்கை குறைந்த இந்நிலையிலும் 67% மான மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை பாராட்டத்தக்கது

இப்பாடசாலையில் எட்டாம் வகுப்புவரை மாணவர்கள் கல்வி பயின்றுள்ளதுடன் பழைய மாணவர்கள் பலர் உயர் அரச பதவிகளில் இருக்கின்றனர். பெற்றோர்களின் ஆர்வமின்மையால் வகுப்புகள் குறைக்கப்பட்டு பாடசாலையின் பலம் குன்றியுள்ளது. இது போன்றே இன்று பல கிராமத்துப் பாடசாலைகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. எனவே பெற்றோர்கள் கிராமத்துப் பாடசாலைகளில் நம்பிக்கை வைத்துத் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதன் மூலம் பாடசாலைகள் பலமடையும். அந்த நம்பிக்கையை இப்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் நிச்சயம் நிறைவேற்றித் தருவார்கள் என்பதை இவ்வருட புலமைப் பரிசில் பரீட்சையின் முடிவுகள் கட்டியம் கூறியுள்ளன என்றார். (க-79)

## உரும்பிராயில் கசிப்பு ஒழிப்பு

(உரும்பிராய்)

உரும்பிராய் மேற்குப் பகுதியில கசிப்பு ஒழிப்புவேட்டையில் நேற்று முன்தினம் ஈடுபட்ட உரும்பிராய்ப்பகுதி இளைஞர்கள அங்கிருந்து 50 பரல் கசிப்பைக் கைபபற்றினர்.

கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட பிரஸ்தாப குடும்பததினரை இளைஞர்கள் எச்சரித்ததுடன், கைப்பற்றிய கசிபபையும் நிலத்தில் ஊற்றி அழித்தனர்.

இளைஞர்களின் இவ் முன்மாதிரி நடவடிக்கையை அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டினர். (இ)

## வாணி விழா

(காரைநகர்)

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் இன்று வாணி விழா நடைபெறவுள்ளது.

சரஸ்வதி பூசையைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (க-246)

●

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் அம்பாள் கலைமன்றம் நடத்தும் வாணி விழா இன்று பி. ப. 4. 00 மணிக்கு பண்ணாகம் நெல்லியான் காளி கோயிலில் தலைவர் க. கலாரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ. கதிரமலைநாதன், சிறப்பு விருந்தினராக காரை எஸ். ஆதவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட நிகழ்ச்சிகளாக 'குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்களும் யுவதிகளும்' என்னும் தலைப்பில் வழக்காடு மன்றம், 'புயலுக்குள் சிக்கிய பூக்கள்' நாடகம், 'வளமாக வாழ வழி சமைப்போம்' கவியரங்கம் ஆகியன இடம்பெறவுள்ளன. (க-03)

## 75 ஆயிரம் இலங்கையர் இத்தாலியில் குடியேற்றம்

(கொழும்பு)

இத்தாலியில் சட்ட விரோதமாக குடியேறியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 75 ஆயிரத்தை அண்மித்துள்ளதாக இத்தாலிய குடிவரவு குடியகல்வு வட்டாரங்களை ஆதாரம் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசும் ஐரோப்பிய ஒன்றியமும் அண்மையில் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் படி, இந்த குடியேற்றவாசிகளை திருப்பி அனுப்புவதற்கு இத்தாலிய அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆனால், அந்நாட்டின் பல அமைப்புகள் காட்டிய தீவிர எதிர்ப்பை அடுத்து, இவர்களை திருப்பி அனுபபக்கூடாதெனவும், அவர்களுக்கு நிரந்தர வாழ்விடச் சட்ட அந்தஸ்து வழங்குமாறு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதற்கமைய கடந்தமாதம் 09 ஆம் திகதி இலங்கை குடியேற்ற வாசிகளுக்கு விஸா அனுமதிப்பத்திரம வழங்குவதென இத்தாலிய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இத்தாலிய அமைச்சரவையின இந்த தீர்மானத்தை உடன் அமுல் செய்வதில் அந்நாட்டிலுள்ள இலங்கை தூதரகம் நியாயமற்ற கொளகைகளை கடைப்பிடிப்பதாக இத்தாலியில் உள்ள இலங்கை அமைப்புகள் பல குற்றம் சாட்டியுள்ளன.

எனவே சட்டவிரோத குடியேற்ற வாசிகள் இத்தாலிய நாட்டின் விஸா அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொளவதற்கு, இலங்கையின் கடவுச் சீட்டுக்களை வழங்கும் அதிகாரத்தை கொண்ட

(2-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மாளிகையில் கண்காணிப்பு செயலகம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில்இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக உண்மைத் தகவல்களைத்திரட்டும் நோக்குடன் ஜனாதிபதி மாளிகையில் கண்காணிப்புச் செயலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு உடனுக்குடன் தகவல்களை அறிவிக்கும் பொறுப்பு இச் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

24 மணிநேரமும் செயற்படும் இச்செயலணிக்குழுவில் இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகள அங்கம்வகிப்பதாக செயலகம்விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-த)

## அரசாங்க ஊழியருக்கு விரைவில் சம்பள உயர்வு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அடுத்த ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில அரச ஊழியர்களின் சம்பள உயர்வு அறிவிக்கப்படும் என சுற்றுலாத் துறை அமைச்சர் காமினி லொக்குகே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பாக வாழ்க்கைச் செலவு மற்றும் சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுகள் ஆகியனதற்போது ஆராயப்பட்டு வருகின்றன.

இதேவேளை, அரசாங்க சேவை தேசிய தொழிற் சங்க சம்மேளனம் இவர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டும் அல்லது அதற்கீடாக குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் வழங்கவேண்டும்என அரசாங்கத்திடம்கோரிக்கை விடுத்துள்ளது. (க-8)

## இன்று கலைவிழா

(யாழ்ப்பாணம்)

அராலி அகாயக்குளம் விநாயகர் ஆலய இந்துமாமன்றத்தின் கலைவிழா இன்று பி. ப. 5.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். தொழில்நுட்பக்கல்லூரி அதிபரும் ஆலய அறங்காவலருமான சு. செந்தில்நாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் கலை நிகழ்வு, பேச்சுகள் பாராட்டு வைபவங்களும் இடம்பெற உள்ளன. (க-10)

# இன்று ஒரு தகவல்

## நாம் எந்த வகையினர்

வாழ்க்கையேவெறுத்துப்போய் விட்டது சார்!' என்று சொல்லிக் கொண்டே வந்தான் ஒருவன் ஏனப்பா இப்படிச் சொல்கிறாய்?என்றேன் நான் இந்த உலகத்துக்குத் தேவையே இல்லை சார்! என்றான்.இந்த உலகத்திலே தேவை இல்லாமல் எதுவுமே இல்லை!என்றேன்; என்னை நிமிர்ந்து பார்த்தான்,

இப்போது. . உன்உடம்பில் இருக்கிற காலை எடுத்து விடுவோமா?அதுஉனக்குத்தேவை இல்லை!என்றேன்.'அது எப்படி.. நடப்பதற்கு அது வேண்டாமா?என்றான். சரி... கையை எடுத்து விடுவோமா? என்றேன் அப்புறம் சாப்பிடுவது எப்படி?என்றான்.சரி... அப்படி என்றால் இப்போது உன் உடம்பில் தேவை இல்லாமல் அனாவசியமாக இருக்கிற ஒரு பகுதியைச் சொல்லு என்றேன்.அவன் யோசிக்கத் தொடங்கினான்.பின் மெதுவாகச் சொன்னான் எல்லாம் அவசியமாகத் தான் தோன்றுகிறது என்று·உனக்குஎல்லாம் அவசியம்.ஆனால்,நீ இந்த உலகத்துக்கு அவசியமில்லை. அப்படித்தானே. .?என்றேன் அவன் குழம்ப ஆரம்பித்தான்.

இன்றைக்கு நிறைய இளைஞர்கள் இப்படித்தான் தன்னிடம் என்ன இருக்கிறது என்பது தெரியாமலே தடுமாறுகிறார்கள்.அவர் யார் என்பது அவர்களுக்கே அடையாளம் தெரிவதில்லை·ஆடு, மாடுகளுர்க்குக் கூட அவைகளின் திறமை எது-என்பது அவைகளுக்குத் தெரிகிறது. நம்மால் எது முடியும்- எது முடியாது என்பது அவற்றிற்கு நன்றாகத்தெரிகிறது. விலங்குகள் எல்லாம் பறவைகள மாதிரி விண்ணில்பறக்கவேண்டும் என்று ஆசைப்படுவதில்லை!

ஒருமனிதனிடம் என்ன திறமை இருக்கிறது என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? இந்த உலகத்தில் இருக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும்ஒரு தனித்தன்மை உண்டு. ஒருவர் மாதிரி இன்னொருவர் இருப்பதில்லை.

ஆனாலும் உளவியல் நிபுணர்கள் மனிதர்களின் குணாதிசயங்களை வைத்து அவர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். அதாவது மூன்று வகை மனிதர்கள். சிலர் எப்படியென்றால் ... தான் சம்பந்தப்பட்ட வேலையோடு இருந்து விடுவதில்லை. எதிரே இருக்கிறவர்கள் செய்கிற வேலை ... இன்னொரு பிரிவில் இருக்கிறவர்கள் செய்கிறவேலை- எல்லாவற்றிலும் தலையிடுவார்கள். மனோதத்துவத்தில் இதற்கு Domimance என்று பெயர், இப்படிப்பட்ட குணாதிசயம் உள்ளவர்கள் எதற்குப் பொருத்தம் தெரியுமா? ஒரு நிறுவனத்தைத் தலைமை ஏற்று நடத்துவது ... நிர்வாகப் பொறுப்பு வகிப்பது ... இது மாதிரிப் பணிகளுக்கெல்லாம் இவர்கள் மிகவும பொருத்தமாக இருப்பார்கள்.

இரண்டாவது வகை மனிதர்கள் எப்படித் தெரியுமா? இவர்கள் இனிமையாகப் பேசுவார்கள் திறமையாகப் பேசுவார்கள். அடுத்தவர்களோடு பேசுவதற்கும் ஆசைப் படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாரும் விற்பனைத் துறையில் வேலைபார்ப்பதற்குப் பொருத்தமானவர்கள்.

மூன்றாவது வகை மனிதர்கள் எப்படி என்றால் ...இவர்களுக்குப் பகுத்துணரும் ஆற்றல் உண்டு. உறுதிப்பாடு உண்டு. அடுத்தவர்களோடு அதிகம் பேசமாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் ... நாலுபேரோடு பேசுவதே இவர்களுக்குப் பிடிக்காது செய்கிறவேலையை நுணுக்கமாகச் செய்வார்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி ... அது சம்பந்தமாக எல்லா விபரங்களையும் சேகரிப்பார்கள்! இந்தவகை மனிதர்களுக்கு ஆராய்ச்சிவேலை ... கணக்காளர் வேலை. இது போன்ற பொறுப்புகளைக் கொடுக்கலாம்.

ஒவ்வொரு மனிதனையுமே கொஞ்சம் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். அவனுக்குள்ளே இந்த மூன்று விதமான திறமைகளும் உண்டு. எது அதிகம்- எது குறைவு என்பதில் தான் வித்தியாசம். நாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் சுயமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.நாம் எந்த வகை என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும் இப்போது. சொல்லப்பட்ட மூன்று குணங்களுமே ஆளுமைசம்பந்த 'பட்டவை. இதில் ஒருவனுடைய இயல்பு திறமைஆகியவைகள் அடங்கா இவையெல்லாம்தனி இவற்றையார் நினைத்தாலும் முறையான பயிற்சிகள் மூலமாக வளர்த்துக்கொள்ளலாம் முன்னர் சொன்னது போல... நாம் எந்தவகை ஆள் என்பதைப்புரிந்து கொண்டு, அதற்குத் தகுந்த மாதிரி ஒரு வேலையைத் தேடிக் கொண்டால் வாழ்க்கநல்லவிதமாக அமையும். நான் இந்த உலகத்துக்குத் தேவை இல்லை என்று சொல்ல வேண்டிய அவசியம் வராது.

கணக்காளர்வேலைக்குநேர் முகத்தேர்வு நடந்தது ஒருவர் வந்தார் அவரிடம்8×3என்ன என்று கேட்டார்கள்.அவர்23 என்றார். 'சரி...போ' என்று சொல்லி விட்டார்கள். அவர் வெளியே வந்ததும் யோசனை பண்ணினார். 'அடடா! 8X3=24 என்று சொல்வதற்குப்பதிலாக 23என்றுசொல்லி விட்டோமே...இந்தச் சின்னக் கணக்குக் கூட நமக்குத்தெரியவில்லை என்று நினைத்திருப்பார்களே! நிச்சயமாக நமக்கு இந்த வேலை கிடைக்காது' என்று முடிவு செய்துகொண்டு போய் விட்டார்.

ஆனால் பத்தாவது நாள் அவருக்கு நியமனக் கட்டளை வந்து விட்டது. வேலையில் உடனே வந்து சேர்ந்து கொள்ளுங்கள் என்று. 'சரி...ஏதோ தவறுதலாகப் போட்டு விட்டார்கள். நாம் எதையும் வெளியே சொல்லிக் கொள்ள வேண்டாம். என்று இவரும் 'கம்' மென்று போய் வேலையில் சேர்ந்து கொண்டார். வெகுநாள் கழித்து வேலை நிரந்தரம் ஆனது மெதுவாக மனேஜரிடம் உண்மையைச் சொன்னார்.

'சார்! நேர்முகத் தேர்வில் 8X3 என்னவென்றுஒருகேள்வி கேட்டீர்கள். நான் தவறுதலாக 23 என்று சொல்லிவிட்டேன். நீங்களும் தவறுதலாக எனக்கே நியமனக் கடிதம் அனுப்பி விட்டீர்கள்' என்றார். மனேஜர், அன்றைக்கு நேர்முகத் தேர்வுக்குவந்தஅத்தனை பேரிடமும் இந்தக் கேள்வியைக் கேட்டோம். அதாவது 8X3 என்ன என்று கேட்டோம். அத்தனைபேர் சொன்னதிலும் நீங்கள் சொன்னபதில் தான் கிட்டத்தட்டச் சரியானபதிலாகஇருந்தது. அதனாலேதான் உங்களுக்கு இந்த வேலை கிடைத்தது என்று சொன்னார் மனேஜர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# திருமலை வன்முறைச் சம்பவத்தில் நாற்பது பேர் ஆஸ்பத்திரியில்

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் காயமடைந்த 40 பேர் தற்போதும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை காயமடைந்த ஒருவருக்கு வயிற்றுப் பகுதியில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

# இரரசி பலன்

14-10-2002
(புரட்டாதி 28, திங்கள்)
நவமி பி இ 4.19 வரை
உத்தராடம் மாலை6 49வரை
இராகுகாலம் 7 32- 9 02
நல்லநேரம்- 12.02- 1.32
மகாநவமி விரதம்
சரஸ்வதி பூசை

**மேடம்**
தூரதேசச்செய்தி,தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், சுபநிகழ்வு.

**இடபம்**
புதிய திட்டமிடல், அச்சமான நிலை, உடல்உழைப்பு, ஆன்றோர் மதிப்பு.

**மிதுனம்**
எதிர்பாராத அச்சம்,உடல் உபாதை, காரிய தாமதம், திருடர் பயம்;

**கடகம்**
அபூர்வ சந்திப்பு, களஸ்திர நன்மை, சகோதரர் உதவி, காரிய நன்மை;

**சிங்கம்**
சுகவாழ்வு, சத்துருஜெயம், திடீர்பயணம், செய் தொழில் விருத்தி.

**கன்னி**
வியாபார நன்மை, மனச் சஞ்சலம்,புத்திரரால் கவலை, கௌரவக் குறைவு.

**துலாம்**
ரோகபயம், தாய்வழி உறவு, அபகீர்த்தி,காரியதாமதம்.

**விருச்சிகம்**
இனிய அனுபவம், அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை;

**தனுசு**
செல்வாக்கு குறைவு, மாதர் நட்பு, பணச் செலவு, நிலை மாற்றம்.

**மகரம்**
ஆழ்ந்த சிந்தை, கலந்துரையாடல், முயற்சி பலிதம், போசன சுகம்;

**கும்பம்**
உணர்ச்சி வசப்படல், தொழில் கஷ்டம், சயனசுகக் குறைவு, சுபசெலவு;

**மீனம்**
பொருள் சேர்க்கை, குடும்ப சுகம், காரிய சித்தி, பெருமையடைதல்,

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

## மர்மப் பொருள் வெடித்ததில் கை சிதறியது

(யாழ்ப்பாணம்)

மர்மப்பொருள் ஒன்றை எடுத்துக் கையாளமுற்பட்ட போது அது வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் வலது உள்ளங்கை சிதறிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் வரணி குடமியனைச் சேர்ந்த ஆறுமுகம் நடராஜா (வயது 39) என்பவரே படுகாயம் அடைந்தவராவார்.

(த)

## தேசிய மரம் நடுகை நாளை முதல் அனுட்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மரம் நடுகை தினம் நாளை முதல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் வரை அனுட்டிக்கப்படவுள்ளதாக சூழல் இயற்கை வளங்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

சூழல் பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் தேசிய மரங்களை நாட்டி நாட்டினை சோலைகளாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் சூழல் இயற்கைவள அமைச்சு தெரிவித்துள்ளது.

(க-10)

## கோண்டாவில் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணையை மூடுமாறு நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் கோண்டாவில் பகுதியில் நடத்தி வரும் கள்ளுத் தவறணையை உடனடியாக மூடி விடுமாறு கோண்டாவில் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க முகாமையாளருக்கு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தகள்ளுத் தவறணைக்கு அண்மையில் ஆலயம் உள்ளதால் இங்கு வழிபாட்டிற்கு வரும் பக்தர்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதாக நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டதை அடுத்தே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த உத்தரவுப்படி கள்ளுத் தவறணை மூடப்பட்டுள்ளதா என்பதனை பார்வையிட்டு நீதிமன்றத்திற்கு தெரிவிக்குமாறு நல்லூர் பிரதேச செயலருக்கு நீதி மன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5,7)

## முஸ்லிம் எம். பிக்களின் பாராளுமன்ற பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 9 உறுப்பினர்களும் தமது பாராளுமன்ற பகிஷ்கரிப்பை கைவிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல்பீடம் கடந்த வியாழக்கிழமை இரவு துறைமுக அபிவிருத்தி கப்பல்துறை அமைச்சு அலுவலகத்தில் நடாத்திய கலந்துரையாடலை அடுத்தே இவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலின் போதே வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தமதுபகிஷ்ரிப்பை கைவிடப்போவதாக அறிவித்திருந்தார்.

வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர்கடந்தவெள்ளிக்கிழமை மீண்டும்நாடாளுமன்றத்துக்கு சமுகமளித்து அங்கு பெற்றோலிய உற்பத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்திற்கு அரசாங்கம் சார்பாக வாக்களித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடுத்த கட்ட அமர்வுகளின்போது பாராளுமன்றம் செல்வார்களென அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## வடக்கு-கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்ற நீண்ட காலம் பிடிக்கும்

### கலோற்றஸ் நிறுவன முகாமையாளர்தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகளை அகற்றுவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்று கலோற்றஸ் நிறுவன முகாமையாளர் றிச்சர்ட் பெனஸ்ரர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இதுவரை 2500 க்கும் அதிகமான வெடிப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், உரும்பிராய்ப் பகுதியில் அண்மையில், பெருமளவு கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பினர் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளிலும் கண்ணிவெடிஅகற்றும்பணிகளைமேற்கொண்டுள்ளனர். (உ)

## காஞ்சிரம் குடா பகுதியில் வயலுக்கு சென்றவர்கள் வீடு திரும்பவில்லை

(அம்பாறை)

அம்பாறை காஞ்சிரம்குடா முகாம் ஊடாக வயல் வேலைக்குச் சென்ற சிலர்இது வரை வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை வயல் வேலைகளுக்காக சென்றவர்கள் நேற்றுவரைவீடு திரும்பவில்லையெனக் கூறப்படுகிறது.

காணாமல் போனவர்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (ம)

## மலேசியாவில் கூட்டணி வெற்றி

(கோலாலம்பூர்)

மலேசியாவில் இடம்பெற்ற இடைக்காலத் தேர்தலில் பிரதமர் மகதீர் முகமட்டின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

சீனவம்சவளியினர் அதிகமாக வாழும் பிராந்தியத்தில் இத்தேர்தல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சு-02)

# பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் முஷாரப் ஆதரவுக் கட்சி முதலிடத்தில்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் தலிபான் ஆதரவைப் பெற்ற கூட்டணி கணிசமான இடங்களில் வெற்றி பெற்றிருப்பது அந்நாட்டின் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமாக வுள்ள 272 தொகுதிகளில் 266 தொகுதிகளிற்கு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முஷாரப் ஆதரவுபெற்ற பாகிஸ்தான் முஸ்லிம்லீக் ஹாய்த அஸாம் கட்சி 77 இடங்களை வென்று முதலிடத்திலுள்ளது.

இதற்கடுத்தபடியாக பெனார்சிக் தொகுதி மக்கள் கட்சி 62 இடங்களைப் பெற்றிருக்கின்றது

எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், புதிய ஆட்சி யார் அமைப்பது எனப் பல்வேறு யூகங்கள் நிலவுகின்றன.

இந்தேர்தலில் தலிபான் ஆதரவு பெற்ற மஜ்லிஸ்ஏ சுமால் கூட்டணி 49 இடத்தைப்பெற்று 3 வது பெரும் கட்சியாக உருவெடுத்திருப்பதும், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் பலகிஸ்தான் மாகாணத்தையும் இக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இதன் காரணமாக பாகிஸ்தான் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விடுமெனவும், தீவிரவாதத்திற்கெதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளிற்கு, பாகிஸ்தான் அளித்துவரும் ஆதரவும், இதனால் பாதித்து விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், புதிய அரசை அமைப்பதற்கு, அதிபர் முஷாரப்பிற்கு ஒத்துழைப்புத்தர பாகிஸ்தான் மக்கள் கட்சி தயாராகவுள்ளதாக கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான பெனாஸிர் பூட்டோ லண்டனில் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். (சு-2)

# தேர்தல் முடிவுகள் பற்றி பிரதமர் வாஜ்பாய் கருத்து

பாகிஸ்தானில் இடம்பெற்ற தேர்தல் முடிவுகளின்மூலம் தெற்காசியாவில் தீவிரவாதம் மோசமானநிலைக்குச் செல்லாதுஎன்றுதான் நம்புவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

எனினும் பாகிஸ்தானில் இடம்பெற்ற தேர்தல்முடிவுகள் அந்நாட்டின் ஜனநாயகம் முழுமையாக நிலைநிறுத்தப்படவில்லைஎன்பதை வெளிப்படுத்தியுள்ளதாக இந்தியா கூறுகின்றது.

இதேவேளை, பாகிஸ்தானின் தேர்தல்முடிவுகள், அதன் விளைவுகள்தொடர்பாக, இந்தியப்பிரதமர் வாஜ்பாய், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயருடன் ஆலோசனை நடத்தியிருக்கின்றார்என்பது குறிப்பிடத்தக்கது. (சு-04)

## எண்ணங்களால்.

சென்னைக்கு இவர் விஜயம் செய்த போது தான், அவர் கருத்துக்கள். ஒரு வடிவம் பெற்றதாக ஒரு சமயம் அவர் கூறினார் இவருக்கு வாய்த்த சீடர்கள்புகழ் பெற்றவர்கள். பீட்டில்ஸ் ஷர்லிமேக்லேன், மிய பாரோ போன்ற புகழ் பெற்ற இசையாளர்களாலும், நடிகைகளாலும், மகேஷ் யோகியார் என்றும் அவரதுதியானதத்துவம்பற்றியும் முதன் முறையாக மக்கள் டெலிவிஷன் மூலம் அறிந்து கொண்டார்கள், பின்னால் ஹரே கிருஷ்ண, ஹரேராம் என்று சைதன்யரின் தத்துவம் கல்லூரிகளையும், அமெரிக்க வாழ்வையும் தொட்டது. அடுத்து பதினாறு வயதான இந்தியத்துறவி பாலகுருவின் தெய்வீகக் கழகத்தின் மூலம், பல்லயிரக்கணக்கான மக்கள் இந்தியாவின் மனத்தத்துவங்களைப் பற்றி அறிந்து கொண்டார்கள்.

இத்தனை நாளும் நம் யோகிகளை மந்திரக்காரர்கள் என்றும், மாயஜாலவித்தை செய்பவர்கள் என்றும் கருதி வந்த மேனாடுகள், இன்று மனோதத்துவ ஆராய்ச்சிநூல்களில்நமதுயோகமுறைகளைக் கிழக்கத்திய மனோதத்துவம் என்று எழுதுகின்றன. இந்த மகத்தான மாறுதலுக்கு பல காரணங்கள் உண்டு, இத்தனை நாள வரை மேனாட்டு விஞ்ஞானம் நமது உடல்இயக்கங்களைப் பற்றி விவரிக்கும் போது தசைகளை இயங்கு தசை என்றும் இயக்குதசை என்றும் இரு பிரிவாகக் கருதியது அதாவது கை,கால், கண் முதலிய உறுப்புகளின் இயக்கம் நமது கைகளுக்குள் இருக்கின்றது என்றும் நமது இதயம் இரத்த ஓட்டம், நுரையீரல் முதலியவற்றின் இயக்கம் தானே இயங்குவது என்றும் மனித இயக்கத்துக்குஅப்பாற்பட்டது என்றும் போதித்து வந்தது நாமும் இந்தியாவில் இப்படித்தான் விஞ்ஞானத்தை போதித்து வருகின்றோம்.

### ராமயோகியார் சோதனைக்குள்ளானார்

ஆனால் சில ஆண்டுகளுக்கு முன், இந்திய நாட்டிலிருந்து ராமயோகி என்பவர் இங்கு வந்தார், மெனிங்கல் ஆராய்ச்சிக் கூடத்தில் விஞ்ஞானச் சோதனைகளுக்கு உட்பட அவர் இசைந்தார். விஞ்ஞானிகளின் முன்னிலையில் தமது வலது கையின் சுண்டுவிரலின் உஷ்ண நிலையைசுமார் 12 டிகிரிக்கு உயர்த்தினார் அதாவது இடதுகையின் உஷ்ண நிலைக்கும் வலது கையின் உஷ்ண நிலைக்கும் சுமார் 12 டிகிரி வித்தியாசமிருந்தது. விஞ்ஞானிகள் அவரைப் பல பரிசோதனைகளுக்கு உட்படுத்தினர் தமது இதயத்தை 17 விநாடிகள் அவர் நிறுத்திக்காட்டினார்.

எல்லாவற்றையும் மன எண்ணங்களின் மூலமும் மனக்கட்டுப் பாட்டின் மூலமும் விளைந்த யோகசாதனையால் அவர் சாதித்தார். உடல் வளர்ச்சிக்கான யோக முறைகளைஆசனங்கள்என்கிறோம். மனவளர்ச்சிக்கான முறைகளைத்தியானம் என்கிறோம். மனத்தின்சக்தி அபாரமானது மகரிஷி மகேஷ் யோகி ''எண்ணங்கள், எங்கே பிறக்கின்றனவோ, அந்த இடத்தை நிசப்தப் படுத்தும் போதும் நம்மை நாமே அறிந்து கொள்ள முடியும்'' என்று கூறினார். நமது யோகசாதனைகளின் விளைவாக, விஞ்ஞானமே இன்று மாற்றி எழுதப்படுகிறது. மனிதன்- மேனாட்டு விஞ்ஞானி- இத்தனை நாள் எதை இயங்கு தசை என்று எண்ணிவந்தானோ அவை- உண்மையில் இயக்கு தசை தான் என்று எண்ணும் போது, மேனாட்டு விஞ்ஞானக் கருத்துக்களே மாறுகின்றன.

### எண்ணங்களைக் கட்டுப்படுத்த பயிற்சி

இப்படித் தசைகளைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்வதன் மூலம் இதர நோய்களை, வயிற்றுப் புண்களை, ஈரல் நோய்களைக் குணப்படுத்தமுடியும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். யோகிகள் எண்ணங்கள் மூலம்- மனத்தின் மூலம்-விஷயங்களை அணுகுகிறார்கள். இப்போது விஞ்ஞானிகள், எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாதவர்களுக்கு சில பயிற்சிகள் மூலம் இதயத்தைக் கட்டுப்படுத்தும் பயிற்சியை மனித இயல்பாக- பழக்கமாக மாற்ற முனைந்திருக்கிறார்கள். அதன்படி சில எலிகளின் இதய ஓட்டத்தைச் சிறு கருவிகளால்குறைக்கிறார்கள். அப்படிக் குறைக்கும் போது, நல்ல மகிழ்ச்சி தரும் உணவை எலிக்கு வழங்குகிறார்கள். இப்படித் திரும்பத் திரும்பச் செய்தபின் நல்லுணவு பெறும்போது எலியின் இதயம் தானே மெதுவாகத் துடிக்கத் துவங்குகிறது. இதன் மூலம் உணவு வரும் போது இதயம் மெதுவாகத் துடிக்க வேண்டும் என்ற எண்ணம் எலியின் மனதில் பதிய வைக்கப்படுகிறது. பின் உணவைக் கண்டவுடன் இதயம் மெதுவாகத் துடிப்பது பழக்கமாகி விடுகிறது.

இதேபோல் மனித இதயத்தையும், வயிற்றுத் தசைகளையும், பிற இயங்கு தசைகளையும் நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதன் மூலம், உள்ளே ஏற்படும் நோய்களைக் குறைக்க முடியும் என்று கண்டார்கள். நினைவில் கொள்ளுங்கள் நமது பழம்பெரும் யோக தத்துவங்கள் இன்று கிழக்கத்திய மனத்தத்துவம் என்று பேசப்பட்டு ஆராயப்படுகின்றன. □

# உலக தரிசனம்

# இந்தோனேசியாவில் குண்டு வெடிப்பு

## 200 பேர் பலி; பலர் படுகாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் வெயில் தீவில் இரவுநேர கேளிக்கை விடுதிகளில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் வெளிநாட்டு உல்லாசபயணிகள் உட்பட சுமார் 200பேர்வரை கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இக் குண்டுவெடிப்பு சம்பவம் பயங்கரவாதத்தின் மீதானயுத்தம்தொடரவேண்டும் என்பதைஎடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது என அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட் கூறியுள்ளார்.

இந்தோனேசிய ஜனாதிபதி மேகவதிசுகர்னோபுத்ரியுடன் தொலைபேசியில் பேசியயோதே அவுஸ்திரேலிய பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

இக்குண்டுவெடிப்புச் சம்பவம் ஒரு பயங்கரவாதசெயல் என அமெரிக்காவும் கூறியுள்ளது. அவுஸ்திரேலியா, பிரிட்டன பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் சுவிடனைச் சேர்ந்த வெளிநாட்டு உல்லாசப்பயணிகளே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டதாகஇந்தோனேசிய பொலிஸார் தெரிவித்தனர். (சு-02)

# சிம்பாவேயிற்கு எதிராக பொருளாதாரத் தடை

### மேற்கொள்ளப் போவதாக அவு. அறிவிப்பு

(ஹாரரே)

சிம்பாவேயிற்கு எதிராகப் பொருளாதாரத்தடைஉட்பட ஏனைய தடைகளையும் மேற்கொள்ளப் போவதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

சிம்பாவேயில் இடம்பெறும் பல்வேறு விடயங்களைக் கருத்திற் கொண்டே இம் முடிவை அவுஸ்திரேலியா எடுத்திருப்பதாக, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அலெக்சாந்தர் டொனால் தெரிவித்துள்ளார்.

இத் தீர்மானத்திற்கமைய சிம்பாவே ஜனாதிபதி றொபேட்முகாபே, அமைச்சர்கள் உட்பட 77பேர் அவுஸ்திரேலியாவிற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

இவர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் அவுஸ்திரேலியாவிற்குள் இருப்பின் அவை முடக்கப்படும் என்றும்அலெக்சாந்தர் டொனால் தெரிவித்துள்ளார். (04)

# ஐவரிக் கோஸ்டில் அரசு-தீவிரவாதிகளுக்கு இடையில் கடும் மோதல்

(அபிட்ஜான்)

ஐவரிக் கோஸ்டின் டலகா நகருக்கருகே மிகவும் உக்கிரமான துப்பாக்கி மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

மேற்கு ஆபிரிக்க சமாதானத் தூதுவர், ஐவரிக் கோஸ்ட் அரசிற்கும் அந்நாட்டு தீவிரவாதிகளுக்கிடையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த முனைந்த வேளையிலேயே இம் மோதல்கள் வெடித்துள்ளன.

இதேவேளை, தற்போது இடம் பெறும் இம் மோதல்கள் குறித்து, கருத்துத் தெரிவித்த ஐவரிக் கோஸ்ட், இராணுவம் இது வரை முன்வரவில்லை என ஐவரிக் கோஸ்ட் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க, ஐவரிக் கோஸ்டின் பாதுகாப்பு அமைச்சர் மாய்ஸ் லீடாவை அந்நாட்டு அரசு பதவி நீக்கியிருந்தமையும்,

இருதரப்பினருக்கு மிடையில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சித்த வேளையில், இரண்டாவதுதடவையாகவும் மோதல்கள் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-04)

# காஸாப் பகுதியில் இளைஞர் ஒருவர் பலி

(ரெல்அவிவ்)

பலஸ்தீன காஸாப்பகுதியில் இஸ்ரேலியத் துருப்பினர்கள் கடும் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றனர்.

இதன் போது இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்துல் பலஸ்தீன இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பெரும் எண்ணிக்கையான இஸ்ரேலியத் தாங்கிகளும் இத்தேடுதலின் போது பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-02)

## காஷ்மீரில் பயங்கரவாதி பலி

(காஷ்மீர்)

ஜம்முகாஷ்மீரின் மாறாம் புல்லா, மாவட்டத்தின் ஹவாயா பாத்திலுள்ள மருத்துவமனையில் பதுங்கியிருந்த பயங்கரவாதியுடன், பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட 20 மணிநேர போராட்டம் நேற்றுக்காலை அப்பயங்கரவாதியின் மரணத்துடன் முடிவடைந்தது.

இறந்த பயங்கரவாதி அப்துல் அஹத் வெளிநாட்டவர் என்றும் நேற்று முன்தினம் பாதுகாப்பு படையினருடன் ஏற்பட்ட சிறு மோதலிற்கு பின்பு மருத்துவமனைக்குள் சென்று பதுங்கிக்கொண்டதாகவும் அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சு-2)

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு
குறள்

# வலம்புரி

## மக்கள் சேவை எங்கே?

அரச- தனியார் ஸ்தாபனங்களில் கடமையாற்றுபவர்களின் அடிப்படை நோக்கம் மக்கள் சேவையாகவே இருக்க வேண்டும். அதனால்தான் இலாப நோக்குடைய வர்த்தகத்தைக்கூட 'வர்த்தகசேவை' என்று உலகம் வகுத்துள்ளது. வர்த்தகத்தில் இலாபம் வெளிப்படையாக மிளிர்கிறபோதிலும் ஏதோவொரு வகையில் அது நுகர்வோரின் தேவையை நிறைவு செய்யும் சேவையாக அமைகிறதென்பதை மறந்துவிட முடியாது.

எனினும் இத்தகைய சேவை மனப்பாங்கு அரச தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களிடம் உண்டா ?

உதாரணமாக அண்மையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் சாலை சாரதிகள் நடத்துநர்களுக்கும் தனியார் மினிபஸ் சாரதிகள் நடத்துநர்களுக்குமிடையே யாழ் நகரமையத்தில் பெரும் கோஷ்டி மோதல் இடம் பெற்றது. பொறுப்பற்ற முறையில் இருதரப்பினரும் நடந்து கொண்டனர். இதனால் பாதிக்கப்படுபவர்கள் பொது மக்கள்- மாணவர்கள் என்பதை இருதரப்பும் உணர்ந்து கொள்வதாக இல்லை. அதேநேரம் தனியார் பஸ் சேவையாளர்கள் வடபிராந்திய போக்குவரத்து சபை சாரதி நடத்துநர்களுக்குத் தண்டனை கொடுக்கும் அதிகாரிகள் போல நடந்து கொள்வதும் நிலைமை அடிக்கடி மோசமடைவதற்குக் காரணமாக உள்ளது.

இது ஒருபுறமிருக்க சாரதி நடத்துநர்கள் தாக்கப்பட்டுவிட்டார்கள் என்றவுடன் பகிஷ்கரிப்பில் ஈடுபடும் பஸ் சாரதிகள் நடத்துநர்களின் பொறுப்பற்ற தன்மை மிகவும் கண்டனத்துக்குரியது. தாக்கப்பட்டவர்- தாக்கியவர் இருதரப்பும் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதை விடுத்து பயண சேவையை உடனடியாக தடை செய்வது அவர்களின் சுயநலப் போக்கையே சுட்டி நிற்கிறது.

இதற்கு மேலாக வீடு எரிக்கும் ராசாவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரிகளாக ஒட்டோ சேவையாளர்கள் இருந்து கோஷ்டி மோதலைத்தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது யாழ்ப்பாணத்தின் சாபக்கேடாக அமைந்துள்ளது

# முச்சக்தி வழிபாட்டிற்குச் சிறந்தது நவராத்திரி

# சுயநலமற்ற சேவை தெய்வ வழிபாடாகின்றது

சைவப்புலவர்

**செ. கந்தசத்தியதாசன்**



மனிதன் தெய்வத் தன்மை அடையும் திறமையே மனிதனை மற்றெல்லா உயிர்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. இது சைவர்களின் அடிப்படைக் கொள்கை, சுயநலமற்ற சேவை தெய்வவழி பாடாகின்றது. அதுதான் மானிடதர்மம் அகிம்சை சத்தியம் அன்பு, கருணை முதலாம் அறநெறிகளைப் பின்பற்றினால் தெய்வீக வாழ்க்கைக்கு அது ஒருவனை அழைத்துச் செல்லும். இதற்குப் பகுத்தறிவு அவசியமாகின்றது. மனிதத்தன்மையிலிருந்து மேலான தன்மை பெற பேரறிவுவேண்டும். இதற்குப் பேராற்றல் வேண்டும். பேரறிவும் பேராற்றலும் எவன் பெறுகின்றானோ அவனே இம்மையிலும் மறுமையிலும் வாழத்தகுதியுடையவன்.

### முச்சக்தி வழிபாடு

இகம், பரம் ஆகிய இரண்டையும் உள்ளபடி அறிவதே பேரறிவு. மனிதனைத் தேவனாக்கி, தேவனில் நின்றும் மகாதேவனாக்கிக் கொள்வது பேரறிவு. இத்தகைய பேரறிவுக்குச் செலுத்தும் அன்பே தெய்வவழிபாடு. சைவர்கள் மனிதனின் தேவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தெய்வங்களை வழிபடுகிறார்கள்.

அறிவுத்தத்துவம் சரஸ்வதியாக இருக்க ஆற்றலின் தத்துவமாக விளங்குபவள் துர்க்கை. ஆற்றல் என்றால் உடற்பலத்தையே குறிக்கின்றது. சுவர் இருந்தாலே சித்திரம் வரையலாம், அதேபோல் உடல் ஆற்றலோடு நோய் நொடியின்றி, ஆரோக்கியமாக இருக்க நாம் துர்க்கையை பூசிக்கின்றோம். வழிபடுகின்றோம். வீரம் என்பது உண்மையில் வீரியத்தைக் குறிக்கின்றது வீரியமானவன் தான். சகலவேலைகளிலும் ஈடுபடுகின்றான். அவனாலேயே உழைக்கமுடியும். அவனாலேயே கற்கமுடியும். எனவே, மனிதனுக்கு அவசியமான செல்வத்தைப் பெறுவதற்கும், கலையறிவைப் பெறுவதற்கும் துர்க்கை வழிபாடு இன்றியமையாதது. எனவேதான் முதலில் துர்க்கைக்கு பூசை செய்கின்றோம். மேலும் துக்கம் இருந்தால் வாழ்க்கையில் எல்லாமே போய்விடும். இந்தத் துக்கத்தைப் போக்குபவளும் துர்க்கையே. அவள் துக்க நிவாரணி. துக்கத்தை நீக்குபவள்.

துர்க்கை உடம்பெங்கும் இருக்க செல்வத்துக்கு அதிபதியாகிய இலட்சுமி மனதிலே அதாவது நெஞ்சிலே இருக்கின்றாள். மனமதான் தனக்கு வேண்டிய செல்வங்களை நினைக்கின்றது. அதே வேளை செல்வம் போதும் என்று திருப்தியும் படுகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் மனத்தில் மகாலட்சுமியை நிலைநிறுத்திவிட்டால் அவரது செல்வ வளம் சிறந்து விளங்கும். அவள் அட்ட லட்சுமியாக இருந்து அட்ட ஐஸ்வர்யங்களையும் தருவாள்.

இவை யிரண்டுமிருந்தால் தான் அறிவைப்பெறமுடியும், கலையை வளர்க்க முடியும். எனவேதான் இலட்சுமி பூஜையின் பின்னர் சரஸ்வதி பூஜை நடைபெறுகிறது. சரஸ்வதி நாக்கில் உறைபவள். சரஸ்வதியை நாக்கில் இருத்தி விட்டால் அறிவு நடமாடும். குமரகுருபரர், சுவாமி விவேகானந்தர் போன்ற பலர் சரஸ்வதியை தம் நாவில் குடியிருத்தினர். இதையே 'மண் கண்ட வெண்குடைக் கீழாக மேம்பட்ட மன்னரும் என் பண் கண்டளவில் பணியச் செய்வாய்' என்கின்றார். மேலும் நாம் சரஸ்வதிக்கு அடிமையாக இருந்து அன்பு பூண்டுவாழ்ந்தால் சொல்விற்பன்னமும் கவி சொல்ல வல்ல திறமும், கலைகளும் நமக்குக் கிடைக்கும். இதுமட்டுமா? பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும் தரக் கூடியவள் சரஸ்வதியே. அதனாலேயே கையில் வீணை, ஏடு, உருத்திராட்ச மாலைகளைத் தாங்கியிருக்கின்றாள்.

### கும்பம் மனிதனின் வடிவம்

கும்பம் மனிதனின் உடலுக்குச் சமானம். எனவே தான் நவராத்திரி காலத்தில் கும்பம் வைத்து சக்தியை ஆவாகணம் பண்ணி ஒன்பது இராத்திரிகள் பூஜையாற்றுகின்றோம். மகா நவமியில் வழிபாடு மட்டுமே. வேறு எக் கருமமோ, தொழிலோ செய்யக் கூடாது. நம் ஆயுதங்களைக்கூட பூஜையில்வைத்து முழு வழிபாடாற்றியவுடன் விஜயதசமியாகிய வெற்றி நாளாம் பத்தாம் நாளில் ஆயுதத்தை எடுத்து தொழில் செய்தல், புத்தகங்களை எடுத்துப் படித்தல் நற்பயனைத் தரும். இதனாலேயே ஏடு தொடக்குதல், கலைகளைப் பயிலத் தொடங்குதல் விஜய தசமியன்று நடத்தப்படுகிறது. இப்புண்ணிய காலத்தில் தூய அன்போடு முச்சக்திகளையும் போற்றி வழிபட்டு மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து முத்தி பெறுவோமாக.

# எண்ணங்களால் இதயத்தைக் கட்டுப்படுத்தி உள்ளே உருவாகும் நோயைக் குணமாக்கலாம்

**டாக்டர்**

**எம். எஸ். உதயமூர்த்தி**

நமது தமிழ்ப்பண்பாடு சொல்கிறது: 'நல்லார் ஒருவர் உளரேல், அவர்பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை' என்று. நமதுநாட்டு யோகிகளும் ரமணர் சங்கரர் ஞானசம்பந்தர் போன்றவர்களும் தங்களுக்காக வாழ்ந்ததில்லை. துயரத்துடன் வந்தோருக்கு ஆறுதலையும், நோயுடன் துன்பப்படுகிறவர்களுக்கு நிவர்த்தியையும் சஞ்சலத்துடன் வருபவர்களுக்கு நிம்மதியையும் வழங்கிக்கொண்டிருந்தவர்கள் அவர்கள்.

### எண்ணங்கள் சாவதில்லை

எண்ணங்களின் சக்தி நம்மைச் சுற்றிப்பரவுகிறது. பிறரின் எண்ணசக்திக்குள் நாம் வரும்போது, மாறுபாட்டை உணர்கிறோம். இந்தக் கருத்துக்களுடன், பாழடைந்த வீடுகளைப்பற்றி உலவும்பயங்கரக் கதைகளையும் விக்கிரமாதித்தனது சிம்மாசனம் புதைந்திருந்த மேட்டின்மீது அமர்ந்திருந்த மாட்டுக்காரச்சிறுவன் எப்படித் தீர்க்கமாக நியாயம் வழங்கினான் என்றகதையையும் எண்ணிப்பாருங்கள். மனிதர்களும் சாகிறார்கள். ஆனால் எண்ணங்கள் சாவதில்லை. அவை காற்றில் மிதக்கின்றன.

கடந்தசில ஆண்டுகளுக்கு முன் இப்படிப்பட்ட கருத்துக்களை யாரேனும் அமெரிக்காவில் தெரிவித்தால் அவனைப் பைத்தியக்காரன்என்று எள்ளி நகையாடியிருப்பார்கள். ஏனெனில் மேற்கத்தைய நாட்டு விஞ்ஞானிகள் எதற்கும். 'எங்கே ஆதாரம், எங்கேசோதனை என்னமுடிவு கண்டாய்?' என்று கேட்பவர்கள் ஆனால் காலம்மாறிவருகிறது.

### மனத்தின் சக்திக்கான சோதனை

1920 வாக்கில், டியூக் பல்கலைக்கழகத்தில் ஜே. பி. ரைன் என்ற மனோதத்துவ நிபுணர் மனத்தின் அதீதசக்திகளைப்பற்றி முதன்முதலாகச் சோதனைகள் செய்யத் துவங்கினார். அவரது கருத்துக்களை முடிவுகளை விஞ்ஞான உலகம் ஏற்றுக்கொள்ள வில்லை. பல ஆண்டுகள்-பல சோதனைகள் என்று அவரது கண்டு பிடிப்புகளின் விளைவாக 1960 லிருந்து பல பல்கலைக்கழகங்கள் இன்று இத் துறையில் ஆர்வம் காட்டி வருகின்றன.

அத்துடன் இந்திய நாட்டு யோகிகளும், இம் மாறுபாட்டுக்குக் காரணமாயிருக்கிறார்கள், இந் நாட்டிலிருந்து பல யோகிகள் இங்குவந்து ஆச்சிரமங்களை ஏற்படுத்தி, தேடி வரும் சீடர்களுக்கு தமது யோகம், தவம், தியானம் பற்றிய செயல் முறைகளைப் போதித்தார்கள், இந்த ஆர்வம் சுவாமி விவேகானந்தர் இங்கு வந்ததிலிருந்து துவங்கியது என்று கூறவேண்டும். 1920 வாக்கில் வட-இந்தியாவிலிருந்து பரமஹம்ஸ யோகானந்தர் என்றொரு யோகி இங்கு வந்து ஆத்மீக அறிவைப் பரப்பினார். பல ஆச்சிரமங்களை ஏற்படுத்தினார்.

### மகேஸ் யோகியின் தியான தத்துவம்

1968 ஆம் ஆண்டில் மகரிஷீ மகேஷ் யோகிஇங்கு வந்தார். இவர் பௌதிகம் படித்தவர்.

(6ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### மோட்சம்

மோட்சம் என்பது விடுதலை பெறுதல் அல்லது முழுமை பெறுதல் என்பதாகும். ஆசை மோட்சத்திற்கு எதிரியாகும் மனிதர்களுடைய துன்பங்களுக்கும் இதுவே அடிப்படை. ஆன்ம விசாரணையாகிய உண்மையான ஞானத்தால் தெளிவடைந்து விட்டீர்களானால் மோட்சம் கிடைத்து விடும் சாத்வீகப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள். எல்லாத் துன்பங்களும் மறைந்து விடும். மோட்சமாகிய பேரின்பத்தை அல்லது இறைவனை அடைவதோடு ஒப்பிடும் போது மூவுலகங்களிலிருந்தும் பெறக் கூடிய இன்பங்கள் அனைத்தும் ஒன்றும் இல்லாதவைகளே.

சுவாமி சிவானந்தர்

பாரதூரமான ஐந்து சம்பவங்களில்

# புரிந்துணர்வு உடன்படிக்கையை கிழக்கில் புலிகள் மீறியுள்ளனர்

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

**கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு மாதங்களில் பாதுகாப்பு நிலவரம் மிகவும்பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஐந்து பாரதூரமான சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ளனர்.**

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார். நேற்றைய தினம் அலரிமாளிகையில் இடம் பெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வாழைச்சேனை பொலிஸ் நிலையம் மீது மேற் கொள்ளப்பட்ட வனமுறை, இராணுவச் சிப்பாய்கள் 7 பேர் [illegible]து செய்யப்பட்டமை, அம்பாறை விஷேட அதிரடிப் படையி[illegible] தாக்கியமை, ஹர்த்தால்களை ஏற்பாடு செய்து போக்குவரத்துக்களைத் தடை செய்தமை, பொது மக்களின் இயல்பு [illegible]ழ்க்கைக்குக் குந்தகம் விளைவித்தமை ஆகிய ஐந்து சம்பவங்களின் மூலம் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக கப்பட்டுள்ளது.

ஹர்த்தால்களை ஏற்பாடு செய்து இன முரண்பாடுகளைத் தூண்டி விடுவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை கடந்த காலங்களில் மூதூர், வாழைச்சேனைப் பகுதி முஸ்லிம் மக்களுக்கு விடுதலைப்புலிகள் பல்வேறு இன்னல்களை ஏற்படுத்தி வந்துள்ளனர்.

இந் நிலையில் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு, மாவட்ட மட்டத்தில் விஷேட குழுக்கள் அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக் குழுக்களில் முப்படைத் தளபதிகளின் பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள், மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்குவதற்கு உததேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் எப்பாகத்தில் வன்முறைகள் அல்லது இனமுரண்பாடுகள் ஏற்பட்டாலும் இக்குழுக்களே முதலில தலையிட்டு நிலமைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின இடம் பெற்றுள்ள பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் யுத்த நிறுத்தக கண்காணிப்புக் குழுவினால் கட்டுபடுத்த முடியாமல் போய்விட்டது என்பது தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி செயலகம விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### இருநூறு...

தலைமையில் அமைச்சர் குழுவொன்று நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தது.

இந்த அமைச்சர்கள் குழுவில் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

திருகோணமலையில் துப்பாக்கிச் சூடு, கிரனைட் வீச்சுச் சம்பவங்களின் போது இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக திருகோணமலை செயலகத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு சமாதானக்குழுவொன்றை அமைப்பது தொடர்பாக இம் மாநாட்டில் ஆராயப்பட்டது.

இச் சமாதானக்குழுவில் மதத் தலைவர்கள், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறுவது குறித்தும் இனம் காணப்பட்டது.

இச்சமாதானக்குழுவின் முதலாவது கூட்டம் இம்மாதம் 23ம் திகதி புதன்கிழமை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இக் கூட்டத்தை அடுத்து இரு வாரங்களின் பின்னர் அமைச்சர்கள் மீண்டும் திருகோணமலை சென்று இவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்வரென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமைசசர் ஜோன் அமரதுங்கா திருமலை மாவட்ட எம்.பி இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார்.

இதன் போது திருகோணமலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இராணுவத்தினரும், பொலிஸாருமே பெருமளவில் கடமை ஆற்றி வருகின்றனர். இந்நிலையில் இருநூறு தமிழ் இளைஞர்கள் ஊர் காவல் படையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் ஊர்காவல் படையில் நியமிப்பது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் ஆலோசித்த பின் முடிவு அறிவிப்பதாக அமைச்சர் ஜோன் அமரதுங்கா சம்பந்தனிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திருகோணமலையில் அரசினர் பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அமைச்சர் குழுவினர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த வர்களைப் பார்வையிட்டனர். (ம)

### திருமலை..

தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மீது கிரனைட் வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டது பொலிஸாரே என்று அமைச்சர் மகேஸ்வரன் கூறமுடியாது என்றும் ஜோண் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த பொதுமக்கள், பொலிஸாரே தம் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும், தாக்குதல் நடத்திய பொலிஸாரை தம்மால் அடையாளம் காட்டமுடியுமென அவர்கள் கூறியுள்ளதாகவும் அமைச்சர் மகேஸ்வரன் பி.பி.ஸியின் தமிழ் சேவைக்கு நேற்றுத் தெரிவித்தார். (த)

### விடுமுறையில்...

இராணுவத்தினர், த்மது பயணததிற்கு வழித்துணைப் பாதுகாப்பு வழங்குமாறு புலிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டனர். இதனையடுத்தே புலிகள் மட்டக்களப்பில் இருந்து ஓட்டமாவடி வரை இராணுவ வாகனங்களுக்கு பாதுகாப்பு வழங்கி அனுப்பி வைத்தனர். (இ)

வாசகர்களே:-
இன்று
வலம்புரியின்
வாரமலர்
சங்கு நாதம்
தவறாது வாங்கிப் படியுங்கள

## பண்ணாகத்தில் வாணி விழா

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் அம்பாள் கலை மன்றம் நடத்தும் வாணி விழா இன்று மாலை 4மணிக்கு சு.கலாரூபன் தலைமையில் பண்ணாகம் நெல்லியான் காளிகோவிலில் நடைபெறும் (ந)

நயினாதீவில் தடுக்கப்பட்ட

## புலிகளின் பிரமுகர்கள் யாழ். வந்து சேர்ந்தனர்

(திருநெல்வேலி)

கடற்படையினரால் பயண அனுமதி மறுக்கப்பட்டு நயினாதீவில் தடுக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர்களான பாப்பா, செம்மணன் மற்றும் சேரலாதன் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நேற்று முன்தினம் இவர்கள் நயினாதீவிலிருந்து யாழ் வரமுற்பட்ட போது கடற்படையினரால் தடுக்கபபட்டு திருப்பியனுப்பப்பட்டனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், படையதிகாரிகள் மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஆகியோர் நேற்று நடத்திய கலந்துரையாடலையடுத்து புலிகளின் அரசியல் பிரமுகர்கள் யாழ் வர அனுமதிக கப்பட்டனர். (இ-43)

## ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் வவுனியா அணிக்கு வெற்றி

(வவுனியா)

வவுனியா, யாழ்ப்பாண மாவடடத் தெரிவுக்கிரிக்கெற் அணிகளுக்கிடையிலான ஒருநாள் 50 ஓவர் கொண்ட கிரிக்கெற் போட்டியில் வவுனியா மாவட்ட் கிரிக்கெற் அணி வெற்றியீட்டியுள்ளது.

இந்த கிரிக்கெற் போட்டி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண மாவட்ட அணியினர் 46 ஓவர்களில் சகல விக்கெற்களையும் இழந்து 183 ஓட்டங்களை பெற்றனர். இதில் காண்டீபன் 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 46 ஓவர்களில் ஆறு விக்கெற்றுகள் இழப்பிற்கு 184 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இதில் ரமணன் 49 ஓட்டங்களைப் பெற்றார்.

சிறந்த ஆட்டநாயகனாக வவுனியா மாவட்ட அணியைச் சேர்ந்த முகுந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கிரிக்கெற் போட்டி வவுனியா சென்றலைறஸ் விளையாட்டு கழகத் தலைவர் எஸ்.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது பரிசளிப்பு வைபவத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜாகுகனேஸ்வரனும் கலந்து கொண்டார். (ம)

### கொழும்பு...

அவரது பாதுகாப்புக்கருதி தலைவர் பிரபாகரன் கட்டுநாயக்கா ஊடாக பாலசிங்கம் வன்னிக்கு வருவதை விரும்பவில்லை என்று தெரியவருகிறது.

இதேவேளை கடந்த 9ம் திகதி அதிகாலை ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைவார் என்று பாதுகாப்பு அமைசசர் திலக் மாரப்பனவுக்கு நோர்வேத் தூதுவர் அறிவித்திருந்தார என்றும்,

இதனால் கட்டுநாயக்கா விமான நிலையப்பகுதி அன்று நள்ளிரவு முதலே பலத்த பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டு பாலசிங்கத்தின் வருகையை எதிர்பார்த்து அரச அதிகாரிகள் காத்திருநதனர் என்றும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது. (இ)

### விசாரணைகளை...

மன்ற நீதிபதி ஒலிவர் வீரசேன மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதியான ஆசிரியர் சாமித்தம்பி விவேகானந்தன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக் குழுவினர் காஞ்சிரங்குடா படுகொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு படுகொலைச் சம்பவத்திற்கு யார் காரணம்என்பதைக் கண்டறிவதுடன், விசாரணை அறிக்கையை இம் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் உட்துறை அமைச்சருக்கு சமர்பிக்கவுள்ளனர்.

மேற்படி படுகொலைச் சம்பவத்தில் 7 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் 15 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

சீமாட்டி லீலாவதி இராமநாதன நினைவுப் பேருரை

காலம்: 14.10.2002 (இன்று) பிற்பகல் 3.00 மணி
இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக் கழகம
நினைவுப்பேருரை நிகழ்த்துபவர்:
கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர்
திருமதி சந்திரலேகா மௌனகுரு
தலைப்பு: "தமிழ் இலக்கியத்தில் ஔவை மரபு"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

து[illegible]ணவேந்தர்.

[C/5129]

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமானநல்லெண்ணெய்
V.S.P ஜிஞ் ஒயில்
தயாரிப்பாளர்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.

COOL LAMINATING
நினைவுமலர்க் கவர்கள் ரூபா 1.50 க்கு Laminating
பிள்ளையார் அச்சகம்
A Graphic Arts Industry
நல்லூர்
[C/5042]

இயற்கை எம் உடமை - அதைக் காப்பது எமது கடமை

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள்-20 விலை:- 14.00

# சங்கு நாதம்

Sankunatham

(07- 13. ஒக்டோபர். 2002)


சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 தொலை பேசி:- 2223378 நாதம்:- 32

பக்கம்-02




அரசியல் அலசல்

பக்கம்-08



மௌனத்தின் தேடல்கள்

பக்கம்-11



மகளிர் உலகம்

பக்கம்-14



சிறுவர் அரங்கம்

பக்கம்-16



சினிமாச் சிதறல்

## மீண்டும் டுமீர்...



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# இப்படியும் நடக்குமா?

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# அம்பாறை - திருகோணமலையில் சிங்களப் படையினர் மீண்டும் டுமீர்

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் வடக்குக் கிழக்கில் யுத்த மேகங்களைக் கலைத்தது என்பதை ஏற்றுத் தான் ஆகவேண்டும்.

2001 டிசெம்பர் 5ந் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றியீட்டியதை அடுத்து வடக்குக்கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

வடக்குக் கிழக்கில் இயல்பு நிலையை ஒரு சொற்ப காலத்திற்குள் ஏற்படுத்தி விடமுடியாது என்

## சமாதானம் முற்றிப் பழுக்குமா?

பது வெளிப்படை. ஆனால் வடக்குக் கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டுமாயின் அதற்கு விடுதலைப்புலிகளின் இணக்கப்பாடு தேவை என்பதும் மறுக்கப் படமுடியாத உண்மை.

ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே மத்தியஸ்தர்கள் எவரும் இன்றி சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுவது என்பது கற்பனையிலும் நடக்கமுடியாத காரி




யம். கடந்த காலங்களில் அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே இடம்பெற்ற சமாதானப்பேச்சுக்கள்



தோல்வியடைந்தமைக்கு ஓர் பொதுவான நடுவர் இன்மையே காரணம் என்பதை அரசியலாளர்கள் உணர்ந்துள்ளனர்.

### இந்தியாவின் போக்கு

இலங்கையின் இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்கக் கூடிய தகுதி அண்டை நாடான இந்தியாவுக்கே உண்டு எனினும் இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் வெளிப்படையாகத் தலையிடுவதை இந்தியா ஒருபோதும் விரும்பவில்லை இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியதன் மூலம் வெளிநாட்டு இராஜ தந்திரத்தில் இந்தியா மூக்குடைபட்டது. இந்திய அமைதிப்படை வந்த நோக்கம் எதுவோ அது தலைகீழாக மாறி தமிழர்களைக் கண்டபாட்டில் சுட்டுக் கொன்றது. இதன் எதிரொலிப்பு இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியின் மரணத்திற்கு காலாகியது.

இலங்கையின் இனப்பிரச்சினையில் தேவையில்லாமல் தலையிட்டு தனது படையினரையும் இழந்ததோடு, சர்வதேசத்திலும் இந்தியாவின் அமைதிப்படைக்கு இழுக்கு ஏற்பட்டது.

இவை காரணமாக இலங்கையின் பிரச்சினை என்றால் "ஐயா பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்பது இந்தியாவின் நிலைப்பாடு

### புலிகளும் விரும்பவில்லை

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே சமாதானப்பேச்சை ஆரம்பிப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பதில் இருதரப்பிற்கும் இடையே ஒருமித்த கருத்து நிலவியது. அதேபோல் மத்தியஸ்தம் வகிக்கும் நாடு இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நாடாக இருத்தல் வேண்டும் என்பதிலும் ஒரே கருத்தையே இருசாராரும் கொண்டிருந்தனர். இந்நிலையில் இந்தியாவின் மத்தியஸ்தத்தை இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட போதிலும், விடுதலைப் புலிகள் அதற்கு பச்சைக்கொடி காட்டவில்லை. இதனால் அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையேயான பேச்சுக்களில் "இந்திய மத்தியஸ்தம்" என்ற பேச்சு அப்படியே அமுங்கிப் போனது.

### நோர்வேக்கு சந்தர்ப்பம்

இலங்கையின் இனப்பிரச்சினையில் மத்தியஸ்தராக இருக்கக் கூடிய அண்டை நாடு என்ற ஸ்தானத்தில் இருந்து இந்தியா ஒதுங்கிக் கொள்ள, நடுவரைத் தேடித் திரியும் நடவடிக்கை தீவிரமடைந்தது.

நடுவராக இருப்பவர் இலங்கை அரசினாலும் விடுதலைப்புலிகளினாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவராக, அதேநேரம் இலங்கையின் இன யுத்தத்தில் எவ்வகையிலும் பங்களிப்பு அற்றவராக இருப்பது





அவசியம். அவ்வகையில் நோர்வே இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் ஏற்புடைய நடுவராக தெரிவு செய்யப்பட்டது.

### ஜனாதிபதியும் -புலிகளும் இணங்கிய மத்தியஸ்தம்

சமாதானப்பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பதை முதன்முதலில் ஏற்றுக் கொண்டவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்தபோது "இலங்கையில் இனப்பிரச்சினை எதுவும் கிடையாது. இங்கு பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு" எனச் சர்வதேசத்திற்கு பறைசாற்றியது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரத்தை உடைத்து இனப்பிரச்சினைத் தீர்விற்கு சர்வதேசத்தின் மத்தியஸ்தம் தேவை என்ற கருத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஏற்றுக்கொண்டதோடு, நோர்வேயை மத்தியஸ்தம் வகிக்க வருமாறு அழைப்பும் விடுத்தார்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தை நடத்த முயற்சித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப்புலிகளுடன் இணங்கிக் கொண்ட ஒரேயொரு விடயம் நோர்வேயின் மத்தியஸ்தமே.

### புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தையில் நடுவராக நோர்வேயை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதியால் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை.

அதாவது ஜனாதிபதி கட்டிய வீட்டில் அவரால் குடியிருக்க முடியாமல் போக, பிரதமர் ரணில் தலைமையிலான ஐ.தே.முன்னணி குடியிருப்பதாக கதை முடிந்துவிட்டது. இப்போது சமாதான அஞ்சலோட்டத்தில் பிரதமர் ரணில் ஓடிக்கொண்டிருக்கிறார்.

விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு யுத்தநிறுத்தம், தாய்லாந்துப் பேச்சு என்ற ஒழுங்கில் அஞ்சலோட்டம் நடைபெறுகிறது. போட்டி முடிவிடத்திற்கு இன்னமும் நீண்ட தூரம் இருப்பினும் பிரதமர் ரணிலின் சமாதான அஞ்சலோட்டத்தை அவரது போட்டி ஆதரவாளர்கள் ஏடாகூடமாக நடந்து குழப்பிவிடுவார்களோ என்ற அச்சம் இப்போது ஏற்பட்டுள்ளது.

### படையினரிடம் மீண்டும் பழக்கதோஷம்

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு 8மாதங்கள் முடிவடைந்த நிலையில் கடந்த 9ம் திகதி அம்பாறை மாவட்டம் காஞ்சிரம்குடாப் பகுதியில் சாத்வீக ரீதியில் ஆர்ப்பாட்டம் செய்த அப்பாவிப் பொதுமக்கள் மீது விசேட அதிரடிப் படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் 7 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். 15பேர் காயமடைந்தனர்.

அப்பாறையில் இடம்பெற்ற சம்

**விதுரன்**

பவத்தில் தொடர் நடவடிக்கை போல் கடந்த 11ந் திகதி வெள்ளிக்கிழமை திருகோணமலையில் சிங்களப் பொலிஸார், ஊர்காவல் படையினர் இணைந்து தமிழ் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு, கிரனைட் வீச்சு நடத்தியுள்ளனர். இதனால் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 50ற்கும் மேற்பட்டவர்கள் காயமுற்றனர்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது - யுத்தநிறுத்தம் இருதரப்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் போது பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்திற்குப் பின்னால் இருக்கக் கூடிய "சமாதானக் குழப்பம்" குறித்து அரசு கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

சமாதானத்தை எதிர்க்கும் ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளின் சார்புடையவர்களும், படையில் இருக்கவே செய்கிறார்கள் எனவே படையினரின் செயற்பாடுகளில் அரசு அதீத கவனம் செலுத்தாவிடில் சமாதான முயற்சிகளை ஒரு கணப்பொழுதில் அஸ்தமனம் ஆக்கிவிடும்.

### சமாதானத்தில் நம்பிக்கை இழப்பு

அப்பாறை - திருமலை ஆகிய இடங்களில் நடந்த படுகொலைச் சம்பவங்கள் சமாதான முயற்சி - தாய்லாந்துப் பேச்சு என்பவற்றில் உடனடியான தாக்கம் எதனையும் ஏற்படுத்தாதெனினும், சமாதானத்தின் பால் மக்கள் கொண்ட நம்பிக்கை தேய்வடையவே செய்யும்.

அத்தோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எவ்வளவு தான் சமாதானம் பற்றிப் பேசினாலும் சிங்களப் படைகள் தமிழ் மக்களைக் கொலை செய்வதற்கென்றே தோற்றுவிக்கப்பட்டவர்கள் என்ற உணர்வையும் மேற்படிச் சம்வங்கள் ஏற்படுத்தியுள்ளது.

### பிரதமர் ரணில் - தலைவர் பிரபா சந்திக்கும் வாய்ப்புண்டா

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து தாய்லாந்தில் இடம்பெற்ற சமாதானப்பேச்சுக்களில் அரசின் முக்கிய அமைச்சர்களும், விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இதனை விட சமாதானப் பேச்சு உச்சம் பெறுவதாயின் அது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைவர் பிரபாகரன் ஆகியோரின் சந்திப்பாகவே இருக்கும். அத்தகையதொரு சந்திப்பு இடம்பெறும் வாய்ப்பு என்பது அரசியல் ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பு.

ஆனால் அப்பாறை மற்றும் திருமலையில் படையினரின் துப்பாகிக்கிகள் "மீண்டும் டுமீர்.." சத்தம் போடத் தொடங்கியுள்ளதால், பிரதமர் ரணில் - பிரபா சந்திப்பு சாத்தியமா என்ற கேள்வி இப்போது அனைவரிடமும் எழுந்துள்ளது. ❋

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 14.00

---

## போட்டியில் பங்கு பற்றிய...

அதனால் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களின் உள்ளங்கள் வேதனையடையாதா? அவர்களின் திறமைகள் வெளிக்காட்ட அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை ஏன் இரத்துச் செய்தீர்கள் என்று கோப்பாய்க் கோட்ட ஆங்கில ஆசிரிய ஆலோசகர் ஒருவரிடம் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் சிலர் கேட்டதற்கு தமக்கு எதுவுமே சொல்லத் தெரியவில்லையென்று அவர் குறிப்பிட்டதாக பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

நாடகப் போட்டியில் நடுவராக இருந்த ஒரு ஆசிரியரிடம் போட்டி முடிவு குறித்து காரணம் கேட்கப்பட்ட போது அவர் நகரப்புற மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள் என்ற அடிப்படையில் மாணவர்களை தரம் பிரித்து குறிப்பிட்டதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இங்கு சுட்டிக் காட்டப்பட்டப்படுவது என்னவெனில் மாண வர்கள் சமமானவர்கள் என்ற அடிப்படையிலேயே போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இங்கு நகர்ப்புற பாடசாலைகள் கிராமப்புற பாடசாலைகள் என்று எந்த விதமான வேறுபாடுகளும் கிடையாது.

போட்டி நியதியின் அடிப்படையில் திறமையானவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படுவதே பொது நீதியாகும்.

### நடு நிலை தவறலாகாது

ஆசிரியர்களைச் சமூகம் காலாதி காலமாக "மாதா பிதா குரு தெய்வம்" எனும் வாக்குக்கு அமைய தெய்வமாக உயர்ந்த அந்தஸ்துடனேயே மதிக்கின்றனர்.

இந்தவகையில் போட்டிகளுக்கு நடுவர்களாக கடமையாற்றும் ஆசிரியர்கள் தமது நிலைமையை மறக்காது. தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காது. பொதுவிதி நீதி அடிப்படையில் உரிய இடத்தில் உரிய முடிவை வெளியிட வேண்டும். இதுவே உண்மையான கடவுள் நீதியுமாகும்.

ஒன்றை அறிவிப்பது இன்னொன்றை வெளியிடுவது என்ற தன்மைகளை விடுத்து. சொல்லும் செயலும் ஒன்றாக அமையுமாறு செயற்பட வேண்டும்

ஒரே இனத்தவர்களாகிய நாம் எமக்கிடையே இத்தகைய பாகுபாடுகளையும் வளர்க்க இடமளிக்கக் கூடாது.

மாணவர்கள்உள்ளங்கள் பூப்போன்று மென்மையானவை. அவற்றில் வக்கிரங்களை வளர்க்கும் வகையில் பெரியோர்கள் செயற்படக்கூடாது.

போட்டிகளை நடத்துவதென்பது மிகவும் கடினமான செயற்பாடுகள் தான். எனினும் மாணவர்களின் திறனை ஊக்குவிக்க நடத்தும் இச் செயற்பாடுகள் அதனை அடையும் வகையில் நடைபெற வேண்டும்.

போட்டிகளுக்கு நடுவர்களாக கடமையாற்றுபவர்கள் இத்தகைய பிழைகள் தவறுகள் ஏற்படாத வகையில் செயற்படுவதன் மூலம் மாணவர்களின் முழுமையான வெற் றிக்கு பங்களிப்பவர்களாக இருக்க முடியும்.

கல்வித்திணைக்கள உயரதிகாரிகளை பிழை சொல்வதில் எதுவித அர்த்தமும் இல்லை தவறுகள் கீழ் மட்டத்திலேயே இடம் பெறுகின்றன. அதனை அறியாது இருப்பதே அவர்களின் தவறாகிறது.

எனவே தவறுகளையும் பிழைகளையும் சுட்டிக்காட்டுவது தவறு அல்ல. அதனை பிழையாக எண்ணவும் கூடாது.

அத்தகைய தவறுகள் இனிமேல் ஏற்படாமல் இருப்பதாக உறுதி செய் வதே தவறுகளை திருத்தும் மார்க்கமாகும்.

# தமிழ் இலக்கியங்கள் போற்றும் தாய்மை

தாய் என்றால் 'முதலிடம்' என்றும், தாயகம் என்றால் 'அடைக்கலம்' என்றும், தாயம என்றால் 'மேன்மை' என்றும் தமிழில் பொருள்கள் உள்ளன. இறைவனே அம்மையப்பராக இருக்கிறார் என்பதைத்தான் தாயுமான சுவாமிகள் உணர்த்துகிறார்.

"தாயும் நீயே; தந்தை நீயே சங்கரனே
தாயவன், உலகுக்குத் தன் ஒப்பில்லாத
தாயவன"

என்று பாடிச் சிலிர்க்கிறார் திருஞானசம்பந்தர்.

"தாயுமாய் எனக்கே தலை கண்
- ணுமாய்ப்
பேயேனையும் ஆண்ட பெருந்தகை"

என்று பெருமிதத்துடன் பேசுகிறார் திருநாவுக்கரசர்.

தம் திருநாவலூரைப் பாடும் போது, இறைவனைத் தாய் வடிவிற் கண்டு களித்த சுந்தரர், திருவெண்ணெய் நல்லூரில் தம்மை ஆட்கொண்ட ஆண்டவனின் அருட கருணையை எண்ணிய போது, அவரது தாயுள்ளம் இப்படி வெளிப்பட்டது.

"தாயவளாய்த் தந்தையாகிச் சாதல்
பிறத்தல் இன்றிப்
போயகலா மைந்தன் பொன்னடிக்கு
என்னைப் பொருந்த வைத்த
வேயவனார் வெண்ணெய் நல்லூர்
வைத்து என்னை ஆளுங் கொண்ட
நாயகனார் கிடமாவது நம்
திரு நாவலூரே!"

தம்மைத் தாயாகக் காணும் அன்பரை, இறைவன் எப்படி மாற்றுவான் என்னும் உண்மையைப் போற்றித் திருஅகவலில் மாணிக்கவாசகர்,

"திருவடி இணையப்
பிரிவினை அறியாது நிழலது போல
முன்பின் ஆகி, முனியாது அத்திசை
என்புனைந்து உருகி நெக்கு நெக்கு
ஏங்கி
அன்பெனும் ஆறு கரையாது புரள
நன்புலன் ஒற்றிநாத என்று அரற்றி
உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்ப
கரமலர் மொட்டித்து இருதய மலர்
கண் களி கூர நுண்துளி அரும்ப
சாயா அன்பினை நாடொறும் தழைப்
பவர்
தாயேயாகி வளர்த்தனை போற்றி"

எனப் பொலிவுடன் எடுத்துரைக்கிறார்.


உயிரும், இறைவனும் தம்மை மறந்த நிலையில், ஒரு தாயும் சேயுமாகக் கலந்து கூடிச் சிறக்கின்றன என்பதை நெஞ்சம் நெகிழ்ந்து பாடியவர் மாணிக்கவாசகர். "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்றும் "தா தாய் மூவேழுலகுக்கும் தாயே" என்றும் அவர் பாடியிருப்பதை அறியலாம்.

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன"
என்று பாடிய திருமூலர் தாய், சேய என்ற இருவகை அன்பையும் இணைத்து,

"சேயினும் நல்லன்; அணியன்
நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ் சடையானே!"

என்று பாடினார்.

கீதையில், கண்ணபெருமான், "எல்லா உயிர்களுக்கும் வித்து எதுவோ அது நான்" என்றும் "என் வலியால் நான் பூமியினுள் புகுந்து உயிர்களைத் தாயாகத் தாங்குகிறேன்" என்றும் அருளுகின்றார்.



## ஆழ்வாரின் தாயுள்ளம்

திருவேங்கட மலையில் ஒரு படியாய்க் கிடந்து, திருமாலின் பவளவாய் கண்டு மகிழும் பேறு தமக்கு வாய்க்காதா என்று பாடியவர் குலசேகரஆழ்வார். தம்மைத் தாயாக உருவகித்துப் பாடிய பாடலில் உருக்கத்தின் பிழிவை அவர் இறக்கியிருக்கிறார். தாமரைக் கண் உடையவனே... தளர் நடைபயின்று மண்ணில் செம்பொடி ஆடி விளையாடி, என மார்பில் தவழும் பேறு எனக்குக் கிட்டிலை ஐயோ! என்று உருகுகிறார் ஆழ்வார்.

**இலக்கிய நயம்**

"தண்ணந்தாமரைக் கண்ணனே கண்ணா!
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடியாடி வந்து என்றன்
மார்பின் மன்றிடப் பெற்றிலேன் அந்தோ!
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரிவாய்க் கொண்ட அடி சிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ!"

என்பது ஆழ்வாரின் தாயுள்ளத்தைப் பிழிந்து காட்டும் வரிகளாகும்.

"கன்னி நன்மா மதில்புடை சூழ்
கணபுரத்து எம் கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே!
தாலேலோ!"

என்று இராமனையும்

"ஆலை நீள் கரும்பு அன்னவன் தாலோ
அம்புயத் தடங்கண்ணினன் தாலோ"

என்று கண்ணனையும் தாலாட்டித் தம் தாய்மை நெஞ்சை பிரகடனப்படுத்தியவர் குலசேகர ஆழ்வார்.

சிற்றிலக்கியங்களில் ஒன்றான பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் அனைத்துமே, தாய்மை உள்ளம் தழைக்க வேண்டும் என்னும் உன்னத உணர்வைத்தான் பிரதிபலித்துக் காட்டுகின்றன. என்று கூறினால் மிகையில்லை.

## வள்ளுவரின் தாயுள்ளம்

உலகின் இலட்சியப் பெண் மணி தாய். 'பெண்' என்ற சொல். அதியற்புதமான; தன்னலம் கருதாத, துயரெல்லாம் பொறுக்கும் தாய்மையே பெண்ணினத்தின் இலட்சியம் எனக் கூறினார் சுவாமி விவேகானந்தர்.

வள்ளுவம் தன்னை உலகுக்கே தந்து, வான்புகழ் கொண்ட வள்ளுவரும் தாய்மையின் சிறப்பை, வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வலிவும் பொலிவும் தோன்றப் பாராட்டிச் செல்லுகின்றார்.

'மக்கட் பேறு' என்னும் அதிகாரத்தில் சில குறள்களை நோக்கினால் தாய்மை பெறும் இன்ப நுகர்ச்சிகளைக் காணலாம். தம் குழந்தைகள், சிறு விரல்களால் பிசைந்த உணவு, அமிழ்தத்தை விடமேம்பட்ட சுவையைத் தரும் என்றும்,அந்தக் குழந்தைகளை தீண்டுவதால் மேனி இன்பமும், அவர்களின் குழலையும் யாழையும் வெல்லும் இனிய மழலைச் சொற்களைக் கேட்பதால் செவி இன்பமும் ஒட்டு மொத்தமாகக் கிடைக்கும் என்றும் தெளிவுபடுத்தினார் வள்ளுவர்.

ஒரு மகன் வளர்ந்து, வளமை அடைந்த காலத்திலும், அவன் பெற்ற செல்வத்தை மதிக்காமல், அவனையே செல்வமாக நினைப்பவள் தான் தாய் என்பதைச் சுட்டிக் காட்டியவர் வள்ளுவர். மது உண்ணும் அரக்கர்கள் திருந்த வேண்டுமா? அவர்களுக்கும் தாய்மைதான் கைகொடுக்க வேண்டும் என்று மொழிந்தார் தெய்வப்புலவர். "பெற்ற தாயின் முகத்தில் கூட விழிக்க முடியாத இழிந்த நிலையை நீ கள்ளால் அடைவாய்!" என எச்சரித்தார்.

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்
என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி"

என்பதுதானே வள்ளுவம்.

## பழமொழிகளில் தாய்மை

பழமொழிகள் காலத்தின் கைகாட்டிகள்; பண்பாட்டின் பலகணிகள்; அறிவுரையின் சுருக் கங்கள்; சொல்லாய்வின் நெற்களங்கள். வாழ்க்கை மோரில் மிதக்கும் வெண்ணெய்த் திரட்சிகள். வாய்மொழி ஞான உரைகளாகத் திகழ்ந்திடும் அந்தப் பழமொழிகளில் 'தாய்மை' குறித்து எப்படியெல்லாம் கூறப்பட்டுள்ளன என்பதைப் பார்ப்போமா...

மந்திரங்களில் உயர்ந்த மந்திரமாக காயத்திரி மந்திரத்தை மக்கள் போற்றுவதைக் காண்கிறோம். அதைப் போல், உறவுகளில் முதன்மை உறவாக, முக்கிய உறவாகப் போற்றப்படுபவள் தாய் எனக் கருதினர். விளைவு! "தாயைப் போல உறவு இல்லை; காயத்திரியைப் போல மந்திரம் இல்லை" எனும் பழமொழி.

கண்ணால் காணக் கூடிய தெய்வங்கள் பெற்றோர்கள். பெற்றோரிலும் முதலிடம் பெறும் தகுதி அன்னைக்கே என்று அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். எப்படி?

"அன்னையும் பிதாவும் முன்னறி
தெய்வம்"
"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை."

நாட்டு மருந்துகளில் சுக்குக்கு இருக்கும் மகத்துவத்தைப் போல், வீட்டு உறவுகளில் தாய்க்கு இருக்கும் மகத்துவம் தனித்துவம் பெறறது. "தாய்க்கு மிஞ்சிய உறவும் இல்லை; சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை" என்பதல்லவா பழமொழி.

தேவதைகளின் கையிலிருந்து ஊதிவிடப்பட்ட நட்சத்திரங்கள் குழந்தைகள் என்றார் தாகூர். அந்தக் குழந்தைகளின் அருமையை முற்றுமாக உணர்ந்தவள் தாய். "பிள்ளை வருத்தம் பெற்றவளுக்குத் தெரியும்; மற்றவர்களுக்குத் தெரியுமா? என்ற பழ மொழி அந்தக் கருத்தை உணர்த்தும். 'குரங்கிற்குத் தன்குட்டி, பொன்குட்டி', 'காக்கைக்குத்தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழிகள், தாய்மையின் அன்பை மொழிபெயர்த்துச் சொல்லும் அன்பு மொழிகள்.

'தாய்க்குப் பின் தாரம்' என்பது பழமொழி மட்டுமல்ல; காலா காலத்திற்குத் தேவையான கருத்து மொழியும் ஆகும். எதனால்...? 'தாய் வயிற்றைப் பார்ப்பாள்; பெண்டாட்டி மடியைப் பார்ப்பாள்" என்ற பழமொழி உணர்த்தும் உண்மையால்! ஒரு தனி மனிதன், சமூகத்தால் மதிக்கப்பட வேண்டுமானாலும் தாய் சொல் தட்டாமல் வாழ வேண்டும். இதனைத் "தாய்ச் சொல் கேளாப் பிள்ளை தறுதலை, தாய் வார்த்தை கேளாப்பிள்ளை நாய் வாய்ச சீலை,' 'தாய்ச் சொல் துறந்தால் வாசகமில்லை" ஆகிய பழ மொழிகள் விளக்கும்.

தாய்மையின் பல்வேறு பெருமைகளையும் பழமொழிகள் பலபடப் பாராட்டியுள்ளன. "தேரோடு போச்சுது திருநாள்; தாயோடு போச்சுது பிறந்த வீடு" என்ற மொழியும், "தாய் உள்ள மட்டும் சீராட்டு", என்ற மொழியும், "தாய் செத்தால் மகன் திக்கற்றான்" என்ற மொழியும் தாயின் தனித்தகுதியைத் தரணிக்குப் புரிய வைக்கும் தகவல் பலகைகள் என்றால், மிகையில்லை. "வானம வீழ்வதில்லை, பழமொழி பொய்யப்பதில்லை" என்று கூறிய ஜெர்மனியப் பழமொழியைப் போல், தாய்மை குறித்துக் கூறப்பட்ட தமிழ்ப் பழமொழிகளும் என்றும் பொய்ப்பதில்லை. அவற்றை, மிதவை இலக்கிய மாக்கி (Floating Literature) நெஞ்சில் என்றைக்கும் படரவிட வேண்டியது நம் கடமை அல்லவா....!

மனித இனத்தின் உயர்ந்த நிலை கடவுள் நிலை. தாழ்ந்த நிலை விலங்கு [illegible]லை. மனிதன் இயற்கை வாழ்வு [illegible]ழ்ந்து, இறைமைத் தன்மை அ[illegible]டவதே படைப்பின் நோக்கமாகும். அந்த

தொகுப்பு: M.த[illegible]னி

நோக்கம் பெரி[illegible]ம் நிறைவேறுவது பெண்[illegible]ால் தான்.

"எவ்வுயிரு[illegible] தாய் அன்பை எய்திவிடின் இறை உண்மை விளங்கும்" என்று 'கிறிஸ்து அருள் வேட்டல்' நூலிலும், தாய்மையை அவர் இறைமையாகப் போற்றினார்.

"பெண்ணிற்கு மதிப்புக் கொடுங்கள், வணக்கம் செலுத்துங்கள்" பெண் இல்லையேல் உலகமில்லை; உயிரில்லை; எல்லாம் பெண்ணால், எல்லாம் பெண்ணில். அத்தகைய பெண்ணை, தாயை, தெய்வத்தைப் போற்றுங்கள்!" என்றும் அறிவுறுத்தினார்.

* * *

# பிள்ளை வரம்



ஆழமான பெண்ணுனக்கு
இதயம் உள்ளதா? - என்
நீளமான பெயர் உனக்கு
நினைவில் உள்ளதா?

இடையில் வந்த காலம் நம்மை
இரண்டு செய்தது - இந்தக்
கடைசி நேரக் கடிதம் எந்தன்
உயிர் சுமந்தது

மரணம் என்னும் பாம்(பு)
என்னுள்
புற்று வைத்தது - பிள்ளை
வரட்டும் என்றே உயிரில்
கொஞ்சம்
விட்டு வைத்தது

கருகிப் போன போதும் நானுன்
கணவன் இல்லையா? - அடி
மரணம் காட்டும் கருணை கூட
உனக்குள் இல்லையா?

கடைசி ஆசை என்னவென்று
கைதி சொல்லலாம் - தன்
கடைசி ஆசை கணவன்
சொல்ல
உரிமை இல்லையா?

நீதி மன்றம் செல்ல எனக்கு
நேரம் இல்லையே - இந்தச்
சேதி கண்டும் உனது கண்ணில்
ஈரம் இல்லையே

உலக வாழ்வும் உறவும் இங்கே
அழகுப் பொய்யடி - என்
சலவை செய்த நிலவிரண்டை
அனுப்பி வையடி

நெஞ்சைக் கூட்டில் இழுக்கும்
ஜீவன்
நிறைவு காணட்டும் - அது
பிஞ்சுப் பூக்கள் பார்த்த பின்பு
பிரிந்து போகட்டும்

இறந்த காலம் எனக்கு மீண்டும்
இருந்தால் நிம்மதி - ஓ
பறந்துபோன கிளியே என்னைப்
பார்க்க அனுமதி

சின்னச் சின்ன ஓசை கேட்டும்
சிலிர்த்துக் கொள்கிறேன் - என்
வண்ணப் பூக்கள் வந்த தென்று
வாரி எழுகிறேன்

கண்டதெல்லாம் கனவு என்று
கவிழ்ந்து கொள்கிறேன் - என்
கண்ணீர் மட்டும் உண்மை
என்று
கண்டு கொள்கிறேன்

கொண்ட குழந்தையோடு
எனக்குப்
பங்கு இல்லையா? - அது
ரெண்டு ஜீவன் ஊற்றி வைத்த
கிண்ணமில்லையா?

புற்றுநோய்க்கு மருந்துண்டு
பூசி வைக்கலாம் - நெஞ்சின்
பற்றுநோயறுக்க ஊரில்
மருந்து மில்லையே

சுற்றிச் சுற்றி மொய்ப்பதென்ன
சோக நினைவுகள் - என்
ஒற்றைக் கண்ணில் ஒழுகும்
நீரில்
உயிரின் கசிவுகள்

எத்தனையோ வருடமாச்சு
பூமி பிறந்து - அடி
எத்தனையோ வருடமாச்சு
மனிதன் பிறந்து

லட்சம் கோடி ஜீவன் வந்து
போயிருக்குதே - இந்த
லச்சை கெட்ட பாசம் மட்டும்
போகவில்லையே

வட்ட நிலவு ரெண்டு வருமா
எட்டிப் பார்க்கிறேன் - என்
கட்டிலோடு உயிரைக் கொஞ்சம்
கட்டி வைக்கிறேன்

இறந்தகாலக் காயமெல்லாம்
இன்றே ஆறட்டும் - என்
மரணம் மட்டும் மென்மையாக
நிகழ்ந்து போகட்டும்

இருக்கும் போதே பிள்ளை
வந்தால்
நான் அழக்கூடும் - நான்
இறந்த பின்பு பிள்ளை வந்தால்
யாரர் அழக்கூடும்.

## ஜோக்ஸ்



ஹாய்.... பிருந்துகுட்டி இங்கிலீஷ் நல்லா படிக்கிறியாமே?
வாட் இஸ் யுவர் பாதர் நேம்?
ஐயே.... பாதர்நேம் இல்லே..... பாதர்ஸ் நேம்...
அதெப்படி? அப்பா ஒருத்தர் தானே?



என் மனைவியை உட்காரச் சொல்லி விட்டு நான் மிதிமிதின்னு மிதிப்பேன்.
எதிர்த்து பேச மாட்டாங்களா?
ஏன் பேசணும்? அவ ளுக்கும் எஸ்ஸ்சைக்கிள் டபுல்ஸ் வாறது பிடிக்கும்!

# விடுதலைப் புலிகளுக்கு விடுதலை ஆதரவாளர்களுக்குச் சிறைவாசம்!

## போராடியிருந்தால் இக்கதி ஏற்பட்டிராது

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்கைதிகள், நியாயத்தை மதிக்கும் நடு நிலையாளர்களின் மனச் சான்றுகளை சோதிப்பது போன்று தமது உண்ணாவிரதப் போராட்டங்களை விட்டு விட்டு நடத்திக் கொண்டேயிருக்கின்றனர். நாட்டின் பல திசைகளிலுமிருந்து வெகுஜனப் போராட்டங்கள் வெடித்தெழுந்து தார்மிக ஆதரவை வழங்கவும், பலத்த ஆதரவுப் பிரசாரங்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட ஒக்டோபர் போராட்டம் அமைச்சர் மிலிந்த மொரகொடவின் வாக்குறுதியுடன் ஒரு மாதகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. போராட்டம் நீறுபூத்த நெருப்பாகி விட்டது.

ஒவ்வொரு தடவையும் கைதிகள் போராட்டத்தை ஆரம்பிப்பதும், அதனை வெற்றியை நோக்கி நகர்த்திச் செல்கையில் ஒரு அமைச்சர் அதில் தலையிட்டு வாக குறுதியளிப்பதும், போராட்டம் தற்காலிகமாக கைவிடப்படுவதும், மீண்டும் ஆரம்பிக்கப்படுவதுமாக உள்ளது. ஏப்ரலில் ஒரு தடவையும், யூலாயில் ஒரு தடவையும் உண்ணாவிரதம் நடைபெற்றது. இவ்வாண்டிலேயே மூன்றாவது தடவையாக இப்போது நடைபெற்று முடிந்திருக்கிறது. ஏப்ரலில் ஜயலத் ஜயவர்த்தன, யூலாயில்



பெ.சந்திரசேகரன், இந்தத்தடவை மிலிந்த மொரகொட ஆகிய அமைச்சர்கள் வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். இப்பொழுது போராட்டம் ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விடுதலை அல்லது வீரமரணம் ஒரு மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது எனலாம்.

### ஜே.ஆர் போட்ட பயங்கரவாத தடைச் சட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அன்றைய ஜெயவர்த்தன தலைமை அமுல்படுத்து



வதற்கு ஆரம்பித்த காலச்சூழ் நிலைக்கும், இன்று ஏற்பட்டுள்ள சமாதன சூழ்நிலைக்கும் உள்ள வேறுபாடு யுத்தத்திற்கும் சமாதானத்திற்குமுள்ள பாரிய வேறுபாடுதான். உக்கிரமான யுத்தச் சூழ்நிலையில் தமிழ் இளைஞர் யுவதிகள் சிங்கள ஆயுதப்படையினரால் பார்க்கப்பட்ட விதத்தை இன்றைய நிலையுடன் ஒப்பிட முடியாது என்பது மட்டுமல்ல, ஜெயவர்த்தன காலத்திலேயே இது தேவையற்ற ஒன்று என்றும் கொடுரமானது என்றும், விமர்சிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்கு ஒரு பிரதமராகமட்டும் 1977 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டிருந்த ஜெயவர்தன, அரசியற் சட்டத்தை ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் மாற்றி தன்னை நிறைவேற்று ஜனாதிபதியாக ஆக்கிக் கொண்ட பின்னர், இலங்கையில் நடைபெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஹெக்டர் கொப்பேக்கட்டுவ, தான் வெற்றி பெற்றால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைரத்துச் செ வதாக பிரகடனம் செய்திருந்தார். பேரினவாத நிலைப்பாட்டையே என்றென்றும் கடைப்பிடித்து வரும் சுதந்திரச் கட்சியே அந்த நிலைபாட்டிற்கு வருமளவுக்கு கொடுரம் வாய்ந்த சட்டமே அது இன்றோ போருக்கு முடிவு கட்டி எப்பாடுபட்டேனும் சமாதானத்தை அடைவதற்கேற்ற புறச் சூழலும், திடசங்கற்பமும் இன்று ஏற்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையே ஐ.தே.மு அரசாங்கத்தின் இன்றைய கொள்கையாகிவிட்டது.

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் புதிதாக வழக்குகளை பதிவு செய்வதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்தது. அதனை சட்ட அமுலாக்கல் துறையினருக்கும் தெரிவித்தது. அவர்களும் அதனைச் செவிமடுத்து இன்று வரை அச் சட்டத்தின் கீழ் எவரையும் கைது செய்யவில்லை. பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிலும் வீதித் தடைகளைப் போடுவதற்கும் கூட இச் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாதென்று பாதுகாப்புச் செயலர் கூறி விட்டார். சட்டத்தில் வேண்டிய திருத்தங்களை செய்வது பற்றி சிபார்சு செய்வதற்கு இப்பொழுது அமைச்சரவை உபகுழுவும் அமைக்கப்பட்டு விட்டது.

இன்றைய சமாதானத் தளத்தில் நின்றபடி எடுத்த நடவடிக்கைகள் காரணமாகவே 788க்கு மேற்பட்ட சந்தேக நபர்கள் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர். நிருபிக்கப்படக் கூடிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையவர்களை விரைவில் விடுவிப்பது என்று அரசாங்கம் பல தடவைகள் அறிவித்து விட்டது. ஆனால் நடைமுறைகள் பெரும் தாமதத்திற்குள்ளாகி வருகின்றன. எங்கேயோ ஏதோ ஒரு தடை இருப்பது தெரிகிறது. மேலதிகமாக விசேட நீதிமன்றம் ஏற்பாடு செய்யப்படுகிறது என்றும், இதற்கான ஒரு நீதிபதியை பிரதம நீதியரசர் நியமிக்கும் வரை காத்திருக்கிறோம் என்றும், நீதியமைச்சின் செயலாளர் விஜயதிலக தெரிவித்திருக்கிறார். மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சார்பில் கொழும்பில் நடந்த கருத்தரங்கில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கு அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது. சட்டமா அதிபர் திணைக்களம் சாக்கு போக்குகளை கூறி கைதிகளின் விடுதலையை தட்டிக் கழிக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

### போர்க் கைதிகள் பரிமாற்றம்

போர் கைதிகளின் பரிமாற்றம் செப்ரெம்பர் 28ஆம் திகதி இடம் பெற்றிருந்தது. போரின் போது எதிரிப்படைகளிடம் சிக்கியவர்கள் எனப்படும் அரசபடையினர் ஏழு பேர்கள் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டனர். பயங்காரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 13 இளைஞர் யுவதிகள் அரசதரப்பினால் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் போரின் போது சண்டையில் ஈடுபட்டிருக்கும் எதிர் படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் அல்ல. சையினைற்றை கழுத்தில் தொங்கவிடும் புலிகள் போரின் போது எதிரிகளிடம் உயிருடன் அகப்படுவதில்லை. சிலர் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டும் ஒரு சிலர் அகப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் நாட்டில் அமுலிலுள்ள ஒரு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களே போரின் போது புலிகளால் கைது செய்யப்பட்டவர்களுடன் பரிமாறப்பட்டனர். இது ஒரு புறம் இருக்க ஒப்புதல் வாக்கு மூலம் அளிப்பதில் இச்சந்தேக நபர்கள் எந்தெந்தளவு சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள் என்பதும் போர்க் கைதிகளுக்கான ஜெனிவா சாசனத்தின்படி துன்புறுத்தல்களுக்கு இடமற்ற வகையில் நடத்தப்பட்டவர்கள் அல்லர் என்பதையும் இவர்கள் விடயத்தில் சாதகமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் என்பதில் தவறில்லை. இலங்கை அரசாங்கம் ஜெனிவா ஒப்பந்தத்தினை ஒப்பமிட்டு ஏற்றுக் கொண்டதுமில்லை என்பதும் நோக்கத்தக்கது. அதே வேளை, விடுதலைப் புலிகள் தாமே ஏற்றுக் கொண்டுள்ளபடி போர்க்கைதிகளை துன்புறுத்தவில்லை. மிக நன்றாகவே நடாத்தினார்கள். இதனை ஒவ்வொரு தடவையும் புலிகளால் விடுவிக்கப்பட்ட கைதிகள் அனைவருமே பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

### ஆதரவாளர்களுக்கு விடுதலையில்லை

எவ்வாறாயினும், உண்ணா



விர மிருக்கும் கைதிகளிலும் பார்க்கவும் கடுமையான குற்றம் சுமத்தப்பட்டவர்கள் கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் விடுவிக்கப்பட்டு விட்டார்கள் என்ற உண்மையை நோக்கும் போது, அரசாங்கம் இன்று ஏற்றுக்கொண்டுள்ள அரசியல் கொள்கையின் அடிப்படையில், கைதிகளாகவுள்ள அனைவருமே விடுவிக்கப்படக்கூடியவர் ஆவார். ஆனால் இதற்கென ஒரு அரசியற் தீர்மானம் எடுக்கப்படாமல் இருக்கிறது ஆச்சரியம் தரும் விடயமாகும். இதனிடையே நகைச்சுவை தரும் திடுக்கிடும் செய்தி ஒன்றும் வெளி வந்திருக்கிறது. களுத்துறைச் சிறைச்சாலை சந்தேக நபர்களில் பத்துப்பேர்கள் வரை கடந்த ஆண்டிலேயே விடுதலைக்கான உத்தரவுகள் வழங்கப்பட்டவர்கள் என்றும் மர்மமான காரணங்களுக்காக இது வரை விடுவிக்கப்படாமல் இருக்கின்றனர் என்றும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனராம்.

களுத்துறை சிறைக்கைதிகள் முன் வைத்திருக்கும் ஒரு காத்திரமான கேள்வியானது, புலிகள் மீதான அரசாங்கத்தின் தடை நீக்கப்பட்ட பின் அது நடைமுறையில் பிரதிபலிக்கவில்லை என்பதாகும்.அதாவது தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் சார்பில் செயற்பட்டவர்கள் விடு விக்கப்படவில்லை. இயக்கம் மட்டும் விடுவிக்கப்பட்டிருக்கிறது. இது புதிரானது. இந்தத் தடை நீக்கம் சமாதனப் பேச்சுக்களில் புலிகளை பங்கு கொள்ள வைப்பதற்காக வெளியிடப்பட்ட சம்பிரதாயத் திற்குரிய பிரகடனம் மட்டும் தானா? 1971 இல் அரசைக் கைப்பற்றுவதற்கு ஆயுதப்போரை நடத்தி அழிவுகளை ஏற்படுத்திய ஜே.வீ.பீ மீதான தடையம் நீக்கப்பட்டது. அதனால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான அதன் உறுப்பினர்களும் விடுவிக்கப்பட்டனர்.இது வரலாறு.

**சர்வன்**

களுத்துறைத் தமிழ் கைதிகளை பார்வையிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்தன கைதிகளை விடுவிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதியிடமேயிருப்பதாகக் கூறியுள்ளார். உண்ணாவிரதிகள் மரணமடைந்தால் சமாதானத்திற்கான புறச சூழல் கெட்டு விடுமோ என்று சமாதான விரும்பிகள் அச்சம் அடைந்துள்ள சூழலில் அவைகள் யாவற்றையும் விடவும் எமக்கு நாமே போட்டுக் கொண்டிருக்கும் கால்பூட்டே சமாதானத்தின் பாதையில் குறுக்கே கிடக்கிறது என்னும் விடயம் எம்மை மீண்டும் விழிப்படையச் செய்கிறது.

சண்டை ஒரு சட்டத்தின் விதிகளை அனுசரித்து நடத்தப்படவில்லை. சமாதானம் எப்படி அடையப்பட வேண்டும் என்பதை வரையறை செய்வதும் சட்ட ஏற்பாடுகளல்ல. பயங்காரவாதத் தடுப்புச்சட்டத்தின் கைதிகள் விடுதலைக்கு சட்டத்தின் விதிகள் தடையாக இருப்பதாகக் கூறலாமா? பொது மன்னிப்பு எங்கே?

---

# மனையடி சாஸ்திரம்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

25 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், மனைவி மரண மடைவாள்.

26 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், செல்வ விருத்தி உண்டாகும்.

27 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், கடவுள் கிருபையுண்டாகும், தரணியோர் மதிக்க வாழ்வார்.

28 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், தெய்வீக அருள் உண்டாகும், எதிரிகள் அஞ்சுவார்கள்.

29 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், பசு பாக்கியம் உண்டாகும்.

30 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், அனேக யோகங்கள் உண்டாகும். ஆண பெண்பிள்ளைகளைப் பெறுவார்கள்.

31 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், சிவபெருமானின் அருள் உண்டாகும்.

32அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், வேலைக்காரர்கள பணி செய்யச் சுகமாய் வாழ்வார். பிள்ளைகள், அன்னிய நாடுகள் சென்று வாழ்வார்கள்.

33 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், பல நன்மைகள் உண்டாகும், குடிமை வாழ்வு உயரும்.

34 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால்,வேறு இடமாற்றம் செய்ய நேரும்.

35 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், லட்சுமி கடாட்சமுண்டாகும்.

36 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால்,அரசர்களுக்கு ஈடாக வாழ்வார்கள்.

37 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், கால் நடைகள் விருத்தி அடையும், இன்பங்களும இலாபங்களும் உண்டாகும்.

38 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், வறுமை வாட்டும்.

39 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், நலம் பொருந்திய வாழ்வு.

40 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், பகைகள் உண்டாகும்.

41 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், செல்வந்தராகலாம்.

42 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், அஷ்டலக்சுமிகளும் வாசஞ் செய்வார்கள்.

43 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், நன்மையில்லை.

44 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், பார்வை இழக்க நேரும், பொருள்கள் நாசமாகும், பேய்கள் வாசஞ் செய்யும்.

45அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், குறைவில்லாத செல்வங்கள் உண்டாகும்.


46 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், தரித்திர முண்டாகும், நோய்கள் தீரும்.

47அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், பொருள் நாசமாகும்.

48 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், தீவிபத்து உண்டாகும், தோஷங்கள் ஏற்படும்.

49 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், குற்றங்களால் பொருள் இழப்பும், தரித்திரமும், துன்பமும் தோன்றும்.

50 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், நன்மையில்லை.



51 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், வம்பு வழக்குகள் உண்டாகும்.

52 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், தானிய விருத்தியுண்டாகும்.

53 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், பெண்களால் நஷ்டம்.

54 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், அரசாங்கத்தால் ஆபத்து.

55 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், உறவினர் பகையாவார்.

56 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், புத்திரப் பேறு உண்டாகும்.

57 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், சந்ததி இராது.

58 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், மரணம் நேரிடும்.

59 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், கவலை மிகுதியாகும்.

60 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், வியாபார விருத்தியும் வளர்ச்சியும் உண்டாகும்.

தொகுப்பு
**ஆசிரியர் குழு**

61 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், வம்பு கலகங்கள் உண்டாகும்.

62 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், வறுமைகள் உண்டாகும்.

63 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், லட்சுமி வாசமும், பகைவர் நாசமும், பொருள்களின் சேர்க்கையும், இன்பமும் உண்டாகும்.

64 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், நன்மைகள் மிகவுண்டு, கடகங்கள், தோடாக்கள் பரிசுகள் பெறுகின்ற யோகமுண்டாகும்.

65 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், மனையாள் மரணம்.

66 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், யோக பலன்கள் மிகவும் உண்டாகும்., புகழும் பெருகும்.

67 அடிகள் அகலமோ நீளமோ வைத்தால், பொருள்கள் நாசமடையும், பேய் மிரட்டல் உண்டாகும்.

# போர்க்களம்

## தொடர்கதை

அன்று வெள்ளிக்கிழமை. மாலை நேரப் பூசைக்கான ஏற்பாடுகள் செந்தில்வேல் குருக்கள் செய்து கொண்டிருந்தார். பெண் அடியார்கள் கோயிலின் உள்ப் பகுதியைச் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தனர். கோயிலின் தெற்குப் பக்கமாக நிற்கும் கூழா மரத்தைக் கன்னிப் பெண்கள் வலம் வந்து கொண்டிருந்தனர். நான்கு வீதிகளும் கூரையால் மூடப்பட்ட அந்த பிரமாண்டமான கோயில் மண்டபத்துள் சிறுவர்கள் மிகமிக அமைதியாக இருந்தனர். அதற்குக் காரணம் கோயில் தலைவர் தான். ஆள் சரியான கொதியன் என்று மக்கள் பேசிக் கொண்ட போதும் கோயிலை மிகவும் சிறப்பாக நிர்வகித்துக் கொண்டிருந்தார். உற்சவகாலமானாலும் சரி மற்றைய நாட்களானாலும் சரி ஒழுங்காகப் பூசைகள் நடை பெறும். சிறுவர்கள் முதற்கொண்டு வயோதிபர்கள் வரை தலைவருக்குப் பயந்து நடுங்குவார்கள்.

கோயில் உதவியாளர் காண்டாமணியை அடிக்கும் போது சௌமியா கிணற்றடியில் காலைக கழுவி விட்டு கோயிலின் உள்ளே நுழைந்தாள்.

அம்மன் கோயில். அதுகும் கண்ணகை அம்மன் கோயில் ஆதலால் ஏராளமான பெண்கள் வந்திருந்தனர்.

இலங்கையை ஆண்ட கஜபாகு மன்னன் அக்கோயிலைக கட்டியதாக அவ்வூர் மக்களிடையே ஒரு பூர்வீகக் கதை உலா வருகிறது.


உண்மையிலேயே அக் கோயிலில் வீற்றிருக்கும் கண்ணகை அம்மன் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்பது அவ்வூர் மக்களின் நம்பிக்கை.

மிகவும் பிரமாண்டமான கோயில் உள்வீதிச் சுவர்களில் சிலப்பதிகாரக் காப்பியக்கதை சித்திரங்களாக வரையப்பட்டிருந்தது. அரச சபையில் கண்ணகி கையில் சிலம்புடன் வழக்குரைக்கும் காட்சி தத்ரூபமாக வரை யப்பட்டிருந்தது. ஊர்மக்கள் அடிக்கடி அச் சித்திரத்தைப் பற்றி கதைத்துக் கொள்வார்கள். தினமும் கோயிலுக்கு வரும் பக்தர்கள் கூட அச்சித்திரத்தை அடிக்கடி பார்த்து வணங்குவதுண்டு.

பெண்கள் குறிப்பாக கன்னிப்பெண்கள் தம்குறைகளை அம்மனிடம் கூறி நிவர்த்தி பெறுவதற்காக ஏராளமாக வருவார்கள்.

கோயிலைச் சுற்றி ஒரே பன்ங்காடு. கிட்டத்தட்டஇருநூறு ஏக்கர் நிலத்தில் பனைகள் காடாக வளர்ந்திருந்தன. வேம்பு, ஆல், அரசு, கூழா, வேங்கை போன்ற பல சாதி மரங்கள் ஆலயச் சூழலில் செழித்து வளர்த்திருந்தன. பகலில் சூரியனின் கதிர்களை கோயிற் பிரதேசத்தில் காணமுடியாது. பொழுதுபட்டால் மயான அமைதி. மிகவும் பயங்கரமாக இருக்கும். பொதுவாக பகல் பன்னிரண்டு மணிக்கும் பொழுதுபட்ட பின்பும் கோயிற் சூழலில் யாரும் உலாவுவதில்லை.

அதுக்குக் காரணமாக கர்ண



பரம்பரைக் கதை ஒன்று உள்ளது.

பல வருடங்களுக்கு முன்பு கோயிலுக்கு முன்பாக உள்ள பனை வெளியில் சிறுவர்கள் மாடு மேய்ப்பது வழக்கம். ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணிக்கு இரண்டு சிறுவர்கள் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார்களாம். அப்பொழுது கோயில் வாசலில் நின்ற ஒரு வயோதிப மாது இவர்களைக் கை தட்டி அழைத்தாளாம்.

சென்ற 'சிறுவர்களிடம் ''தலையில் ஒரே பேன். கடிதாங்க முடியவில்லை பேனை எடுத்து விடுங்கோ'' என்று கூறினாளாம்.

சிறுவர்கள் பேனை எடுப்பதற்காக தலைமுடியை கையால வகிர்ந்த போது தலை முழுவதும பல கண்கள் இருந்தனவாம். பிள்ளைக்ள் பயத்தால் கத்திய போது கிழவி மறைந்து விட்டாளாம். கிழவியின் கையில் இருந்த தடி முளைத்து பெரிய விருட்சமாக இன்றும் கோயிலின் தெற்குப் பக்கத்தில் நிற்கிறது. என்று அவ்வூர் மக்கள் அடிக்கடி கூறுவார்கள். அக்கூழா மரத்தை புனிதமான மரமாக அவ்வூர் மக்கள் கருதுவார்கள். அதில் அம்மன் வீற்றிருப்பதாகவும் அவர்கள் நம்புகின்றனர். கூழா மரத்தின் கீழ் நாகசர்ப்பத்தின் சிலை ஒன்று கருங் கல்லால் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதற்கு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பாலால் அபிசேகம் செய்யப்படும். கோயில் மூலவிக்கிரகத்தை வணங்குவதை விட கூழா விருட்சத்தையே மக்கள் வணங்குவார்கள். திங்கட்கிழமைகளில் கூழாவுக்குக் கீழ் பொங்கிப் படைப்பார்கள். கன்னிப் பெண்கள் நேர்த்திக் கடன் வைப்பதும் குங்கும அர்ச்சனை செய்வதும் அம்மரத்துக்குத்தான். அம்மரப் பொந்தொன்றில் வெள்ளை நாகமொன்று நீண்டகாலமாகக் குடியிருப்பதாகவும் மரத்தின் கீழ் குருக்கள் வைக்கும் பாலை ஆட்கள் இல்லாத நேரங்களில் வந்து குடித்து விட்டுச் செல்வதாகவும் மக்கள் கூறுவர். சிலர் தாம் அதைக் கண்டதாகவும்,வெள்ளி அறுனாக்கொடி போல் உள்ளது என்றும் கூறுவர். சின்னாச்சி வாத்தியார் என்னும் மூதாட்டி வெகு காலமாகக் கோயிலில தொண்டு செய்து வந்தார். அவர் கூட்டிக்குவிக்கும் குப்பைக்குள் அடிக்கடி அந்த வெள்ளை நாகம் வந்து சுருண்டு படுப்பதாகவும் அதை அவர் குப்பையோடு குப்பையாக அள்ளி கடகத்தில் போடும் போது அது துள்ளிப் பாய்ந்து ஓடுவதாகவும் பழைய கதை ஒன்று உள்ளது.

சௌமியாவின் குடும்பத்தினருக்கு அவ்வாலயத்தின் மீது அதீத நம்பிக்கை இருந்தது. ''அம்மன் நான் கேட்டதை ஒரு போதும் தராமல் விட்டதில்லை'' என்று அடிக்கடி சௌமியாவின் அம்மா மனோன மணி கூறுவாள்.

சௌமியாயும் அந்த நம்பிக்கையுடன் தான் கோயிலுக்கு வந்திருக்கிறாள். அம்மா சொல்வது போல் அம்மனிடம் யாவற்றையும் கூறி விட்டு செந்தில்வேல் குருக்களைக் கொண்டு ஒரு அர்ச்சனை செய்தால் எல்லாம் சரியாகி விடும் என்பது அவளது நம்பிக்கை.

திரைச்சேலை மெல்ல விலகியது. குருக்கள் அடுக்குத்தீபத்தை மிக நேர்த்தியாக அம்மனுக்குக் காட்டிக் கொண்டிருந்தார்.

''அம்மா.... தாயே... என்னுடைய பிரச்சினைக்கு ஒரு முடி வைத்தா தாயே...... நீ அன்றைக்கு கோவலனைப் பிரிஞ்ச நிலையிலைதான் நான் இருக்கிறன். என்னுடைய கணவனைப் பற்றி செய்தி ஒன்றும் எனக்குத் தெரியாது... இந்த நிலையிலை எனக்குக் கல்யாணம் பேசுகிறார்கள்.... நான் என்னம்மா செய்யிறது... உன்னுடைய கணவன் கொலையுண்டதுக்காக மதுரையையே எரித்தாயம்மா... என்னுடைய நிலையும் அது போலவோ தெரியவில்லை.

சௌமியாவின் இதயம் எரிமலையாகக் குமுறியது. அவளால துயரத்தைத் தாங்க முடியவில்லை. கண்களால் கண்ணீர் கசிந்தது.

## அங்கம் 01

மூலஸ்தானம் கும்மிருட்டாக இருந்தது.

''சௌமியா திருநீற்றைப் பிடியம்மா..'' என்றார் குருக்கள்.

திடுக்குற்று சுய நினைவுக்கு வந்த சௌமியா குருக்களை நிமிர்ந்து பார்த்தபடி இடது கையின் மேல் வலது கையை வைத்து நீட்டினாள்.

சௌமியாவைப் பற்றிய முழு விபரமும் குருக்களுக்கும். அவளுடைய தோழி கார்த்திகாயினிக்கும் மட்டும் தான் தெரியும். குருக்கள் சௌமியாவுக்கு திருநீற்றைக் கொடுத்து விட்டுச் சென்றார். உதவியாளர்கள் தீர்த்தம், சந்தனம், குங்குமம்,பூ முதலியவற்றைக் கொடுத்தனர்.

அர்ச்சனை நடை பெற்றுக் கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமைகளில் அர்ச்சனை செய்வதற்கு மூன்று நான்கு மணத்தியாலங்கள் காத்திருக்க வேண்டும்.

சௌமியா எதிலும் அவசரப் படுபவளல்ல ஆறுதலாகச் செய்யலாமென்று நினைத்து மண்டபத்தில் அமர்ந்திருந்தாள். அப்போது அர்ச்சனை செய்து பிரசாதத்தை வாங்கிக் கொண்டு சௌமியாவின் அருகில் வந்து அமர்ந்த கார்த்திகாயினி''உனக்கென்ன பக்கத்திலை வீடு ஆறுதலாய்ப் போகலாம். நான் இரண்டு மைல் போக வேணும்'' என்றாள்.

சௌமியா பதிலேதும் சொல்லவில்லை. லேசாகச் சிரித்தாள்.

''என்ன சிரிக்கிறாய்..''

''ஏன் சிரிக்கக் கூடாதா..''

''நல்லாச் சிரி..'' என்றவள் சிறிது தாமதித்து விட்டு கனடாப் பிரச்சினை எந்தளவிலை நிக்குது என்றாள்.

சிறிதுநேரம் மௌனமாக இருந்த சௌமியா பின் சொன்னாள். ''எல்லாம் கரைச்சலாய்த்தான் கிடக்கு. மாப்பிள்ளை என்னைச செய்ய வேணுமெண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறாரெண்டு புறோக்கர் அம்மாவுக்குச் சொன்னபடி.... அம்மாவை புறோக்கர் வளைச்சுப் போட்டார். அதாலை ஒரே தொல்லை...''

''அப்பாவாலை பிரச்சனை இல்லையே..''

''அப்பாதான் வெளிநாட்டுக் கல்யாணஞ் செய்யிறேல்லை எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறார்... ஆனால் எனக்கு நம்பிக்கை இல்லை.. எங்கடை வீட்டிலை எதையும் தீர்மானிக்கிறது அம்மாதான். முதலிலை அப்பா சம்மதிக்க மாட்டார். பிறகு அம்மா வளைச்சுப் போடுவா... அதுதான் பயமாய் இருக்கு... ஒரே ஒரு பிள்ளை அதை வெளிநாட்டுக்கு அனுப்பேலாது எண்டு பிடிவாத

### கே.வி.குணசேகரம்

மாய் அப்பா நிக்கிறார்''

''நான் வந்து அப்பாவுக்கு உசார் குடுக்கட்டே..'' என்று கேட்டாள் கார்த்திகாயினி.

''வந்து குடேன்...''

''செமியா அர்ச்சனைத் தட்டைக் கொண்டுவாம்மா...'' என்றார் குருக்கள்.

''நான் போட்டு வாறான் சௌமி.. நாளைக்குக் காலமை வீட்டை வாறான்'' என்று விடை பெற்றாள் கா[illegible]திகாயினி.

சௌமியா அர்ச்சனைத் தட்டைத் தூக்கிக் [illegible]ண்டு போய்க் குருக்களிடம் கொடு[illegible]ாள். அதைப பெற்றுக் கொ[illegible] குருக்கள் அவளைக் கனிவோ[illegible]ு பார்த்தார். ஓரிரு நிமிடங்க[illegible] அவர் மனதில் பிரளயம் ந[illegible]பெற்றது. கவலைப் படாதை [illegible]மி. அம்மன் உனக்கு எந்தத் துன்பமும் வர விடா....'' என்றவா[illegible]ு உள்ளே சென்றார்.

சௌமியாவி[illegible] குடும்பத்தினரோடு குருக்களின் குடும்பம் மிகவும் நெருக்கமாய் இருந்தது. தினமும் மாலை வேளைகளில் குருக்களின் பிள்ளைகளுக்கு சௌமியா பாடம் சொல்லிக் கொடுப்பாள்.

திவாகரனுடன் சௌமியா கோயிலுக்கு வரும்போதெல்லாம் குருக்கள் அவர்களுக்கு பல உதவிகள் செய்து கொடுத்திருக்கிறார்.


(தொடரும்)



# கம்பியூட்டர்க் கல்வி



## இன்ரநெற்றை விழுங்கப் போகும்



(சென்றவாரத் தொடர்ச்சி.....)

''கிரிமினல்கள் அப்படி கைக்குள் போட்டுக்கொண்டு விட்டால் அந்த கம்பியூட்டர்களை வைத்து பிரமாண்டமான அளவில் டிஸ்ரியூட்டட் டினையல் ஆ.்.ப் சர்வீஸ் (**DDOS**) தாக்குதல்களைத் தொடுக்க முடியும். அதுமட்டுமல்ல -ரகசியமான, முக்கியமான தகவல்களைத் திருடவோ சேதப் படுத்தவோ முடியும், மேலும் நுணுக்கமான முறைகளில் ஒரு நெட்வேர்க்கைக் குழப்பித் தொந்தரவு செய்ய முடியும்'' என்கிறது அந்த அறிக்கை.

''**How to own the internet in your Spare Time**'' என்ற இந்த ஆராய்ச்சிக் கட்டுரை (**O** -வுக்கு பதிலாக ஜீரோ போடுவது கம்பியூட்டர் கிரிமினல்களின் பழக்கம்) இந்த வருட ஆகஸ்டில் நடக்கப் போகும் யூஸ்னிக்ஸ் பாதுகாப்பு கருத்தரங்கத்தில் அவர்கள் படிக்கப்போகும் ப்ரெசன்டேஷனின் முன னோட்டம்.

**SQLsnake, Code Red, Nimda** போன்ற வலை முழுங்கி வைரஸ்கள் இனி இன்டர்நெட்டிற்கு என்னவெல்லாம் ஆகப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் தான் என்கிறது இக்கட்டுரை.


### கம்பியூட்டர் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிப்பு

''ஒரு புறோகிறாமின் தீவிரத்தைக் கணிசமாக அதிகரிக்க பல டெக்னிக்குகள் இருக்கின்றன. அவற்றை யாரும் இது வரை பயன்படுத்தவில்லை என்றாலும் இனி உஷாராக இருக்க வேண்டும்'' என்று அந்த ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்தார்கள்.

புறோகிறாமை எழுதுபவர் இன்னும் பல உத்திகளைப் பயன்படுத்த வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக 'ஹிட்லிஸ்ட் ஸ்கேனிங்' என்று ஒரு உத்தி ஒரு சமீ[illegible]த்தில் வந்த வார்ஹோல் (**Warhol**) என்ற புறோகிறாம் இதை வைத்துத்தான் எழுதப்பட்டது. இந்த உத்தியின் மூலம் எழுதிய வைரஸ் 15 நிமிடங்களில் ஆயிரக்கணக்கான கம்பியூட்டர்களைத் தாக்கக் கூடியது.

இன்று இந்த மாதிரி ஒரு புறோகிறாம் ஒரு கோடிக்கு மேற்பட்ட கம்பியூட்டர்களைத் தீர்த்துக் கட்டும் என்கிறார்கள் அந்த மூன்று ஆராய்ச்சியாளர்கள். பத்து லட்சம் கம்பியூட்டர்கள் பாதிக்கப்பட்டாலே அது நினைத்துப் பார்க்க முடியாத சேதம்தான். ஒரு கோடி கம்பியூட்டர்கள் காலி என்றால் இன்ரநெற் என்னவாகும்?

இந்த சூப்பர் புறோகிறாம்களைக் கொண்டு ''மிகப் பரவலான டி.டி.ஓ.எஸ் தாக்குதலைத் தொடுக்கலாம். தற்போது உள்ள டி.டி.ஓ.எஸ் தாக்குதலைத் தடுப்பதற்கான அதி நவீன துப்பறியும் கருவிகளையும் பாதுகாப்புத் தொழில் நுட்பத்தையும் வைத்துக் கொண்டு கூட அவ்வளவு பரவலான தாக்குதலைக் குறைப்பது முடியாத காரியம். இது போன்ற தாக்குதல்கள் மின்வணிக வெப்சைட்கள், செய்தித்




ஸ்கோன்களின் எண்ணிக்கை சூப்பர் புறோக்கிறாங்கள் நடத்தக்கூடிய ஸ்கோன்கள்.

## சூப்பர் வைரஸ் !

தளங்கள், ஒருங்கிணைப்பு மற்றும் செயல்பாட்டு உள்கட்டமைப்பு, குறிப்பிட்ட சில ரூட்டர்கள் அல்லது ரூட் நேம் சேவர்களை செயலிழக்கச் செய்து விடும்'' என்று அந்த அறிக்கை எச்சரிக்கிறது.


''சுருக்கமாகச் சொன்னால் உங்கள் கட்டுப்பாட்டில் ஒரு மில்லியன் இன்ரநெற் கம்பியூட்டர்கள் இருந்தால் அதன் பின் விளைவுகள் நிஜமாகவே பயங்கரமாக இருக்கும். நாடுகளுக்கு இடையில், அல்லது பயங்காரவாத செயல்களில், இந்த லெவலில் நடத்தப்படும் தாக்குதலுக்கு முக்கியமான பங்கு இருக்கும்'' என்கிறது அறிக்கை.

இந்த ஆபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஸ்டானி.். போர்ட், பாக்ஸன், வீவர் ஆகியோர் 'நோய்த் தடுப்பு மையம்' ஒன்றை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். 'வைரஸ்' ஒரு கிருமிக்கான வார்த்தை என்பதால் அமெரிக்காவின் தேசிய சைபர்பாதுகாப்பைப் பாதிக்கும் வைரஸ் தாக்குதலை 'நோய்' என்கிறார்கள்.

* * *

# அர்த்தமுள்ள இந்து மதம்

கவிஞர் கண்ணதாசன்



அவர் தாமும் பேசிப் பார்க்க வேண்டும்; ஆனால் தமிழைத தாய்ப்பாஷையாகக் கொண்ட மீடியம் மூலம், அந்த மீடியத்திற்குக் கொஞ்சமும் பழக்கமில்லாத பாஷையாகவும் தமது தாய்ப்பாஷையாகவும் இருக்கும் உருது பாஷையில் ... பதிலும் உருது பாஷையில் வந்தால் தான், அது மீடியத்தில் ஏற்பட்டபதில் அல்ல, இறந்தவருடைய வாக்கே என்று உறுதியாகக் கூற முடியுமென்று சொன்னார். "தம்பியார் யாரும் இவ்வாறு அதுவரை யோசித்துப் பார்க்கவில்லை; ஆபீசர் சொல்வது சரியான சோதனையே; சோதித்துப் பார்ப்போமே" என்று பார்த்தார். 'உருது' ஒரு வார்த்தையும் தெரியாத பிராமணச் சிறுவன் மீடியாக இருக்க, அவன் மூலம் உருது பாஷையில் பதில் வரவே ஆபீசரும் மற்றவர்களும் திகைத்துப் போனார்கள்.

மேற்கொண்டு பேச வேண்டும் என்று ஆபீசரும் விரும்பவே ஆவி உலகத்திலிருந்து அவருடைய கொழுந்தியாள், 'இப்பொழுது மேற கொண்டு பேச வேண்டாம்; இங்கு பேசுகின்ற முறையிலேயே வீட்டில் வைத்துப் பேசுங்கள்; வீட்டில் இருக்கும் மகள் மீடியமாக இருக்கிறாள்' என்று அறிவித்து விட்டாள். அதன்படி அவர் வீட்டில் வைத்துப் பேசவும், அதன் உதவியைப் பிறருக்கு எடுத்துச் சொல்லவும் ஆரம்பித்து விட்டார். ஆனதால் நல்ல சக்தி வாய்ந்த மீடியமாக இருந்தால், மீடியத்திற்குத் தெரியாத பாஷைகளிலும் பேச்சு நிகழ்த்தலாமென்பதும் அதில் மீடியத்தினுடைய அறிவின் விளக்கமோ மீடியம் கள்ளத்தனமாக வேண்டுமென்ற தன்னுடைய கருத்தை ஆவி உலகக் கருத்தாக வெளிப்படுத்துகின்ற போலித்தனமோ, ஓர்அணுவளவும் கலக்க முடியாதென்பதும் பெறப்படுகின்றதல்லவா?

* * *

## உலவும் ஆவிகள்

**மறதியாகப் பணம் வைக்கப்பட்ட இடத்தை இறந்தவர் அறிவித்தல்:**

ஆவி உலகத்திலிருந்து அறிவித்தபடியே அந்த வருமான வரி அதிகாரி தன்னுடைய வீட்டில் உருது பாஷையில் தன்னுடைய சொந்த மகளை மீடியமாக வைத்துப் பேசியதில், அவருடைய மனைவியின் தங்கை ஆவியுலகத்திலிருந்து பல அரிய விஷயங்களை அறிவித்ததாகத் தெரிவித்தார். அவற்றுள் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம். ஒரு நாள் அவருடைய சட்டைப் பையில் போட்டு வைத்திருந்த ஒரு ரூபாயைக் காணாத காரணத்தால், அவர் தம்முடைய வேலைக்காரன் திருடியிருக்கலாம் என்று கருதி, அவனைக் கடுமையாகக் கோபித்து அடித்து விட்டார். மறுமுறை ஆவி உலகத்திலிருந்த தன்னுடைய கொழுந்தியாளோடு பேசியபோது காணமற்போன ரூபாயைக் குறித்து அவர் ஒன்றும் பேசாதிருக்க, அந்த அம்மையார் அதைக் குறித்துப் பேசியதாகவும், அந்த ரூபாய் மேல் பையில் இருப்பதாகவும், அவரே ஞாபகக் குறைவாக அதில் போட்டிருக்க, கீழ்ப் பையில் போட்டதாக எண்ணிக் கொண்டதாகவும், அந்த வேலைக்காரனைப் பேசியதும் அடித்ததும் பாவமான காரியமென்றும், அந்தப் பாவத்தைப் போக்குவதற்கு அவனிடம் உண்மையைச் சொல்லி, அவனுக்கு ஒரு ரூபாய் வெகுமதி கொடுக்க வேண்டும் என்று அறிவித்ததாகவும், அவர் அந்தப்படியே நடந்து கொண்டதாகவும், அதிலிருந்து ஆவி உலகத்தில் புண்ணியப் பகுதியிலுள்ள சுற்றத்தார் தாங்கள் இருந்த வீட்டில் ஏதாவது விபரீதமான காரியங்கள் நடந்தால், அதை எவ்வளவு கருத்தோடு கவனித்து வருகிறார்கள் என்பதை அவர் உணர்ந்து கொள்ள முடிந்ததாகவும் அறிவித்தார்.

* * *

**இறந்த இஸ்லாமியர் தானாகவே வலிய வந்து தன் மகனது வியாகூலத்தை நீக்கல்:**

ஈரோடு மார்க்கத்தில் கரூருக்குச் சமீபமாயுள்ள புகழூரிலே ஒரு நாள் இரவு 1 மணிக்கு இறந்து போன சுற்றத்தாருடன் பேசிக் கொண்டிருக்கையில் ஆவி உலகத்திலிருந்த ஓர் இஸ்லாமியர் வந்து தாம் அவ்வூரிலுள்ள (போஸ்ட் மாஸ்டர்) தபால் அதிகாரியினுடைய தகப்பனார் என்றும், தம்முடைய மகன் தூக்கம் வராமல் விழித்துக் கொண்டு படுக்கையில் உட்கார்ந்து கொண்டு இருப்பதாகவும், அவன் அவனுடைய மனைவியின் உடல் நிலை விஷயமாகவும் அவளுடைய பிள்ளைப் பேறு விஷயமாகவும் நினைத்துக் கொண்டே இருப்பதாகவும், அவனைத்தயவு செய்து கூட்டிக் கொண்டு வந்து தம்மோடு பேச வைக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டராம்.

இரவில் 1 மணிக்கு அவரை அவ்விதம் கூப்பிடுவது சரியல்லவே என்று கேட்டபோது, "அவன் தூங்கிக் கொண்டிருப்பானானால் எழுப்பக் கூடாதுதான். ஆனால் விழித்துக் கொண்டிருக்கும் பொழுது தெருவாயில் கதவை லேசாகத் தட்டினாலே அவன் வந்து திறந்து விடுவான்; அதைப்பற்றி யாதும் யோசிக்க வேண்டாம். அந்த உதவியைச் செய்து தர வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அதன்படி ஒரு வேலைக்காரனை அனுப்பி, 'அவருடைய வீட்டுக் கதவைத் தட்டிப பார்; விழித்திருந்து உடனே கதவண்டை வந்து யாரென்று கேட்டால், விவரம் சொல்லிக் கூட்டிவா; அல்லாவிடில் வந்து விடு' என்று அறிவித்திருந்தோம். அவனும் (போஸ்ட் மாஸ்டர்) தபால் அதிகாரி வீட்டுக்குச் சென்று லேசாகக் கதவைத் தட்ட, அவர் எழுந்து வந்து யாரென்று கேட்டு விவரம் அறிந்து, தகப்பனாரிடம் பேச வந்து விட்டார். நாங்கள் இறந்தவர்களோடு பேசும் வழக்கமுள்ளவர்கள் என்பது மாத்திரம் அவருக்கு முன்னமேயே தெரியும். ஆவி உலகத்திலுள்ள தந்தையார் தமது மகனிடம், 'கவலைப்பட வேண்டாம்; மனைவிக்குச் சுகமான பிரசவம் நடை பெறும்; பிறக்கப் போவது ஆண்குழந்தை' என்று சொல்லி, குடும்ப சம்பந்தமாக எல்லா நலங்களும் உண்டாவதற்கு மேலுலகத்தில் தாமும் ஆண்டவனிடம் பிரார்த்தித்து வருவதாகவும், வேறு சில இடையூறுகளை வரவொட்டாமல் தாம் தடுத்து விட்டதாகவும் சொல்லி மகனை உற்சாகப்படுத்தி அனுப்பி விட்டார்.

பின்னர், அதன்படியே மனைவிக்குச் சுக பிரசவம் நடந்து ஆண் மகவு பெற்றெடுத்தாள் என்பதை அறிவோம். இதிலிருந்து ஆவி உலகத்திலுள்ளவர்கள், நாம் நினைத்த மாத்திரத்தில் அந்த இடத்திற்கு வந்து தம்முடைய நிலைகளை நன்றாக அறிய முடிகிறதென்பதை உணருகிறோம். இதனை உபமானமாகக் கொண்டு விட்டால் சர்வவல்லமையுள்ள ஆண்டவன், நாம் நினைப்பதையும் பேசுவதையும் சொல்வதையும் அறிந்து கொண்டும் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருக்க முடியும் என்பதை யாவரும் உய்த்து உணர்ந்து கொள்ள முடியும் அல்லவா?

* * *

**இறந்தவர் தம் தம்பியிடம் தனது மகனுடைய அந்தரங்கச் செயல்களை அறிவித்து மணம் முடிக்கச் செய்தல்:**

ஒரு நாள் மதுரைக்கு வந்திருந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார் ஒருவர், அம்மைய நாயக்கனூருக்குத் தம்முடைய சொந்த மோட்டார் காரில் வந்து, காலம் சென்ற தம் தந்தையாருடன் பேசிப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார். அதன்படியே அவர் தம் தந்தையாருடன் பேசிக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## அவோகாட்றோவின் எண் (Avogadro's Number) $6.02 \times 10^{23}$

விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் அனைவரிற்கும் இவ்வெண மிகவும் பரிட்சயமானதே. இருந்தும பௌதிகம், இரசாயனம் போன்ற பாடங்களில் கேட்கப்படும் வினாக்களில் மாணவர்கள் இவ்வெண்ணை சரியாகப் பயன்படுத்துவதில்லை. அதாவது அதிகமாக இவ்வெண்ணைத் தவறான இடங்களில் பயன்படுத்துவார்கள். எனவே இவ்வெண்ணைப் பற்றியும், இது எவ்வளவு பிரமாண்டமான எண் எனவும் அனைவரும் அறிந்திருக்க வேண்டியதுஅவசியமாகிறது. இவ்வெண் எவ்வளவு பிரமாண்டமான எண் என அறிந்திருப்பதன் மூலம் இவ்வெண் தவறாகப் பிரயோகிக்கப்

... (Carbon mono oxide, Co) இனை ஒரு வித தாக்கிகளும் மீதமில்லாமல் பெற வேண்டும். இதனை நாம் 12 கிராம் காபனில் எத்தனை காபன் அணுக்கள் உள்ளன என்பதைப் பற்றி எவ்வித தகவலும் அறியாமலே செய்யலாம். நமக்குத் தெரிய வேண்டியதெல்லாம் அவ் எண்ணிக்கை 16 கிராம் ஒட்சிசனிலுள்ள ஒட்சிசன் அணுக்களின் எண்ணிக்கைக்குச் சமன் (ஒரு கிராம் அணு நிறை) அல்லது 28 கிராம் காபனோரொட்சைட்டிலுள்ள Co - மூலக் கூறுகளின் எண்ணிக்கைக்குச் சமன் (ஒரு கிராம் மூலக் கூற்று நிறை) என்பதாகும்.

12 கிராம் காபனிலுள்ள காபன் அணுக்களின் எண்ணிக்கை (அல்லது ஒரு கிராம் அணு நிறையிலுள்ள அணுக்களின் எண்ணிக்கை அல்லது ஒரு கிராம் மூலக்கூற்று நிறையிலுள்ள மூலக் கூறுகளின்

... னில் அவரின் மரணம் வரை இவ்வெண் கணிக்கப்படவில்லை.

எனவே 12 கிராம் காபனில் $6 \times 10^{23}$ காபன்அணுக்களும்,18 கிராம் நீரில் ($H_2o$) $6 \times 10^{23}$ நீர் மூலக் கூறுகளும் உள்ளன. எவ்வித பதார்த்தமாக இருந்தாலும், அதன் சமன்பாட்டு நிறை (formula weight) கிராமில் கொடுக்கப்பட்டால் அது அப்பதார்த்தத்தின் $6 \times 10^{23}$ சமனபாட்டு அலகுகளைக் (formula units) கொண்டிருக்கும். (அணுக்கள், மூலக கூறுகள் அல்லது எவ்வித அலகுகளாகவும் இருக்கலாம்) உதாரணமாக கந்தகத்தின் அணு நிறை 32 ஆகும். எனவே 32 கிராம் கந்தகம் அவோகாட்றோ எண் அளவு கந்தக அணுக்களைக் கொணடிருக்கும். இதே போல் மீதேன் (Methane, $CH_4$) இனது மூலக் கூற்று நிறை 16 ஆகும். எனவே

... சமமாகப் பிரித்துக் கொடுத்தால் எல்லோரும் ஒரு மில்லியன் ரூபாக்களை ஒவ்வொரு மணித்தியாலமும், இரவும் பகலும், வாழ்நாள் பூராவும் செலவு செய்யலாம்.

$6 \times 10^{23}$ எண்ணிக்கையான கடதாசித்தாள்களை அடுக்கிக் கொண்டு போனால் நாம் இங்கிருந்து சூரியனை ஒரு தடவை மட்டுமன்றி மில்லியன் (1,000,000) தடவைகள் அடையலாம்.

10 மில்லியன் எண்களை ஒரு செக்கனில் எண்ணக் கூடிய நவீன கணனியொன்று $6 \times 10^{23}$ அளவை எண்ணி முடிக்க 2 பிலியன் வருடங்கள் தேவைப்படும்.

$6 \times 10^{23}$ அளவு துடுப்பாட்டப் பந்துகளை புவியின் மேற்பரப்பில் அடுக்கினால் அது புவியை மூடி 150 கிலோ மீற்றரிற்கு மேற்பட்ட உயரத்திற்குச் செல்லும்.

$6 \times 10^{23}$ செக்கன்கள் என நேரத்

பத்திராதிபர்,
யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா பரிசாக வழங்கப்படும்.

**புதிர் இல.15**
**சரியான விடை :**
**பிற்பகல் 7.00மணி**

***சரியான விடை எழுதி அனுப்பியோரில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்.***

1. [illegible]

பௌதிகம், இரசாயனம் போன்ற பாடங்களில் கேட்கப்படும் வினாக்களில் மாணவர்கள் இவ்வெண்ணை சரியாகப் பயன்படுத்துவதில்லை. அதாவது அதிகமாக இவ்வெண்ணைத் தவறான இடங்களில் பயன்படுத்துவார்கள். எனவே இவ்வெண்ணைப் பற்றியும், இது எவ்வளவு பிரமாண்டமான எண் எனவும் அனைவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்வெண் எவ்வளவு பிரமாண்டமான எண் என அறிந்திருப்பதன் மூலம் இவ்வெண் தவறாகப் பிரயோகிக்கப்பட்டால் விடைகளில் எவ்வளவு பாரிய பிழையை ஏற்படுத்தும் என நாம் உணரலாம்.

பல வருடங்களாகத் திரும்பத் திரும்பச் சரிபார்க்கப்பட்ட அவோகாட்றோவின் கருதுகோள் கூறுவதாவது, சமமான கனவளவுள்ள வாயுக்கள், ஒரே வெப்பநிலையிலும், அழுக்கத்திலும் ஒரே அளவு எண்ணிக்கையான மூலக் கூறுகளைக் கொண்டிருக்கும். இதனால் கருதப்படுவதாவது, சமனான கனவளவுள்ள வேறு வேறு வாயுக்களை நாம் நிறுத்தால் அவற்றின் நிறைகளின் விகிதமும், அவற்றின் மூலக் கூறுகளின் நிறை விகிதமும் சமனாக இருக்க வேண்டும் என்பதாகும்.

அணுக்கள் அல்லது மூலக் கூறுகளது பருமன் மிகவும் சிறிதாக இருப்பதால் அவற்றின் நிறைகளைத் தனித்தனியாக அளப்பது முடியாத காரியமாகும். ஆயினும், பல அணுக்களின் சார்பு நிறைகளை அறிவதன் மூலம் சம எண்ணிக்கையான அணுக்களை அவற்றின் நிறை விகிதத்தைப் பயன்படுத்தி அளக்கலாம். காபன் அணுக்களிற்கும், ஒட்சிசன் அணுக்களிற்குமிடையேயான நிறை விகிதம் முறையே 12, 16 ஆகையால் 12 கிராம் காபனும், 16 கிராம் ஒட்சிசனும் ஒரே எண்ணிக்கையான அணுக்களைக் கொண்டிருக்க வேண்டும. ஆகவே நாம் 12 கிராம் காபனையும் 16 கிராம் ஒட்சிசனையும் தாக்கமடைய விட்டால் நாம் 28 கிராம் காபனோரொட்சைட்டு வேண்டியதெல்லாம் அவ் எண்ணிக்கை 16 கிராம் ஒட்சிசனிலுள்ள ஒட்சிசன் அணுக்களின் எண்ணிக்கைக்குச் சமன் (ஒரு கிராம் அணு நிறை) அல்லது 28 கிராம் காபனோரொட்சைட்டிலுள்ள Co - மூலக் கூறுகளின் எண்ணிக்கைக்குச் சமன் (ஒரு கிராம் மூலக் கூற்று நிறை) என்பதாகும்.

12 கிராம் காபனிலுள்ள காபன் அணுக்களின் எண்ணிக்கை (அல்லது ஒரு கிராம் அணு நிறையிலுள்ள அணுக்களின் எண்ணிக்கை அல்லது ஒரு கிராம் மூலக்கூற்று நிறையிலுள்ள மூலக் கூறுகளின் எண்ணிக்கை) மிகப் பெரிதாக இருக்க வேண்டுமென 18ஆம் நூற்றாண்டு விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர். ஜோசெப் லொஸ்மிட் (**Josef Loschmidt**) என்பவர் 1865 ஆம் ஆண்டளவில் வளி மூலக் கூறுகளின் பருமனை அளக்க முயற்சி செய்து, வளி மூலக் கூறுகளின் பருமன் மில்லி மீற்றரின் (**Millimeter**) மில்லியனில் ஒரு பங்குஎன $\left[\frac{1}{1,000,000}\,\mathrm{mm}\right]$ கண்டு பிடித்தார். இதன படி ஒரு கிராம் மூலக்கூற்று நிறையில் $4\times10^{22}$ மூலக்கூறுகள் இருக்க வேண்டுமெனக் கணித்தனர். இவ்எண்ணிக்கை முதல் முயற்சிக்கு அதிகம் பிழையில்லாமல் இருந்தது. பின்னர் வேறு வேறான அணுகுமுறைகள் மூலம் அளக்கப்பட்ட போது வளி மூலக் கூறுகளின் விட்டம் லொஸ்மிட் கண்டு பிடித்ததை விடக் கொஞ்சம் சிறியது என அவோகாட்றோ கண்டு பிடித்தார். இதிலிருந்து ஒரு கிராம் மூலக்கூற்று நிறையிலுள்ள மூலக் கூறுகளின் எண்ணிக்கை $6.02\times10^{23}$எனக் கணிக்கப்பட்டது. ஜேர்மன் மொழி பேசப்படும் தேசங்களில் $6.02\times10^{23}$ என்பது வழமையாக ''லொஸ்மிட் எண்'' (**Lochmidt's Number**) எனவும், அனேகமான வேறு இடங்களில் ''அவோகாட்றோவின் எண்'' (**Avogadro's Number**)எனவும் அழைக்கப்படுகிறது. எனினும் அவோகாட்றோ இவ்வெண் எவ்வளவு பெரிதென அறிந்திருக்கவில்லை. ஏனெ

சமன்பாட்டு நிறை (**formula weight**) கிராமில் கொடுக்கப்பட்டால் அது அப்பதார்த்தத்தின் $6\times10^{23}$ சமனபாட்டு அலகுகளைக் (**formula units**) கொண்டிருக்கும். (அணுக்கள், மூலக கூறுகள் அல்லது எவ்வித அலகுகளாகவும் இருக்கலாம்) உதாரணமாக கந்தகத்தின் அணு நிறை 32 ஆகும். எனவே 32 கிராம் கந்தகம் அவோகாட்றோ எண் அளவு கந்தக அணுக்களைக் கொணடிருக்கும். இதே போல் மீதேன் (**Methane, $CH_4$**) இனது மூலக் கூற்று நிறை 16 ஆகும். எனவே 16 கிராம் மீதேன் அவோகாட்றோவின் எண் அளவு மீதேன் மூலக் கூறுகளைக் கொண்டிருக்கும்.

**கலாநிதி.நா.சிவயோகன்**
**பௌதிகவியல் துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

அவோகாட்றோவின் எண்ணினது மிகவும் அவதானமாக அளக்கப்பட்டதும் நம்பகமானதுமான பெறுமானம் $6.0221367 \times 10^{23}$ ஆகும். ஆனால் இப் பெறுமானம் பலவித தேவைகளிற்குத் தேவைப்படும் பெறுமானத்தை விட மிகவும் துல்லியமானதாகும். அதனால் சாதாரணமாக இவ்வெண் மூன்று பொருளுடைய விலக்கங்களால் (**Significant figures**), $6.02\times10^{23}$, குறிக்கப்படுகிறது. இப்பெறுமானம் பலவித ஆய்வுகூட கணிப்பீடுகளிற்குப் போதுமானதாகும்.

இவ் அவோகாட்றோவின் எண்ணானது நமது கற்பனைகளையே தடுமாற வைக்கும் மிகப் பெரிய எண்ணாகும். இதன் பருமனை உணர்வதற்குச் சில துணுக்குக்கள் கீழே தொகுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக உங்களிடம் $6\times10^{23}$ ரூபா பணமிருந்தால், நீங்கள் ஒரு பிலியன் (**Billion**; 1,000,000,000) ரூபாக்களை ஒவ்வொரு .செக்கனும் உங்கள் வாழ்நாள் பூராகவும் செலவு செய்த பின்னும் 99.999% அளவு பணம் உங்கள் அடுத்த சந்ததிக்கு எஞ்சியிருக்கும். அல்லது $6\times10^{23}$ ரூபாக்களை உலகிலுள்ள மக்கள் அனைவரிற்கும்

ருந்து சூரியனை ஒரு தடவை மட்டுமன்றி மில்லியன் (1,000,000) தடவைகள் அடையலாம்.

10 மில்லியன் எண்களை ஒரு செக்கனில் எண்ணக் கூடிய நவீன கணனியொன்று $6\times10^{23}$ அளவை எண்ணி முடிக்க 2 பிலியன் வருடங்கள் தேவைப்படும்.

$6\times10^{23}$ அளவு துடுப்பாட்டப் பந்துகளை புவியின் மேற்பரப்பில் அடுக்கினால் அது புவியை மூடி 150 கிலோ மீற்றரிற்கு மேற்பட்ட உயரத்திற்குச் செல்லும்.

$6\times10^{23}$ செக்கன்கள் என நேரத்தைக் கணிப்பிடும் போது அது புவியின் வயதை விட 4 மில்லியன் தடவை அதிகமானதாகும்.

நாயகரா நீர் வீழ்ச்சியில் (**Niagara Falls**) $6\times10^{23}$ நீர்த் துளிகள் வீழ்வதற்கு 1,000,000 இற்கு மேற்பட்ட வருடங்கள் எடுக்கும்.

நாம் ஒளியின் வேகத்தில் பிரயாணம் செய்தால், $6\times10^{23}$ கிலோ மீற்றர் தூரம் செல்வதற்கு 100 பிலியன் வருடங்கள் எடுக்கும்.

இவ் விளக்கங்களிலிருந்து அவோகாட்றோவின் எண் எவ்வளவு பிரமாண்டமானது என நாம் உணரலாம்.

**இவ்வாரப் புதிர் 17**

**கீழே தரப்பட்டுள்ள எண் தொடரில் இடையில் காணாமல் போன எண்ணைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்:**

**10,11,12,13,14,15,16,17,20,22,24,31,100, __??__ ,1000, 1111111111111111**

சரியான விடையைக் கூப்பனில் எழுதி 11.10.2002 இதற்கு முன்னர் என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா பரிசாக வழங்கப்படும்.

***புதிர் இல.15***

**சரியான விடை :**
**பிற்பகல் 7.00மணி**

***சரியான விடை எழுதி அனுப்பியோரில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள.***

**1. பேரின்பநாதன் தினேஸ்குமார்.**
**ஈஸ்வரா வாசம்,**
**உரும்பிராய் கிழக்கு.**

**2. யோகராசா மயூரினி,**
**யா.மல்லாகம் மகா வித்தியாலயம்**
**மல்லாம். .**

**3. அஞசியா கந்தசாமி,**
**யா.மல்லாகம் மகா வித்தியாலயம்,**
**மல்லாகம்.**

புதிர் இல:15இற்கான பரிசுப் பணத்தை அன்பளிப்புச் செய்வோர்,

**நெல்லியடி சனசமூக நிலையம்**

நெல்லியடி, கரவெட்டி.

**குறிப்பு : புதிர்ப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் தமக்குரிய பரிசுப் பணத்தினை வாரநாட்கள் தோறும் யாழ். பல்கலை க்கழக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் காலை 10.00மணி முதல் மாலை 4.30மணிவரை பெறறுக் கொள்ளலாம்.**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**

**புதிர் இல. 17**

சரியான விடை :-..............................................

முழுப்பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

..............................................

கையொப்பம் :- ..............................................

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

சத்திய நெறியைக் கடைப் பிடிக்கும் அவரை உலகமே போற றிப் புகழ்கிறது. அவர் உதவியை நாடி ஆயிரம் பேர் தினமும் வந்து கொண்டேயிருக்கிறார்கள். இன்று வரை தக்க காரணமின்றி அவர் என்னைக் கடிந்து கொண்டதே இல்லை. நான் தவறு செய்த போது அதைச சுட்டிக் காட்டித் திருத்தியிருக் கிறார். அவ்வளவுதான். அது ஒரு கணவனின் உரிமை தானே?

என்னிடம் என் கணவர் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறார். மனைவிக்குரிய மதிப்பும் மரி யாதையும் கொடுத்து என்னுடன் பழகுகிறார். எனக்குக் கிடைத்திரு க்கும் புகழுக்கெல்லாம் அவர் தான் காரணம். என் உறவினர் அத தனை பேரும என் மீது பேரன்பைப பொழிகிறார்கள். அப்படியிருக்கும் போது நான் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை நடத்தவில்லை என்று எப்படி நீ துணிந்து கூறுகிறாய்? ஒன்று மட்டும் சொல்ல விரும் புகிறேன். தற்காலத்துப் பெண்களைப் போல் எனக்கு நடந்து கொள்ளத் தெரியாது. கணவரைக் கிள்ளுக் கீரையாக நினைத்து அதிகாரம் செய்து அவரைத் தன் கைக்குள் போட்டுக் கொள்ள நினைக்கும் நாகரிக மனைவிகள், கணவர் தங்கள் வழிக்கு வராவிட்டால், தங்கள் இஷ்டப்படி வாழ்க்கை நடத்தத் துணிந்து விடுகிறார்கள். அப்படிச் செய்வது இந்து தர்மத் தைப் பின்பற்றும் ஒரு பெண்ணுக்கு அழகல்ல. எத்தனை பிறவிகள் எடுத்தாலும் சிவபெருமானையே மீண்டும் மீண்டும் கணவனாக அடைய வேண்டும் என்று பார்வதி தேவி வேண்டிக் கொண்டதை உனக்கு நினைவுபடுத்த விரும்பு கிறேன்.''

இப்படிக்கு,
கஸ்தூரிபா.


இவ்வாறு இல்வாழ்க்கையின் இலக்கணத்தை இதயத்தில் பதி யும்படி வடித்துக் கொடுத்து விட் டார் அன்னை. இது பெண் குலம் வாழ்வதற்காக எழுதிய கடிதம். நெறி தவறிச் சென்று தாமும் சீரழிந்து, பெற்றோரையும் தீராத துயரத்தில் ஆழ்த்தும் பிள்ளை கள் திருந்துவதற்காகவும் ஒரு கடி தம் எழுதியிருக்கிறார் கஸ்தூரிபா.

ஹரிலாலின் வாழ்க்கை நாளு க்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. மன நிம்மதிக்காக மது வருந்த ஆரம்பித்தவர், மானத்தை இழக்கும் அளவுக்கு எந்நேரமும் குடி போதையில் ஆழ்ந்திருந்தார். தன்வயம் இழந்த நிலையில் சில சமயம் மிகக் கேவலமாகவும் நட ந்து கொண்டார். வருவோரும் போவோரும் இம்மாதிரிச் செயல் களைக் கஸ்தூரிபாவின் காதில் போட்டு விட்டுப் போவார்கள். 'நான் செய்த பாவம்! இன்னும் என்னென்ன அவமானத்தை அனு பவிக்க வேண்டுமோ?' என்று தலை யில் அடித்துக் கொள்வார் அவர். 'ராமா, என்னைச் சீக்கிரம் உன் னிடம் அழைத்துக் கொண்டு விடேன். நான் பெண்ணாகப் பிறந்து அனுப விக்கும் தண்டனை போதாதா?' என்று ஆற்றாமை தாங்காமல் அலுத்துக் கொள்வார். அவர் நெஞ்சு இரண்டாகப் பிளக்கும். இதயம் துடித்து வெடிக்கும். மார் வலியால் அவதிப்படுவார். அப் படியே சுருண்டு படுத்து விடுவார்.

'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பது போல், மற்றொரு பேரிடி கஸ்தூரிபாவைத் தாக்கிற்று. திடீரென்று ஒரு நாள் ஹரிலால் முஸ்லீமாக மாறி விட்டார். மதம் மாறினாரே ஒழிய அவர் மனம மாறியதாகத் தெரியவில்லை. 'அப்து ல்லா' என்ற பெயரில் காந்தியைப பற்றி அவதூறாக ஏதேதோ எழுதி னார். அவர்தான் எழுதினாரோ, அல்லது காந்தியின் அரசியல்

கொண்டிருக்கிறேன். நீயோ, வர வர சீரழிந்து போய்க் கொண் டிருக்கிறாய். இப்படியே போனால் நான் கொஞ்ச நாள்தான் உயிரோடு இருப்பேன். இந்தத் தள்ளாத வயதில், எங்கள் வாழ்வின் அந்தி வேளை யில், பாபுக்கும் எனக்கும் தாள முடி யாத மன வேதனையைத் தருகிறாய் என்று நீ சிந்தித்துப் பார்த்ததுண்டா?

பாவம், பாபு உன் நடத்தை யைப் பற்றி ஒருவரிடமும் வாயைத்




விரோதிகள் ஹரிலாலின் பலவீன த்தைப் பயன்படுத்திக் கொண்டு மகாத்மாவை அவமானப்படுத்தி னார்களோ, யார் கண்டது? ஹரிலால் பெற்றவர்களை விட்டார். வேலையை விட்டார், ஒழுக்கத்தை விட்டார். மத த்தையே விட்டார்! ஆனால் கஸ்தூரி பாவினால் மகனை விட முடிய வில்லை. மகன் எத்தனை தீயவனாக இருந்தாலும் தாய் அவனுக்கு தீங்கு நினைப்பாளா? 'ஹரிலால் என்றா வது ஒருநாள் திருந்தி விடுவான்' என்றே நம்பிக் கொண்டிருந்தார் கஸ்தூரிபா.

ஒருநாள் பத்திரிகையில் வந்த செய்தி அவர் வயிற்றைக் கலக் கியது. அப்போது சென்னையில் இருந்த ஹரிலால் ஓர் இரவு மது போதையில், நடுத்தெருவில் தகாத முறையில் நடந்து கொண்டார் என்றும், அமைதியைக் குலைத்த தற்காக மாஜி ஸ்ட்ரேட்டிடம் தண் டனை பெற்றார் என்றும் அறிந்த போது கஸ்தூரிபாவினால் பொறு க்கவே முடியவில்லை. தன் உள்ளக் குமுறலை, எண்ணக் குவியலை எழுத்தாக வடித்துக் ஹரிலாலுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

என் அன்பு மகன் ஹரிலாலுக்கு,

நீ குடித்து விட்டுக் கேவலா மான முறையில் நடந்து கொண்ட தற்காகக் கைது செய்யப்பட்டு, மறுநாள் மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒரு ரூபாய் தண்டனை பெற்றாய் என் பதை அறிந்து துன்புற்றேன். உன் விஷயத்தில் அதிகாரிகள் தாராள மனப்பான்மையுடன் தான் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாபுவின் மீது வைத்துள்ள மதிப்பையே அது காட்டுகிறது.

உனக்கு என்ன புத்திமதி சொல்லுவது என்றே எனக்குப் புரியவில்லை. 'நெறி தவறிப் போகாதே' என்று உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நான் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறாய். அப்படி இருந் தும் உனக்கு உணவளித்து, உடை யளித்து காப்பாற்றத் தயாராக இருப்பதாகத் தானே அவர் உன் னைப் பார்க்கும் போதெல்லாம் கூறுகிறார்.

உன்னைப் பற்றிய கவலை களை ஒதுக்கி வைத்து விட்டுப் பிறருக்காக உழைக்கும் பொறுமை யும் மனோதிடமும் அவரிடம் இருக் கின்றன. அவர் ஒரு மகாத்மா. நான் ஒரு சாதாரணத் தாய் தானே! உன்னைப் பற்றிய துயரம் என் உயிரைக் கொஞ்சம் கொஞ்ச மாகக் குடித்துக் கொண்டிருக்கிறது.

உன் நடத்தையைப் பற்றி பாபுவுக்கு நிறையக் கடிதங்கள் வருகின்றன. அந்த அவமானத்தை அவர் எப்படியோ தாங்கிக் கொள் கிறார்! ஆனால் என்னால் வெளியே தலையைக் காட்ட முடியவில்லை! திறப்பதில்லை. உன்னால் அவர் மனமுடைந்து, உள்ளம் குமைந்து அல்லற்படுவது என் ஒருத்திக்குத் தான் தெரியும். எங்கள் வயிற்றெரி ச்சலைக் கொட்டிக் கொண்டால் உனக்கு மகா பாவம் வந்து சேரும். பிள்ளையாய்ப் பிறந்து விட்டு ஏன் தான் இப்படிப் பகைவன் போல் நடந்து கொள்கிறாயோ?

போகும் இடமெல்லாம் நீ பாபுவைப் பற்றி இழிவாகப் பேசுவ தாகக் கேள்விப்பட்டேன். உன்னைப் போல் ஒரு புத்திசாலிப் பிள்ளை செய்கிற காரியமா இது? உன் அப்பா உலகம் போற்றும் உத்த மரடா. அவரைப் பழிப்பதன் மூலம் உன்னையே நீ இழிவுபடுத்திக் கொள்கிறாய். உன் மீது அவர் உயிரையே வைத்திருக்கிறார். ஆகவே தான் நீ ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் என்று விரும்புகிறார். அது தவறா? அவர் எத்தனை அறிவுரைகள் வழங்கியும் நீ காதில் போட்டுக் கொள்ளாமல் திரிந்து பிறர் முகத்தில் விழிக்கவே வெட் கமாயிருக்கிறது. பாபு உன்னை மன்னித்து விடுவார். ஆனால் கடவுள் உன்னை ஒரு நாளும் மன் னிக்க மாட்டார்.

காலைப் பத்திரிகை வந்தாலே எனக்கு அடி வயிற்றில் 'பகீர்' என் கிறது. 'உன்னைப் பற்றி என்ன செய்தி வந்திருக்கிறதோ?' என்ற திகிலுடனேயே அதைப் பிரிக்க வேண்டியிருக்கிறது. 'நீ எங்கே இரு க்கிறாய், எங்கே உறங்குகிறாய், எங்கே சாப்பிடுகிறாய்?' என்று நான் கவலைப்படாத நாளே கிடையாது. ஒரு வேளை நீ புலால் புசிக் கிறாயோ என்னவோ, யார் கண் டது? இதையெல்லாம் பற்றி நினை த்துக் கொண்டால் எனக்கு இரவு தூக்கமே வருவதில்லை உன் னைப் பார்க்க வேண்டும் போல் எனக்கு அடிக்கடி ஓர் ஆசை எழுகிறது. ஆனால் நீ இருக்கும் இடம் தெரிந்தால் தானே! சில சமயம் உன்னைப் பார்க்கக் கூட எனக்குத் தயக்கமாயிருக்கிறது! என்னையும் தூக்கி எறிந்து பேசி விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் தான் காரணம்.

உன் பழம் பெரும் மதத்தை நீ ஏன் மாற்றிக் கொண்டாய் என்று எனக்குப் புரியவில்லை. நீ மதம் மாறியது எனக்குப் பிடிக்கா விட் டாலும், உன் வாழ்க்கையைச் சீர்படு த்திக் கொள்ளவே நீ அவ்வாறு செய்ததாகச் சொன்னதை உண்மை யென்றே நம்பினேன். ஆனால் என் எண்ணத்தில் மண் விழுந்து விட்டது. நீ எப்படியாவது இருந்து விட்டுப் போ. ஆனால உன்னைப் பின் பற்றும்படி ஏழை ஜனங்களிடம் நீ பிரசாரம் செய்வதை நான் ஒப்புக் கொள்ள முடியாது! உனக்கு மத த்தைப் பற்றி என்ன தெரியும்? இம் மாதிரியெல்லாம் செய்து கொண் டிருந்தால் வெகு சீக்கிரத்தில் உன்னை எல்லோரும் ஒதுக்கித் தள்ளி விடுவார்கள். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். எல்லாவற்றையும் பற்றி நன்றாகச் சிந்தித்துப் பார்த்து விட்டுச் சீக் கிரமே திருந்தி விடு.

உன்னைப் பற்றி உன் பிள்ளையும் பெண்களும் மனம் புழுங்குவதைநேரில் பார்த்தாலா வது உனக்குப் புத்தி வருமோ என்னவோ?

இப்படிக்கு,
உன் அன்புள்ள
பா.

இக்கடிதம் ஹரிலாலைப் பொறுத்த வரையில் பாலைவன த்தில் பொழிந்த மழையாகத்தான் போயிற்று. அதைப் படித்து விட்டு நெஞ்சு புடைக்கக் கண்ணீர் விட்டு அழுதார் அவர். துன்ப அலைக ளின் நடுவே சிக்கித்தவித்தவர்,

**பரணீதரன்**

விடுதலை பெறுவதற்காக மதுக் கடலில் மூழ்கினார்! சற்றைக் கெல்லாம் இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்ட மோன நிலையில் மயங்கிக் கிடந்தார்.

தவறான வழியில் செல் பவர்களைத் திருத்தி, நல்வழியில் ஈடுபடச் செய்வது அத்தனை எளி தல்ல.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### சொர்க்கமும் நரகமும்

மார்க்ட்வைன் என்ற பிரபல நூலாசிரியையைப் பார்த்து ஒரு பெண் "சொர் க்கம் நரகம் என்ற இரண் டைப் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

"சொர்க்கம் - நரகத் தைப் பற்றி நான் கருத்துத் தெரிவிக்கத் தயங்குகிறேன" என்றார் மார்க்ட்வைன்.

"ஏன் அதில் உங்களு க்கென்ன தயக்கம்?" என்று அந்தப் பெண் கேட்டாள்.

"எனக்கு சொர்க்கத் திலும் நரகத்திலும் நிறைய நண்பர்கள் இருக்கிறார் கள். சொர்க்கம் நரகத் தைப் பற்றி நான் பேசி னால் ஒருவேளை அது அவர்களைப் பாதிக்கக் கூடும் என்றார் மார்க் ட்வைன்.

### முடிவில் ஆரம்பம்

நீதிபதியாக இருந்த ஏ.எஸ்.பி அய்யருக்கு 19 வயதில் திருமணம் நடந்தது. மனைவிக்கு அப்போது 11 வயது. ஒரு சமயம் அவர் இங் கிலாந்து சென்றிருந்தார். ஓர் ஆங்கில மாது அவரிடம், "காதல் இல்லாமல் கல்யா ணமா?" என்று வியப்புடன் கேட்டாள்.


"நாங்கள் திருமணம் செய்து கொள்ளும் பெண் ணைக் காதலிக்கிறோம். நீங் கள் காதலித்த பெண்ணை மணந்து கொள்கிறீர்கள். உங் கள் காதல் முடிவடைகிற சமய த்தில் எங்கள் காதல் ஆரம் பமாகிறது," என்றார் அய்யர்.

### சொல்லின் செல்வர்


கிருபானந்த வாரியார் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார். இடை யில் சிலர் எழுந்து வெளியே சென்றனர். அதைப் பார் த்து விட்டு அவர் சொன் னார்:

"சொல்லின் செல் வர் என்று அனுமனைக் குறிப்பிடுவார்கள். இங்கேயும சொல்லின் செல்வர்கள் இருப்பதைக் காண்கிறேன். நான் நல்ல விஷயங்களை சொல்லின் அதைக் கேட்கா மல் செல்பவரைத் தான் சொல்கிறேன்" என்றார்.



மெக்ஸிகோவின் லோஸ் கேபேஸ் நகரின் கடற்கரையில் இருந்து பசுபிக் சமுத்திரத்தை நோக்கி எடுக்கப்பட்ட புகைப்படம் இது.



நிலவைத் தொட்டு விட்டுச் செல்வது போல பறக்கும் இந்த விமானம், ஜேர்மனி நாட்டின் வான் எல்லையில் பறந்த போது எடுக்கப்பட்டது.



சீனாவின் ஜியாங்சு மா நிலத்தில் நான் ஜிங் நகரில உள்ள உயிரியல் பூங்காவில் விலங்குகளின் ஆடையலங கார அணி வகுப்பு நிக ழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அதில் கரடி, குரங்குகள், நாய்களின் அலங்கார அணி வகுப்பும் இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியினையொட்டி உயிரியல் பூங்காவில் நட த்தப்பட்ட ஒத்திகை நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படம்.



அமெரிக்காவின் டைக்ஸாஸ் நகரில் உள்ள 'டய்லர் கால்ட வெல்' என்ற பறவைகள் சரணா லயத்தில் தாய்ப் பறவை தன் குஞ் சுக்கு உணவளிக்கும் காட்சியை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

# மௌனத்தின் தேடல்கள்

## கண்டுபிடி!

உன்னுள் இருக்கிறது
உயர்ந்த நல் இலட்சியங்கள்
சின்னவளே புரிந்து கொள்வாய்
சீக்கிரமாய் உந்தனையே
இன்னல்கள் பல வரலாம்
இழைத்து நீயும் போகலாமோ?
இன்னும் உன் இலக்கை
இயல்பாக வசப்படுத்து
கன்னக் கையகற்றி
கண்டுபிடி புது விடியல்!

சூரியநிலா,
ஈச்சமோட்டை.

## சோகம்!

பள்ளிப் பருவமல்ல
பால் மறக்கும் வயதுமல்ல
பார்வையிலே தெரிவதென்ன
பாசம்
உள்ளிருக்கும் நினைவுகளை
உடன் நடக்கும்
கொடுமைகளைக் கண்டதிலா
முகத்தில் இந்தச் சோகம்.

அ.மீனா,
சாவகச்சேரி.

## சிந்தனை!

சிரிக்கின்ற வயதினிலே
சிங்காரமாய் நீயிருந்து
சிந்திக்கும் விடயமென்ன
சிறுமியே!
சீரழிந்த உலகமிது
சீர் பெறவே
சிந்தை கொண்டு
சீக்கிரமாய்க் கிளம்பு
சிட்டே.

ச.பாரதி,
வேலணை.

## சிந்தனையில் ...!

வெள்ளை மனம் கொண்ட
பிள்ளையின் சிந்தனையில்
வெள்ளைப்புறா ஒன்று
பறக்கின்றதா...?
சிந்தனை உலகிற்குள் சிக்குண்ட
சிறுமியே!
எழுந்திரு நீ சிந்திக்க இது நேரமில்லை
திரும்பிப்பார் பின்னால்
வெள்ளை வான் வருகிறது.

ச.தீலீப்,
சங்கானை.

## என் தீர்க்கதரிசனம்!

எம் மண்ணில்
புதுப்பொலிவுடன்
சூரியன்......
அந்நிய நாட்டில்
கருவுற்று ஜனனித்த
எம் மண்ணின் வித்தே
நிரந்தரமாக - இனி
நீ எம் மண்ணில்
விளையாடும் நாள்
வெகு தொலைவில் இல்லை.

ஜெ.வாணி,
சாவகச்சேரி.

## உறவுள்ள அநாதை!

விஞ்ஞான உலகின்
விந்தையான செயல்
தாயும் வேலைக்கு
தந்தையும் வேலைக்கு
அவர்களை எதிர்பார்த்து - நீ
ஆவலுடன் இருக்கிறாயா
உறவிருந்தும் - நீ
அநாதையா?

க.தபோதினி,
மல்லாகம் மகா வித்தியாலயம்.

## உன்னை நம்பி!

என்னயிது
நாடியில் கை வைத்தபடி
எழுந்திரு
நாளை
உன்னை நம்பி
எத்தனை கருமங்கள்
காத்துக் கிடக்கின்றன
தெரியுமா...?

நா.சுரேஸ்,
துறையூர்.

## சின்னச் சிட்டே!

இந்த வயதில் உனக்கென் னசோகம்
இவ்வுலகில் இன்பங்கள்
நிறைய உண்டு எழுந்து வா.

## சிந்தனையின் காரணம்!

சின்னச் சிறுமியிவள்
சிந்தனையை சீண்டிவிட்ட
சில்மிஷக் கனவுகள் தான்
என்ன?..... இவள்
சிந்தை தொட்டு
பிரமிக்க வைத்த
செயலின் அதிசயம் தான்
என்ன? என்ன?

யோ.பிரஷாந்தி,
யாழ்.பல்கலைக் கழகம.

## ஏன் ஏங்குகின்றாய்!

யுத்தத்தின் பிடியில்
உறவுகளை நீ இழந்து
உலகினையே மறந்து
சிறகிழந்த பறவை போல - உன்
அவலமான வாழ்வை எண்ணி
ஏங்குகின்றாயோ?

சி.முகுந்தன்,
மல்லாகம் மகா வித்தியாலயம்.

## சிந்திக்காதே...!

நாடியில் கை வைத்து
சிந்திக்கும் தங்கையே...
தடைகள் உடைந்ததும்
தாய்லாந்தில் நடந்ததும்
தெரியாதா உனக்கு
இனிமேலும்
சிந்திக்காமல் சிரித்து இரு.

சி.செல்வகுமார்,
வளலாய்.

## புது வாழ்வு!

புத்தகப்பையுடன்
புது வாழ்வுக்கு
அத்திவாரமிடும்
பருவத்தில்
அஸ்தமித்துப் போன உன்
உறவுகளை நினைத்தா
தலை மேல் கரம் வைத்துள்ளாய்?

சி.ஜனா,
சுன்னாகம்.

## நல்ல சிந்தனை!

பெண்ணே!
என்ன யோசிக்கிறாய்
என்று எனக்குத் தெரியும்
எவ்வளவு துன்பம் இந்த வாழ்வில்
நான் இளசாகவே இருக்க வேண்டும்
வளர்ந்து வாழ்வில் பணத்திற்காக
ஓடி ஓடிச்
செத்துவிடக் கூடாது.

ஞானி,
யாழ்.பல்கலைக்கழகம்.

## அகதியாய் நானும்!

ஆசைஅம்மா அமெரிக்காவில்
அன்பு அப்பா அவுஸ்ரேலியாவில்
அருமை அண்ணன் அபுதாபியில்
அழகான அக்காவோ
அத்தானுடன் வெளிநாட்டில்
அகதியாய் நானும்
அவதிப்படுகிறேன் தனிமையிலே!

மு.குமார்,
சங்கானை.

## அனாதையின் ஆதங்கம்!

அம்மா என்று நான்
அழுததுண்டு
என்னை நான் அறியாத
வயதுதனில் - அப்பா
என்ற சொல்லை
உதடு சொன்னதில்லை
பூனையும் நாயும் கூட
மனிதர் மடியிலே பெற்ற
பிள்ளைகளாய்க் கொஞ்சி
மகிழும் போது - இறைவா
நாங்கள் என்ன பாவம்
செய்தோம்.....!

ப.துஷதரன்,
நல்லூர்.

## ஆழ்ந்த யோசனை!

பெண்ணாய்ப் பிறந்து விட்டேன்
இந்தப் பூமியிலே சீதனக்
கொடுமைக்கு என் செய்வேன்
எனக் கன்னத்தில் கை
வைத்தாயோ குழந்தாய்!

வினோ,
வட்டு.

## புத்தகப்பை எங்கே..?

புன்னகை பூத்திடும்
பூவிழிப் பிஞ்சே!
உறவுகளை இழந்து
உணர்வுகளைத் தொலைத்து
தரணியில் நடக்குமுன்னே
தலை மேலே சுமைகள்
உன் கரங்களிலே
புத்தகப்பை எங்கே....?

சி.சிவஜன்,
J/M.V.M.



## அடேயப்பா!

என்னை வெளிக்கிடச் சொல்லிப் போட்டு
என்னப்பா என்ன பண்ணுறார்?
ஸ்கூலுக்குப் போக நேரமாச்சப்பா
இனியும் என்னால் பொறுக்க
முடியதாப்பா..!

மாருதி,
ஆவரங்கால்.

## கனவு நிறைவேறுமா!

சின்ன சின்ன ஆசை
சேர்த்து வைச்சேன் பலதை
வண்ண வண்ண ஆசை
வானில் பறக்க வேணும்
அப்பா அம்மாவுடன் சேர
வேண்டும்
ஆனந்தமாகப் பேச வேண்டும்
தீபாவளி கொண்டாடணும்
தீபங்கள் ஏற்றிட வேண்டும்
புத்தாடை பூண வேண்டும்
பூமழை தூவ வேண்டும்
பட்டாசு கொழுத்த வேண்டும்
என் கனவு நிறைவேறுமா?

கந்தஞான முத்து,
கைதடி.

## தேடுகிறாயா..!

இலைத் தளிர் போல் துளிர்த்திட்ட
இளந் தளிரே
சிட்டாயப் பறக்கின்ற சின்ன வயதிலே
நின் சிந்தனை
உறவுகளுக்கா அல்லது உரிமைகளுக்கா.

செ.கிரிஷாந்தி,
யா.ம.ம.வி.

## சகோதரியே!

உன்னை மறந்து உணர்வை மதித்து
உயர்வை நினைக்கும் உன்னுடைய
சிந்தனை – உலகின் விடிவுக்கு
உன்னத படிக்கல்.

ப.றமேஸ்.

## புதுவாழ்வு!

சுட்டிப்பெண்ணே!
இரண்டு கரத்தையும்
கன்னத்தில் வைத்து
தமிழினத்திற்கு மலரப்போகும்
சமாதானப் புதுவாழ்வை
விசித்திரமாகப்பார்க்கிறாயோ?

ஷர்மி,
கொக்குவில்.

## வெள்ளை வான்!

கன்னத்தில் கையேந்தி
சிந்திக்கும் நேரமில்லை இது
சீக்கிரமே வீடு செல்
சின்னமகளே ஏனெனில்
வீதியால் வரும்
வெள்ளை வான் உன்னை
கடத்திச் சென்றிடும்.

P.சூர்யா,
இணுவில

## தருப்பதெப்ப(டி)?

அஞ்சடி அக்கா
அடக்கமாய் றோட்டில் போனால்
அடிக்கிறான் சீழ்க்காய்
பிடிக்கிறான் கையை
தடுக்கிறான் வழியை
எடுக்கிறான் தொப்பியை
அஞ்சு வயதுப் பிஞ்சு நான்
அஞ்சடியாவதைத்
தருப்பதெப்படி?

அருந்தா,
முடமாவடி.

## ஏன் இவள் ஏங்குகின்றாள்?

கன்னத்தில் கைவைத்து
தன்னையே மறந்திருந்து
எண்ணத்தைத் தொலைவில் வைத்து
ஏன் இவள் ஏங்குகின்றாள்?

கு.சிவகுமார்,
சுன்னாகம.

## மௌனம்!

இளம் தளிரே
கன்னத்தில் கரம் பதித்து
கலங்கிய விழியுடன்
மௌனம் சாதிப்பது
ஏனோ?

S.K.குணபாலன்,
அளவெட்டி.

## பெண்ணினத்தின் அவலம!

கன்னத்தில் கை வைத்து
கண்மணியே - நீ
கலங்குவது எதற்காக
சீதனச் சந்தையில்
விலை போகும் பெண்களை
நினைத்தா?

R.சங்கீதா,
கொடிகாமம்.

## புன்னகைக்கும் தங்காய்!

செந்தமிழ் நிலத்தில்
குந்தியிருந்து
தாய்லாந்துப் பேச்சால்
சேய் நான் மகிழ்வில்
இருக்கிறேன் என்றா...
புன்னகைக்கும் தங்காய்!
எல்லோர்க்கும் நீ சொல்கிறாய்.

கமலா,
மீசாலை.

## என்ன யோசனை?

சிறுமியே!
இந்தச் சின்ன வயதில்
உனக்கு என்ன யோசனை
நிரந்தர சமாதானத்தை
எண்ணியா - அன்றேல்
உன் எதிர் காலத்தை
எண்ணியா?

த.வனஜா,
பொலிகண்டி.

## புலமைக்குப் பரிசு!

புலமைப் பரிசிலில் புலமை பெறுவாய்
புகட்டினாய் நல்ல அப்பாவாய்
புதுப்பள்ளி சேர்க்க டொனேசனுக்காய்
புரட்ட முடியவில்லையா பணமாய்
புதைப்பதா என் பெரியபள்ளி ஆசையை?
புலமைக்கு இது பரிசா?

K.நித்தியகலா,
யாழ்.பல்கலைக்கழகம்.

## சிந்திக்கின்றாள்!

குடு, குடு என நடந்து
பாடசாலைக்குப் போய் வந்ததாலே
கடு கடு எனக் கால்கள்
நொந்து போனதால் நாளை எப்படி போய்
வருவது என்று சிந்திக்கிறாளோ இச்சிறுமி.

பரணி பாதுசன்,
நல்லூர்.

## காத்திருக்கிறாயா!

அழகாக உடையணிந்து
வெளியே போவதற்கு
அப்பா வருவார் என்று
வாயிலிலே காத்திருக்கிறாயா?

K.சுரேகா,
கொக்குவில்.

## கூறுவாயா..?

இளையவளே – உன்
நாடிக் கை வைப்பின்
சோகநிலை.....
என்னவென்று
எமக்கும் – நீ
கூறுவாயா..?

சி.இன்பராஜ்,
மீசாலை.

## கன்னி கழியாமலே!

யுத்த மேகங்கள்
மரணத் துளிகளை
இறக்கிக் கொண்டே இருக்கின்றன
வாழ்க்கைத் துப்பாக்கிகள்
துன்பத் தோட்டாக்களைத்
துப்பிக் கொண்டே இருக்கின்றன
அகதிச் சேவல்கள்
அவல முகாரிகளைக்
கூவிக் கொண்டே இருக்கின்றன
ஆனால்
சமாதானக் கன்னி மட்டும்
புரிந்துணர்வுச் சீதனமில்லாததால்
இன்னும்..?
கன்னி கழியாமலே....!

பூ.சாவித்திரி,
இரா. நுண்கலைக்கழகம்.

மௌனத்தின்



தேடல்கள் - 31

அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 11.10.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் – 31
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்




## பீனிக்ஸாய்...!

உன் - சூரிய
வார்த்தைகளால்
நீ
என்னைச்
சுட்டெரித்தாலும்
நான் மீண்டும்
உயிர்ப்பேன்
உன்னைத் தேடும்
பீனிக்ஸாய்......!

## சுற்றுலாப் பயணிகள்...!

சூனியப் பிரதேசமாயிருந்த
எங்களிடம்
சுற்றுலாப் பிரதேசமாய்
காட்சியளிக்குது
தார் பூசப்பட்ட
பெருஞ்சாலை எங்கும்
சனக்கூட்டம் அதிகம்
சின்னச் சிங்கப்பூராம்
சிரித்து ரசிக்கின்றனர்
சுற்றுலாப் பயணிகளே....!
உற்றுப் பாருங்கள்
செம்மணி தெரியுமா?
கிறோசிமா நாகசாகி போல்
இங்கும் உண்டு
இடிந்த கோபுரங்களும்
விடியாத அகதி வாழ்க்கையும்
கடற்கரை முட்கம்பிகளும்
ஆங்காங்கே அகற்றப்படா
கண்ணி வெடிச் சின்னங்களும்
கட்டாயம் நீங்கள்
கண்டுகளிக்க வேண்டிய(!?)
காட்சிப் பொருட்கள்
வாருங்கள்
வந்து பாருங்கள்.

ஜோ.ஜெஸ்ரின்,
கொழும்புத்துறை.

## சிறுவனே...!



சிறுவனே...!
உன் வாழ்க்கைப் பாதையில்
உருத்தெரியாக் குறுக்கீடுகள்
உள்ளன என்பதனை
உணர்ந்து கொள்!
ஆயிரம் தடைகள்
அத்தனையும் உன்
முன்னேற்றத்திற்கு
முற்றுப்புள்ளி வைக்கும்
சவால்கள்!
உனக்கே தெரியாமல்
உன்னுள் புகுந்து ஆக்கிரமித்து
உன் வாழ்வின் பக்கங்களை
அர்த்தமேயில்லாமல்
அழித்து விடும் முட்செடிகள்
சமுதாயத்தில் இருப்பது
சகஜம் என்பதனை
சகபாடிகள் உனக்கு
கற்றுத் தந்திருப்பார்களே!
கற்களும் முட்களும்
குவிக்கப்பட்டிருப்பது தான்
வாழ்க்கைப் பாதை
அதனைக் கடந்து பயணித்து
இலக்கை எட்டுவதில் தான்
உன் இளமை நிருபணமாகிறது
நிலைமாறும் உலகில்
தடம் மாறி நீ சென்றிடாமல்
பயணத்தை நீ தொடர்வதில் தான்
உன் வாழ்க்கை
அர்த்தமுள்ளதாகிறது!

இ.ஷோபனா,
வேலணை.

## வாழ்வா...? சாவா...?

சாவதற்கு ........
ஆசை
சாகும் வழியை
தேடிச் செல்ல விருப்பமில்லை

வாழ்வதற்கும்
ஆசை
வாழ்க்கையில் வரும்
துன்பங்களை ஏற்று வாழ
தாங்கும் இதயமில்லை




வாழ்ந்த பெரியார்கள்
பலர் கூறிய
தத்துவ வார்த்தைகளை
கேட்டு, வாழ்ந்து
காட்ட வேண்டும் போலுள்ளது

மனிதனாகப் பிறந்த
நானும்....... நீயும்......... இதற்கென்று
வாழாது போனாலும்

இறைவன் என்னை
வாழ அழைத்த
அழைப்பிற்காக
வாழ வேண்டுமென்று
என் மனதையொருமுகப்படுத்தி
என் வாழ்வை
அவருக்கே...!
சமர்ப்பணமாக்குகின்றேன்.

*S.B.பீற்றர் போல்,*
*யாழ்ப்பாணம்.*

## மறக்க முடியவில்லை!



உன்னில் நான் கொண்டது
உண்மையான பாசம் தான்
உன்னை நான் நேசித்ததும்
என்னை நீ நேசிப்பதாய்
சொன்னதும் உண்மைதான்
ஆனால் இப்போது தான்
எனக்குப் புரிகிறது
நீ என் மீது கொண்டது
நேசமல்ல வெறும் வேசம்
மறந்து விடு என்றாயே
எதை மறக்க முடியும்
காதலைக்
கொச்சைப்படுத்திய
உன்னை மறக்கவா
அல்லது எனது புனிதமான
காதலை மறக்கவா
முடியும் வரை
மறக்கத்தான்
முயற்சிக்கிறேன்
முடியாமல் இருப்பது தான்
இன்னும் புரியவில்லை.

I.கறுப்புரோஜா,
ஸ்ரான்லி வீதி.

## இரண்டுமே ஒன்றுதான்...!



கல்லும்
அவள் காதலும்
ஒன்றென்பேன்
இரண்டுமே
கண்ணற்ற தென்பதால்

பாறையும்
அவள் இதயமும்
ஒன்றென்பேன்
இரண்டுமே
கடினமாய் இருப்பதால்

கடிகாரமும்
அவள் கண்ணும்
ஒன்றென்பேன்
இரண்டுமே
துடிப்பதால்

மல்லிகையும்
அவள் கூந்தலும்
ஒன்றென்பேன்
இரண்டுமே
வாசம் வீசுவதால்

கவிதையும்
அவள் சிரிப்பும்
ஒன்றென்பேன்
இரண்டுமே
எனக்குப் பிடித்ததால்

கானலும்
அவளும்
ஒன்றென்பேன்
இரண்டுமே
என்னை ஏமாற்றுவதால்.

மதுரமகன்.

## உன் நினைவோடு...!



விதைத்தது நீ!
விளைந்தது என்னுள்
அது என்னவென்று
இன்னுந்தான் புரியவில்லை
புரியும் போது
நான் இருப்பேனோ என்னவோ...?
ஆணென்றால் அரை மைல்
தள்ளி நிற்கும் என் உணர்வு
உன்னோடு மட்டும்
உடும்பான விந்தை என்ன?
உன் அறிவில், அழகில் , பதவியில்
பணத்தில் மயங்கவில்லை
சிவந்த விழியில் அதன் ஒளியில்
சொல்லிய ரசனையில்
மண்டியிட்டது மனம்
பலரும் சொன்னார்கள்
நீ நல்லவனல்லவென்று
நம்பி விடவில்லை நான்
நம்பவிடவுமில்லை உன் கண்கள்
ஆராயக் கூட அனுமதிக்கவில்லை
என் இதயம்
உனைச் சந்திக்கும்
சந்தர்ப்பங்களைத் தவிர்க்கிறேன்
பார்க்குமிடமெங்கும் உன்
முகங்காணத் தவிக்கிறேன்
ஏன் இப்படி......? ஏன் இப்படி......?
உன்முகம் பார்க்கையில் என்
பெண்மை விழித்துக் கொள்கிறது
நீ சிரிக்கையில் என்
உடல் சிலிர்க்கிறது
உன் கண்களைப் பார்ப்பதைத்
தவிர்க்கிறேன் - நான்
கோழைத்தனமல்ல
ஒரு தற்காப்புத் தான்
என் கண்கள் என்னைக்
காட்டிக் கொடுத்து விட்டால்.......?
பக்தியை மட்டும்
காண வேண்டிய உறவில்
அதையும் மீறி
நிலவில் ஒரு மறுவாய்

நான் நினைக்கவில்லை
நான்மட்டும் காரணமென்று
உன்னை அறியாமல்
நீ கூடத்தான்
இருக்கும் ரத்தமும்
கண்ணீராய்க் கரைகிறது
என் சுகம் உனைச்சேர
உன் சுமை எனைச்சேர
உனக்காகத்
தியானிப்பதில் ஒரு சுகம்
உன்னோடல்ல
உன் நினைவோடு வாழும்
பாக்கியம் ஒன்றே போதும் எனக்கு
நான் வேண்டுவது நம் வாழ்வல்ல
உன் வாழ்வு மட்டுமே.

அருந்தா,
முடமாவடி.

## இதயங்களே உங்களுக்கு!

*ஓ..... இதயங்களே!*
*நீங்கள் நிதானியுங்கள்*
*இதயங்கள் ஒன்றும்*
*காலில் மாட்டும்*
*செருப்புகளல்ல*
*கழற்றி விட்டுச் செல்வதற்கு*
*காதலொன்றும்*
*காகித ஓடமல்ல*
*தண்ணீரில் கரைவதற்கு*
*என் இனிய*
*உறவுகளே!*
*வாழ்க்கையை வாழ்வதற்காய்*
*அமையுங்கள்*
*வளமுடன் வாழுங்கள்.*

*M.T.சிவசோதி,*
*கரவெட்டி.*

## என் இனிய நட்பே!



*வசந்தத்தின் வாசல்தனை*
*எனக்குக் காட்டிய*
*என் இனிய நட்பே!*
*என்றும் எந்தன் நெஞ்சில்*
*உன் நாமம் பதித்திருக்கும் - தோழி!*
*நிஜமாகச் சொல்கிறேன்*
*மரணத்தில் என்மீது தூவும் மலர்களும்*
*என்னை மனிதனாக்கிய*
*உன் பெயரையே கூறும்.*

*தி. சிவதர்சினி, தும்பளை.*

## வைத்துப்பார் பாசத்தை...!



பாசம் என்பர் நேசம் என்பர்
பண்புள்ள உள்ளம் என்பர்
பரிவாகப் பேசி
தேவைகளைப் பெற்றிடுவர்

தேவைகள் பெறும் வரை
தேனாகப் பேசிடுவர்
தம் வேலை முடிந்தவுடன்
தாம் வேறு நீ வேறு என்பர்
உண்மைப்பாசம் வைத்த
உன் நெஞ்சில்
மிஞ்சுவதெல்லாம்
துன்பமொன்றே.

முல்லைமுருகன்

## எனக்கிது கடமை....!



பெண் உரிமை பேசிடும்
என் உரிமைப் பெண்ணே
எனக்கும் இரு தங்கை
என் கண்ணில் கங்கை

வரன் பார்க்கும் வயது
பலன் பார்த்தோம் பயனில்லை
பணம் பத்து கேட்டதனால்
குணம் இருந்தும் கூறவில்லை

வரனை நாடி நாம்
கருணை காட்டும் என்றால்
அரக்காதாம் அஞ்சு சதம்
அவன் அன்னை சொல்லுகிறாள்

எனக்கும் இரு தங்கை
என் கண்ணில் கங்கை
வரன் பார்க்க நீ வந்தாய்
கடன் முடிக்க நான் கேட்பேன்

சீதனம் என் உரிமை
கேட்பது என் கடமை
உனக்கிது புரிகிறதா...?
எனக்கிது கடமை.

S.கேசவன், நவிண்டில்.

# தெளிந்த மனம்!

சிறுகதை

அன்ரன்

வீட்டு வாசலில் இருந்து பார்க்க எல்லாமே தெரிந்தது. அம்மன் கோயில் வாசலில் ''ஸ்பீக்கர்'' கட்டிக் கொண்டிருந் தனா். பொங்கற்பானைகள், சருவங்கள், சிராய விறகுகள், வாழை இலைகள், இள நீர்க்குலைகள் எல்லாம் கோயில் வீதியில் ஆங்காங்கே வைக்கப்பட்டு இருந்தன.

சின்னஞ்சிறுசுகள் பூக்களாய் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. ஊரிலே ஒரு வீடும் மிச்சமின்றி எல்லோரும் கோயிலில். வீட்டு வாசலில் குந்தியிருந்த லச்சுமி எல்லாவற்றையும் பாரத்துக் கொண்டிருந்தாள். ''அம்மாளாச்சி முருகையா உனக்குக் கூட கண்ணில்லாமல் போட்டுதே'' அவள கண்களிலிருந்து கண்ணீர் திரண்டது.

இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக் கொண்டு பெரிதாக அழுதாள். படலைக்குள் யாரோ கூப்பிடுவது போலிருந்தது. நிமிர்ந்து பார்த்தாள், ''திருவளையை ஒருக்காத் தருவயளோ தேங்காய் திரிவிப் போட் [illegible]'' எமம்பிப் போய் கிரு [illegible] கொடுத்தாள். அந்தப் பெண் லச்சுமியை அனுதாபத்தோடு பார்த்துச் சென்றாள்

''மோதகம் அவிக்கப் [illegible]......'' நெஞ்சுக்குள்ளே தாங்க முடியாத வலி. '' ஐயோ, என்ர ராசா, என்ர ராசா என்னால தாங்க முடியேல்லையெடா'' அவள் மாறி, மாறி நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டாள். அவளை அழாதே என்று சொல்லித் தேற்றக் கூட ஒருவரும் இல்லை. லச்சுமியின் மூத்தவன் தகப்பனோடு கூட வன்னியில். அடுத்தவன் ஜேர்மனியில். அகதியாக கடைக் குட்டி ரவி அவனும் இல்லை.

''என்ர ஐயா, இன்பத்திலையும், துன்பத்திலையும் பங்கெடுப்பன் என்று அருந்ததி பார்த்து அம்மி மிதித்து விட்டு, என்னைத் தள்ளிப் போட்டியளே'' பத்து வருசத்திற்கு முன் பிரிந்து போன தன் கணவனிடம் முறையிட்டாள். நிமிர்ந்து பாரத்தாள். வேலிக்குள் நாலைந்து தலைகள் தெரிந்தன.

''லச்சுமி... என்ன உது...?'' என்னால தாங்க முடியேல்ல, என்ர பிள்ளை உயிரோடு இருந் திருந்தால் பொங்கலுக்கு வந்திருப்பான். என்ன செய்ய செத்தாலும் துன்பம் தான்... ஆனா ... அதுக்கேன் அழுகிறீங்கள். என்றான் பக்கத்து வீட்டு கனகு, ''அங்கால சனம் போகுது அழுகிறது சரியில்ல லச்சுமியக்கா'' முன் வீட்டு பொன்னி. லச்சுமி பெருமூச்சோடு தன் அழுகையை அடக்கிக் கொண்டாள். நினைவுகள் உள்ளே கொப்பளித்தன. போன முறை கூடப் பொங்கல் நல்ல படியாய் நடந்தது. லச்சுமியும் வீட்டில் பொங்கி மோதகம் அவித்தாள். பொங்கி முடியிற நேரமளவில் ரவியும் வந்தான். அவனோடு கூட மூன்று பேரும் வந்தார்கள்.

''தம்பிமார் கொஞ்சம் நிண்டு கொள்ளுங்கோ. பொங்கல் சாப்பிட்டுப் போகலாம்.'' சருவச் சட்டிக்குள் பூசைச் சாமான்களை வைத்துக் கொண்டு கோயிலுக்கு ஓடினாள். பூசையிலோ அவள் மனம் இருக்கவில்லை. வீட்டிலே காத்திருக்கும் பிள்ளைகளுக்காகத் துடித்தாள்.

''சொல்லாமல் போய் விடுவாங்களோ, கெதியாய், கெதியாய்'' என்று அவள் மனம் அவசரப் பட்டது. ஒன்றுக்கு மூன்று தேவாரங்களைப் பாடிய சிவயோதி மீது இவளுக்கு எரிச்சல் வந்தது. பூசை முடிந்ததும் எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்தாள்.

ரவி ரேடியோவைக் கழற்றி ஏதோ ''றிப்பியர்'' பார்த்துக் கொண்டிருந்தான். மற்றவர்கள் கரம்போட் அடித்துக் கொண்டிருந் தார்கள்.

''ரவிக்கு மோதகங்கள் என்றால் நல்ல பிடிப்பு'' என தனக்குள்ளே நினைத்துக் கொண்டு மோதகங்களைப் பொறுக்கி ஒரு தட்டில் வைத்தாள். பொங்கலை அள்ளித் தட்டுகளில் ஆறவிட்டாள். படைத்த மாம்பழங்களில் இரண்டை எடுத்துத் தோல் சீவி நால் வருக்கும் பொங்கல், மோதகங் களை போட்டுக் கொடுத்தாள்.


தம்பியவை வெக்கப் படக் கூடாது இது உங்கட வீடு மாதிரி முழுதும் சாப்பிட்டு விட்டு வெறும் தட்டுத்தான் வைக்க வேண்டும்.

ஒல்லியாய் நீக்குறோ மாதிரி தலைமயிருடன் இருந்தவனின் முகத்திலே சிறு புன்னகை பூத்தது. தொட்டாள் ஒட்டி விடுமோ என்று அச்ச மூட்டும் கறுப்பு நிறம். உள்ளே போய் இன்னும் கொஞ்சம் மோதகங்களும் பொங்கலும் எடுத்து வந்தாள்.

'' ஐயோ அம்மா காணும், எனக்கு வயிறு வெடிக்கப் போகுது'' எனத் துள்ளி எழுந்த அவன் தட்டைத் தலைக்கு மேலே உயர்த்தினான். ''ஒவ்வொரு வருஷமும் பொங்கலுக்கு இங்கே தான் வர வேணும்.'' அடுத்த வருடப் பொங்கலுக்கு எங்கள்ள யார் யார் இருக்கிறமோ? யார் யார் இல்லையோ....?'' என்று சொல்லி வாய் மூடுவதற்குள்ளே அவன் மண்டையில் ''டொக்'' என்று ஒரு குட்டுப் போட்டாள்.

'ஒரு நாளும் உப்பிடி சகுனம் பிளைச்ச கதை கதையாத. முருகன் ஒருதருக்கும் ஒண்டும் நடக்க விடமாட்டான்' என்று கூறிய படியே திருநீற்றை நால்வருக்கும் பூசி விட்டாள். செம்புத் தண்ணியை வயிறு முட்டக் குடித்து விட்டு எழும்பிய ஒல்லியன் வயிற்றைத் தடவிக் கொண்டு நடந்தான்.

''உனக்கு என்ன பேரப்பு'' எனக்கோ எனக்கு 'பரமு' பேர். அம்மா வேற மோதகம் இருக்கிறதா? என இரகசியமாய்த் தன் தாயிடம் கேட்டான் ரவி. ஓம் கிடக்கு தாய் மறுமொழி சொன்னாள். அங்க கொஸ்ரல்ல ஆறேழு பெடியங்கள் நிக்கிறாங்கள். அவங்களுக்குக் கொண்டு போக வேணும்.



லச்சுமி உள்ளே போய் பெட்டிகளிலும் சருவங்களிலும் இருந்தமோதகங்களைப் பொறுக்கி ஒரு பையினுள் போட்டாள். இரண்டு சீப்புக் கப்பல் வாழைப் பழங்களையும் அதனுள் இட்டாள். ரவி பையை வாங்கிக் கொண்டு சைககிலில் ஏறினான். ''அம்மா போயிட்டு வாறம்''.''ஓம் குஞ்சுகள் போயிட்டு வாங்கோ'' படலை வரை சென்று வழியனுப்பினாள். ஒழுங்கையிலே அவர்கள் உருவம் மறையும் வரை நின்று விட்டு வந்தாள். இவைகள் அனைத்தும் முன்னால் நடனம் இடுவது போல் இருந்தது. நிமிர்ந்து பார்த்தாள். பெரிய தம்பி வாத்தியார்.

''வாத்தியார் நீங்களோ'' உன்னி எழும்பினாள். ''கொஞ்சம் வெள்ளைப் பூ வேணும்.'' வாத்தியார் பூமரத்தைப் பார்த்தபடி கூறினார். ''தாராளமாய்ப் பிடுங்குங்கோ''. பெரிய தம்பி வாத்தியார் கிணத்தடிக்குப் பூப்பிடுங்கப் போனார். பெரிய தம்பி வாத்தியாரிடம் தான் ரவி படித்தவன். முரட்டுத்தனம் கொண்ட ரவியை நெறிப்படுத் தியவர். வயதுக்கு முந்தின துடுக்குத்தனம் கொண்டவனை அவ னது திறமைகள் வெளிப்படும்படி ஆக்கியவர்.

பூக்களைப் பறித்துக் கொண்டு வந்தார் வாத்தியார். ''லச்சுமி என்ன ஆறுதலாய் இருக்கிறாய் அம்மாளாச்சிக்குப் பொங்கேல்லையோ?'' ''நான் நம்பியிருந்த என்ர பிள்ளை என்னை விட்டு விட்டுப்போயிட்டுதாம், எனக்கு என்ன பொங்கலும் விழாவும்'' சலிப்புடன் வார்த்தைகள் விழுந்தன. ரவி தன்னிடம் மோதகங்களை வாங்கிக் கொண்டு செல்லும் போது நடந்த விபத்தில் ரவி இறந்த நினைவு மீண்டும், மீண்டும் அவள் மனதில் வந்தது.

''உப்பிடிச் சொல்ல[illegible] லச்சுமி, ரவியைப் போன்ற இளம் பிள்ளைகளுடைய ஆத்மா சாகிறதில்லை. இன்னுமொரு பிள்ளையாகப் பிறப்பான்'' வாத்தியார் சொல்லுவதும் உண்மை போல் தென்பட்டது. அவள் திரும்பி சுவரில் கொழுவியிருந்த ரவியின படத்தைப் பார்த்தாள். அவன் சிரிப்பது போன்றிருந்தது. ஓம் அம்மா நான் சாகேல்ல என்பது போலிருந்தது அந்தச் சிரிப்பு.

''புத்திர சோகம் பொல்லாதது தான் ஆனால்..... மனதை ஆற்றிக் கொள்ள வேணும். எல்லாப் பிள்ளைகளும் எங்கட பிள்ளைகள் என்று நினைத்து வாழ வேணும்'' வாத்தியார் இவ்வாறு கூறியபடி பூக்களுடன் புறப்பட்டார். எல்லாப் பிள்ளைகளும் எங்கட பிள்ளைகள் என்று நினைத்து வாழ வேணும். காதுக்குள்ளே திரும்பத் திரும்பக் கேட்டது.

''போட்டு வாறம் அம்மா'' என்று ரவியின் நண்பர்கள் கூறிய வார்த்தைகள் அவளது காதுக்குள் இனித்தது. எல்லாப் பிள்ளைகளும் எங்கட பிள்ளைகள் தான்.

கண்களைத்துடைத்து விட்டு எழுந்தாள். கிணற்றடி நோக்கிப் போனாள். நன்றாகக் குளிர்ந்த நீரில் குளித்து விட்டு கோயில் நோக்கி அர்ச்சனைச் சாமான்களுடன். விரைந்தாள்.

# அவளுக்கென்று ஓர் உலகம்!


த.சந்திகா

சூரியனுடைய பொற் கதிர்கள் மெல்ல மெல்ல கடற் பரப்பில் ஒளித்தெறிப்படைந்து கடற்பரப்பை ஒளிமயமாக்குகிறது. சூரியனின் வாழ்க்கை பொன்மயமாக விளங்குகிறது. ஆனால் நீலாவின் வாழ்வோ இன்று சோகமயமாக எதிலும் பிடிப்பில்லாமல் நடைப்பிணமாக சுழன்று கொண டிருக்கிறது. அவள் செய்த பாவம் என்ன? இவளுக்கேன் இந்த நிலை? விடை காண இயலாமலேயே நித்தம் கழிகிறது.

அன்று மாலை நேரம் வேலை விட்டு வீடு செல்ல மனமிலலாத நீலா கடல் மணலை அழைந்தபடி எங்கோ பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். பறவைகளின் கீச்சிடும் ஒலியும் கடல்ல மோதும் ஒலியும் கூட அவள் காதில் விழவில்லை. அவளது நினைவு கடந்த காலத்தை மீட்டிப் பார்க்கிறது.

நீலா க.பொ.த உயர் தரம் படிக்கும் மாணவி. அவள் பெற்றோருக்கு ஒரு பிள்ளை. ஏகப்பட்ட சொத்து. செல்வச் செழிப்பில் புதைந்து வளர்ந்தவள். அப்படிப்பட்டவளுக்கு இளமைப்பருவம் மீட்ட அவளுக்கும் காதல் பிறந்தது. அவளின் ஊரைச் சேர்ந்த கௌதமன் என்பவனிடமே அவள் மனதைப் பறி கொடுத்தாள். கௌதமன் பல்கலைக் கழகத்தில் புவியியல்· பீட இரண் டாம்வருட மாணவன். அவனுக்கு ஒரு தங்கை. பெயர் கௌரி. கௌரியும் நீலாவும் நண்பிகள். நீலா அடிக்கடி கௌரியின் வீட்டிற்குச் செல்வாள். அவ்வாறு செல்லும் போது தான் கௌதமனின் நட்பும் கிடைத்தது. நீலாவின் குண்டுக் கண்களும், ஒயிலியான உடல் வாகும், படிப்பில் அவள் காட்டும் ஆர்வமும் கௌதமனை ஈர்த்ததில் வியப் பில்லை. அவர்களின் அன்பு மலர்ந் துமணம் வீசிக் கொண்டிருந் தமையை இரு வீட்டாரும் அறிந் தனர். இரு வீட்டாரும் பச்சைக் கொடி காட்டினார்கள்.

அந்தோ பரிதாபம். 1995ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய இடப்



பெயர்வால் நீலாவின் குடும்பம் சாவகச்சேரியில் தஞ்சமடைந்தது. கௌதமனின் குடும்பமோ வன்னியில் தஞ்சமடைந்தது. அங்கே தான் இவர்கள் வாழ்விலும் விதி விளையாடியது. இராணுவக் கெடுபிடிகளால் வன்னிக்கும் யாழ்ப் பாணத்திற்கும் தொடர்பு துண்டிக் கப்பட்ட காலம்.

மீண்டும் யாழ்ப்பாணம் போகலாம் என்ற கட்டளையின் பிரகாரம் நீலாவின் குடும்பம் யாழ்ப்பாணம் திரும்பியது. நீலாவுக்கும் கௌதமனுக்கும் எவ்வித தொடர்பு மில்லை. இன்று பதில் வரும், நாளை பதில் வரும் என்று 'இலவு காத்த கிளி போல' காத்திருந்து ஏமாற்றம் அடைந்தாள். நீலாவின் பெற்றோரும் ஆறுதல் கூறினார்கள். இயல்பாகவே படிப்பில் சுட்டியான நீலாமனதைக் கல்லாக்கித் துயரத் தைத் தாங்கி கல்வி கற்று பல் கலைக் கழகம் சென்று இன்று ஆசி ரிய்யயாக கடமையாற்றுகிறாள்.

ஆம் அவள் நிலை மாறி விட்டது. இன்று அவள் ஒரு ஆசிரியை. எல்லோருக்கும் ஒளி தீபமாய் வழிகாட்டுபவள். ஆனால் அவள் வாழ்வில் இருள் மண்டியே கிடக்கிறது. 2002ஆம் ஆண்டு ஏப்பிரலில் ஏ-9 பாதை திறக்கப் பட்டது. அவ்ள் மனதில் இயல் பான சந்தோஷத்தை ஏற்படுத் தியது. தனது பெற்றோரிடம் அனுமதி வேண்டிய அவள் மாமனாருடன் வன்னிக்குச் சென்றாள். வன்னிக்குச் செல்லும் போது அவள் மனம் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொருயுகமாய்க் கழிந்தது.

வன்னிக்குச் சென்று கௌதமனை விசாரித்தாள். கௌதம் இப்போது எங்கிருக் கிறார். அவரை நான் உடனடியாகச் சந்திக்க வேண்டும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்..... என்று கேட்டாள். அவளுக்கு உடனடியாக விடை கிடைத்தது. அவர் புதுக்குடியிருப்பில் 'தமிழன்' என்ற பெயருடன் பொறுப்பாளராக இருக் கிறார். நீலா காலத்தை வீணாக் காது அங்கே சென்று சந்தித்தாள்.

கௌதமனோ தாய் மண்ணின் மீது கொண்ட பற்றின் அடையாள மாகத் தன்னை அர்ப்பணித்து விட்டான் என்பதை அவனது சொல்லும் செயலும் காட்டி நின் றது. ஆம் அவனது ஒரே தங்கை கிளாலியைக் கடக்கும் போது படகில் காலதேவ னுக்கு 1995இல் இரையாகி விட்டாள். கிளாலியைக் கடக்கும் போதே அவனது தங் கையின் பரிதாபநிலை ஒரு கணம் அவனை உலுக்கி விட்டது. மகளின் பிரிவினால் மனம் தாங் காது ஒருவர் பின் ஒருவராக த்தாயும் தந்தையும் இறைவனடி சேரத் தனிமையில் அகப்பட்ட துரும்பு போல் கௌதமன் தத்த ளித்தான். இந்நிலையில் தாய் மண் அவனை அரவ ணைத்தது. அதனால் அவன் நீலாவை மறந் தான்.

இன்று அவள் மீண்டும் வரும் போது பழைய நினைவு பசுமரத்தாணி போல மீட்டினாலும் அவன் தமிழ் அன்னையின் மீது கொண்ட காதல் வெற்றி கொள்ள நீலாவை உதறினான். ஏமாற்றத் துடன் திரும்பிய நீலா இன்று நடைப்பிணமாகக் கடற்கரை மணலை அளைந்தபடி இருக்கிறாள். இனி நான் என்ன செய்வது? காத் திருந்த கௌதமும் மலைமீது ஒளி வீசும் ஒளியாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளான். என்ர நிலை என்ன? என் வாழ்வின் அர்த்தமென்ன? என்ற கேள்வி அவள் மனதை வாட்டுகிறது. நீலா! நீலா!என்ன தனிமையில் இனிமை காணுகிறாயோ என்ற மாலாவின் கேள்வியால் தன்னிலைக்கு மீண்ட நீலா ஒன்றுமில்லை மாலா சும்மா பொழுது போக்க வந்தனான். நேரம் போட்டுது அம்மா தேடப் போறா உங் களுடன் நானும் வாறன் என்று கைப்பையை தோளில் கொழுவிச் சேலையைச் சரி செய்த வண்ணம் மாலாவின் காரில் ஏறுகிறாள். மாலா நீலாவை அவளின் வீட்டில் இறக்கி விடுகிறாள்.

வீட்டினுள் நுழைந்த நீலா நேராக சென்று குளித்து விட்டு வந்து கோலில் அமர்ந்து தாய் கொடுத்த தேநீரை அருந் திய படி ''அம்மா நான் வன்னிக்குப் போகப்போகிறேன். அங்க உள்ள பிள்ளைகளுக்கு ஒளிமயமான வாழ்க்கையைக் கொடுக்கப் போறன். கௌதமனை இழந்த எனக்கு வாழ்வின் புதிய இலட் சியமாக சேவை என்ற நோக்கில் வாழ விரும்புகிறேன். என்னை மறியாதையுங்கோ. நீங்கள் விரும் பினால் என்னோட வாங்கோ. எனக்கு என்றொரு உலகமிருக்கு அங்கு ஒரு சிறந்த ஆசிரியையாக புகழ்பெற விரும்புகிறேன் என்று கூறி விட்டு தனது அறைக்குள் செல்கிறாள். மறுநாள் காலை நீலா தனது சூட்கேசைத் தூக்கிய படி வன்னி செல்ல யாழ் பஸ் நிலையம் நோக்கி நடந்தாள். கண்களில் நீர் வடிய அவள் செல்வதை தாயும், தந்தையும் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.



# மகளிர் உலகம்

## எந்த வயதில் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும்?



தங்கள் குழந்தைகள் ஆங்கில றைம்ஸ் சொன்னால் பெற்றோருக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது. இன்று அந்த பிள்ளைகளின் குழந்தைத்தனம் முடிந்து வருகிறது. அவர்கள் வயதுக்கு மிஞ்சிய புத்திசாலியாகிறார்கள்.

இதற்குக் காரணம் தக்க வயதுக்கு முன்பே குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புவது தான். தன் குழந்தையை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, தாய்மார்கள் 2–3 மணி நேரம் ஒய்வு எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள். எல்லாக் குழந்தைகளும் ஓடும்போது, ஏன் நம் குழந்தை மட்டும் பின்தங்க வேண்டும் என் றும் எண்ணுகிறார்கள்.

சில பாடசாலைகளைத்தவிர பெரும்பாலான பாடசாலைகள் பணம் சம்பாதிக்கும் வியாபாரக் கூடங்களாக உள்ளன . அந்தப் பாடசாலைகளில் உட்காருவதற்குக் கூட சரியாக இடம் இல்லாமல், அளவுக்கு அதிகமாகக் குழந்தைகளை சேர்த்துக் கொள்கிறார்கள். இந்த வயதில் குழந்தைகளுக்குத் தேவையான படிப்பை நீங்களே விளையாட்டாக வீட்டிலேயே சொல்லித்தரலாம். நிச்சயமாக குழந்தைகள் அதை நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.


குழந்தைகளின் மனம் அழகானது. அவர்களைச் சரியான வயதுக்கு முன்பே கட்டுப்பாடுகளில் கட்டிப் போடாதீர்கள். அவர்கள் படிக்கும் பாடசாலை 5–ஸ்டார் ஹோட்டல் போன்ற வசதி கொண்டதாக இருப்பினும், வீட்டின் சுதந்திரத்துக்கு ஈடு இணையில்லை. அவசரமாகக் குழந்தைகளைப் பாடசாலையில் சேர்த்து நாம் அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடை போடுகிறோம். இதனால் குழந்தைகளுக்கு படிப்பின் மீது வெறுப்பு ஏற்படவும் வாய்ப்புண்டு.

தக்க வயதுக்கு முன்பே பள்ளியில் சேர்ப்பதால், நம் சின்னஞ்சிறு குழந்தைகளின் குழந்தைப் பருவம் எங்கோ காணாமல் போகிறது. இன்று அவர்கள் பந்து விளையாடுவது மண்ணில் வீடு கட்டுவது போன்றவற்றை விட்டு விட்டு கிளிகள் போல் பெரிய பெரிய பாடங்கள், கதைகள் போன்றவற்றை (அவற்றின் அர்த்தம் புரிந்தாலும் புரியாவிட்டாலும்) மனப்பாடம் செய்ய வேண்டியுள்ளது!

படிப்பதற்கு பல ஆண்டுகள் உள்ளன. ஆனால் குழந்தைப் பருவம் விரைவில் முடிந்துவிடும். குழந்தைகள் குழந்தைகளாகவே இருக்கட்டுமே!

*சுந்தரி.*

## நம்பினால் நம்புங்கள்!



(சென்ற வாரத் தொடர்ச்சி)

- வலது கைப் பழக்கம் உள்ளவர்கள் இடது கைப் பழக்கம் உள்ளவர்களை விட சுமார் 9 வருடம் அதிகமாக வாழ்கிறார்கள்.
- முதலைகளால் மனிதர்கள் அல்லது நாய்களைப் போல் நாக்கை நீட்ட முடியாது.
- எறும்புகளால் தங்கள் உடல் எடையை விட 50 மடங்கு வெயிட்டான பொருள்களைத் தூக்க முடியும். 30 மடங்கு கனமான பொருள்களை இழுக்க முடியும். போதையில் அவை எப்போதுமே வலது பக்கம்தான் சாய்கின்றன.
- பனிக் கரடிகளுக்கு இடது கைப் பழக்கம்.
- தெள்ளுப் பூச்சிகளால் தன் உடல் நீளத்தை விட 350 மடங்கு தூரம் தாவ முடியும். இது மனிதர்கள் ஒரு கிரிக்கெட் மைதானத்தைத் தாண்டுவதற்குச் சமம்.
- மிருகங்களில் யானையால் மட்டும்தான் குதிக்க முடியாது.
- பறவைகளில் வௌவால் மட்டுமே முலையூட் டியாகும்.

சத்தியப்பிரியா,
உரும்பிராய்.

## இயற்கை தந்துள்ள அழகு சாதனங்கள்!



(சென்ற வாரத் தொடர்ச்சி)

*வெந்தயம்*

சீயக்காய் அரைக்கும்போது வெந்தயம் போட்டு அரைப்பது வழக்கம். ஷாம்பு உபயோகிக்கும் இந்தக்காலத்தில், இதைத் தண்ணீரில் ஊற வைத்துக் குளிப்பதற்கு முன் முடியில் தடவினால் முடி பள பளப்பாக இருக்கும்.

*விளக்கெண்ணெய்*

கை, கால்களில் விளக்கெண்ணெய் தடவினால் வெடிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கலாம். இதை புருவத்திலும், கண் இமையில் உள்ள முடியிலும் தினமும் படுப்பதற்கு முன் தடவி வந்தால் அது அடர்த்தியாகும்.


*பருப்பு*

கலந்து முகத்தில் தடவினால், எண்ணெய் பசையைப் போக்கும். ஊறவைத்த பாதாம் பருப்பையும், உருளைக்கிழங்கையும் அரைத்துக் கண்களுக்குக் கீழே தடவி வந்தால் வீக்கத்தைக் குறைக்கும்.

*வாழைப்பழம்*

இதை நன்றாக மசித்துத் தினமும் முகத்தில் 10 நிமிடங்களுக்குத் தடவினால் முகம் மிருதுவாகும்.

## ஸ்பொஞ்ச் கேக்



தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| கோதுமை மா | : 250 கிராம் |
| சீனி | : 500 கிராம் |
| வெண்ணெய் | : 250 கிராம் |
| பேக்கிங் பவுடர் | : 2½ டீஸ்பூன் |
| கோழி முட்டை | : 5 |
| திராட்சை | : 5 |
| முந்திரி பருப்பு | : 125 கிராம் |
| கஸ்டர்டு பவுடர் | : 1½ டீஸ்பூன் |

*செய்முறை:–*

கோதுமை மாவையும், பேக்கிங் பவுடரையும் நன்றாகச் அரித்துக் கொள்ளவேண்டும். வெண்ணெயை நுரை பொங்க அடித்து, அத்துடன் சீனியையும் சேர்த்துக் க்ரீம் போல அடிக்க வேண்டும். முட்டைகளை நுரைக்க அடித்துக் கொள்ள வேண்டும்.

## மருத்துவக் குறிப்புக்கள்


✡ சளித்தொல்லையா? இரவு தூங்கச் செல்லும் முன்பு சிறிதளவு வெந்தயம் சாப்பிட்டு ஒரு டம்பளர் வெந்நீர் குடித்தால் காலப் போக்கில் சளித் தொல்லை நீங்கும்.

✡ முடி உதிர்கிறதா...? நெல்லிக் கனிகளை அரைத்து அதில் எலுமிச்சம் பழச்சாற்றைக் கலந்து தலையில் தேய்த்துக் குளித்தால் முடி உதிர்வது நின்று விடும்.

✡ வாய்ப்புண்ணா...? மணத்தக்காளி சாப்பிட்டால் வாய்ப்புண், குடற்புண் போன்றவை குணமாகும்.

✡ அடிக்கடி கோபப்படுவது, எதைப் பார்த்தாலும் ஏக்கம் கொள்வது அதிகமான கவலை, மன உளைச்சல் இவையெல்லாம் நீரிழிவு நோய்க்கு

| | | |
|---|---|---|
| கோதுமை மா | : | 250 கிராம் |
| சீனி | : | 500 கிராம் |
| வெண்ணெய் | : | 250 கிராம் |
| பேக்கிங் பவுடர் | : | 2½ டீஸ்பூன் |
| கோழி முட்டை | : | 5 |
| திராட்சை | : | 5 |
| முந்திரி பருப்பு | : | 125 கிராம் |
| கஸ்டர்டு பவுடர் | : | 1½ டீஸ்பூன் |



*செய்முறை:–*

கோதுமை மாவையும், பேக்கிங் பவுடரையும் நன்றாகச் அரித்துக் கொள்ளவேண்டும். வெண்ணெயை நுரை பொங்க அடித்து, அத்துடன் சீனியையும் சேர்த்துக் க்ரீம் போல அடிக்க வேண்டும். முட்டைகளை நுரைக்க அடித்துக் கொள்ள வேண்டும். இந்த மூன்று கலவைகளையும் முறைப்படி சேர்த்துக் கலவையிட்டு, அதன் பின் மற்ற பொருள்களையும் சேர்த்துக் கலந்து கொண்டு, தகர ட்ரேயில் பட்டர் பேப்பர் லைனிங் செய்து வெண்ணெய் தடவி, அதில் ஊற்றி பேக் செய்யவும். ஒரு மணி நேரம் வெந்தபின் இறக்கவும்.

வெந்தயம் சாப்பிட்டு ஒரு டம்ளர் வெந்நீர் குடித்தால் காலப் போக்கில் சளித் தொல்லை நீங்கும்.

✡ முடி உதிர்கிறதா...? நெல்லிக் கனிகளை அரைத்து அதில் எலுமிச்சம் பழச்சாற்றைக் கலந்து தலையில் தேய்த்துக் குளித்தால் முடி உதிர்வது நின்று விடும்.

✡ வாய்ப்புண்ணா...? மணத்தக் காளி சாப்பிட்டால் வாய்ப்புண், குடற் புண் போன்றவை குணமாகும்.

✡ அடிக்கடி கோபப்படுவது, எதைப் பார்த்தாலும் ஏக்கம் கொள்வது அதிகமான கவலை, மன உளைச்சல் இவையெல்லாம் நீரிழிவு நோய்க்கு வழிவகுக்கும்.


✡ வெள்ளரித் துண்டுகளை கண்கள் மீது வைத்துக் கட்டினால் கண்கள் புத்துணர்ச்சி பெறும்.

# கண்களின் கீழே கருவளையமா...?

உலகெங்கும் காணப்படும் பொதுவான ஒரு அழகுப் பிரச்சினை கருவளையங்கள் ஆகும். கண்களுக்குக் கீழே ஏற்படும் அழகற்ற இந்தக் கருப்பு நிற வளையம் பல காரணங்களால் ஏற்படுகின்றது. அவற்றை தடுப்பது எப்படி என்பது பற்றியும், கண் பராமரிப்புப் பற்றியும் உங்கள் நன்மைக்காகக் குறிப்புகள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன.

மங்கலான வெளிச்சத்தில் படிப்பதைத் தவிர்க்கவும். இது கண்களுக்குத் தேவையற்ற சிரமத்தை ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக கண் சிவப்பதுடன் கருவளையமும் உண்டாகலாம்.

கம்ப்யூட்டரில் நீண்ட நேரம் வேலை செய்பவர்கள், மணிக்கொரு முறை கண்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். அந்த சமயத்தில் கண்களை உள்ளங்கையின் அடிப்பாகத்தால்லேசாக அழுத்தி விட வேண்டும். மற்றும் பச்சை அல்லது நீல



நிறத்தில் உள்ள பொருட்களை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருக்கலாம். இந்த நிறங்கள் கண்களுக்கு இதமானவை.

வெயிலில் வெளியே செல்ல வேண்டியிருந்தால் 'கூலிங் க்ளாஸ்' அணியவும். ஏனெனில் வெயிலில் கண்களில் எற்படும் கூச்சத்தால், கண்களுக்குக் கீழே சுருக்கங்கள் ஏற்படலாம்.

கண்களுக்குக் கீழே உள்ள சருமம் மிகவும் மென்மையானதால் அதை இழுத்து விடுவதோ, தேய்ப்பதோ கூடாது. இப்படி முரட்டுத்தனமான காரியங்கள் செய்தால் சுருக்கங்கள் ஏற்படலாம்.

'ஃபேஸ்பேக்' மற்றும் 'அஸ்டிரின்ஜென்ட்' கண்களைச் சுற்றிப் போடக் கூடாது. அவை காய்ந்த பின் அந்த இடத்தில் உள்ள தோலை இழுத்து சுருக்கத்தை ஏற்படுத்தும்.

கண்களுக்கு அடிக்கடி சுகம் அளிக்க குளிர்ந்த பாலில் நனைத்த பஞ்சை / உருளைக் கிழங்கு துண்டை/ வெள்ளரித் துண்டை/ இளஞ் சூடான நீரில் நனைக்கப்பட்ட டீ பேகை கண்களின் மேல் சிறிது நேரம் வைக்கலாம். மேக்கப்பை கலைக்கும் போது கண் பகுதியில் மெதுவாக ரிமூவரை பயன்படுத்துங்கள்.

(தொடரும்.....)

ஊற வைத்துக் குளிப்பதற்கு முன் முடியில் தடவினால் முடி பள பளப்பாக இருக்கும்.

*விளக்கெண்ணெய்*

கை, கால்களில் விளக்கெண்ணெய் தடவினால் வெடிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கலாம். இதை புருவத்திலும், கண் இமையில் உள்ள முடியிலும் தினமும் படுப்பதற்கு முன் தடவி வந்தால் அது அடர்த்தியாகும்.

*பருப்பு*

கடலை மாவையும், பயத்தம் பருப்பு மாவையும் கலந்து சோப்புக்குப் பதிலாக உபயோகித்து வந்தால், உங்கள் சருமம் உலர்வதைத் தவிர்க்கலாம்.

*தேங்காய் எண்ணெய்*

இதை முடியில் தடவுவது பல்லாண்டு காலமாகத் தொடர்ந்து வரும் பழக்கம். இதை வாரம் ஒருமுறை உடலில் நன்றாகத் தேய்த்து, அதன் பின் குளித் தால் பட்டுப் போன்ற மென்மை தரும்.

*பூசு மஞ்சள் தூள்*

இதைத்தொடர்ந்து முகத்தில் பூசிக் குளித்தால் முகத்தில் முடி வளர்வதைத் தடுக்கலாம். ஆனால் மஞ்சள் தேய்த்துக் குளித்தவுடன் வெய்யிலில் செல்வதைத் தவிர்க்கவும். ஏனென்றால் இதனால். சருமம் கருமை அடையும்.

*உருளைக்கிழங்கு*

இதை அரைத்துப் பாலுடன் சேர்த்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்துக் கழுவவும். இது உலர்ந்த சருமத்திற்கு நல்லது.அரைத்த உருளைக்கிழங்கை, எலுமிச்சம் பழச்சாற்றுடன்

கும். ஊறவைத்த பாதாம் பருப்பையும், உருளைக்கிழங்கையும் அரைத்துக் கண்களுக்குக் கீழே தடவி வந்தால் வீக்கத்தைக் குறைக்கும்.

*வாழைப்பழம்*

இதை நன்றாக மசித்துத் தினமும் முகத்தில் 10 நிமிடங்களுக்குத் தடவினால் முகம் மிருதுவாகும்.

# அழகு சாதனங்கள்!

*காரட்*

இதன் சாறு எடுத்து முகத்தில் தடவினால் சருமத்தின் உள்ளே இருக்கும் அழுக்கை நீக்கும்.

*தயிர்*

மசித்த பப்பாளிப் பழத்தைத் தயிருடன் சேர்த்து முகத்தில் தடவுவதால் முகத்துக்குப் பொலிவு கிடைக்கும்.

*புதினா இலை*

இதை எலுமிச்சைச் சாற்றுடன் சேர்த்து அரைத்து முகத்தில் தடவினால், பருக்களை நீக்கும்.

*நெய்*

உதட்டின் வெடிப்பை நெய் தடவுவதால் போக்கலாம்.

*ஐஸ் கட்டி*

மேக்கப் போடுவதற்கு முன்பு முகத்தை ஐஸ் கட்டியால் தடவினால் நீங்கள் போடும் மேக்கப் நீண்ட நேரம் நீடிக்கும்.

*L. விஜயலட்சுமி*

## வியா! ஐ.சி.சி கிரிக்கெற்றில் இந்திய - இலங்கை அணி பற்றிய உங்கள் கருத்து என்ன?

*பிரியங்கா — திருநெல்வேலி*

மூன்றாவது உலகப் போர் நிகழ்ந்தால் அதன் விளைவு எப்படியிருக்கும்? (நிகழக் கூடாது என்றே இறைவனை வேண்டுகிறேன்)

❖ **இப்படியொரு கேள்வியை விஞ்ஞானி ஐன்ஸ்ரினிடமிருந்து கேட்ட போது அதற்கு அவர் கூறிய பதில், 4ஆம் உலகப் போரில் கற்களும், தடிகளுமே பயன்படுத்தப்படுமென்றார்.**

*எஸ் நிரஞ்சலா. — கரவெட்டி*

'பணம் பத்தும் செய்யும்' என்றால் பாசம் என்ன செய்யும் வியாசரே?

❖ **பதினொன்றாவதைச் செய்யும்.**


*S.தரனி. — பருத்தித்துறை*

உயிர்க்காதல் என்றால் என்ன அங்கிள்?

❖ **ஒரு அங்கிளிடம் கேட்கிற கேள்வியா இது.**

*சறோ — யாழ்ப்பாணம்*

விலங்குகளிற்கும் எழுதப் படிக்கத் தெரிந்தால் என்னவாகும்?




❖ **எனக்குப் பதில் எழுதுவது பெரும் பாடாகும்.**

*நி.தரனி — பருத்தித்துறை*

அங்கிள்! காதல் சுகமானதா? சுமையானதா?

❖ **காதலை ஒருபக்கமாக வைத்திருந்தால் சுமை வராது.**

*நல்லசிவம் — அத்தியடி*

வியா! கேள்விக்குப் பதில் சொல்வது எதற்காக? எங்கள் திறமையைப் புரிந்து கொள்ளவா? உங்கள் திறமையை எங்களிற்குப் புரியவைக்கவா?

❖ **இரண்டுக்குமே அல்ல. வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க அவ்வளவு தான்.**

*நி.தரனி — பருத்தித்துறை*

வியா அங்கிள்! பெண்களிற்கு மீசை முளைத்தால்...?




❖ **ஆண்கள் தலை தெறிக்க ஓடுவார்கள்.**

*குமரவேள் — வண்ணார்பண்ணை*

உலகத்திலேயே சந்தோஷமான வேலை எது? சமாளிக்காமல் பதில் சொல்லுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்?

❖ **கேள்வி கேட்பது.**

*விவேக் — வவுனியா*

வியா மாமா! காதலிக்கச் சரியான வயது எது?

❖ **என்னிடம் கேட்டால் இருபது என்பேன். நெல்சன் மண்டேலாவிடம் கேட்டால் எண்பது என்பார். பில்கிளின்ரன் விடுவாரா ஐம்பதையும் விட்டு விடாதீர்கள் என்பார்.**

*எஸ்.அன்ரனி — மீசாலை*

வியா மாமா! கடவுளின் படைப்பில் பரிதாபமானது எது?

❖ **'வாழைமரம்' குலை போட்ட குற்றத்திற்காக வெட்டப்படுகிறதே. இதைவிடப் பரிதாபம் வேறு என்ன இருக்க முடியும்.**

*க.ராகுல் — வவுனியா*

எப்பொழுதும் முழுமகிழ்ச்சியுடன், மனிதன் உலகில் இருக்க முடியுமா?

❖ **ஏன் இருக்க முடியாது. இமாலயாவில் எத்தனையோ துறவிகள் மகிழ்வோடு இருக்கிறார்கள்.**

*சு.நட்சத்திரா — மல்லாகம்*

வியா! சினிமா நட்சத்திரங்களோடு ஒப்பிடும் அளவிற்கு உங்களிற்கும் விசிறிகள் கடிதம் எழுதுகிறார்களாமே! உண்மையா?

❖ **யாவும் கற்பனை.**

## வியாசரின் பதில்கள்

## வியா! விலங்குகளிற்கும் எழுதப் படிக்கத் தெரிந்தால் என்னவாகும்?

*ஆ.பிரியா — ஆனைக்கோட்டை*

உண்மையைச் சொன்னால் என்ன வியாசரே?

❖ **அசுவத்தமா இறந்தது மெய்யோ..... யானை என்று தருமன் கூறியதைச் சொல்லுவீர்களா..?**

*மாலதி — சங்கானை*

வியாசரே! உமது கெட்டித்தனத்திற்கு ஒரு சோதனை. பெண்களை Mrs றொஹான், Mrs ராஜு என்று கணவன் பெயரை வைத்து அழைக்கின்றோம்...ஏன் ஆண்களை Mr. சுமதி, Mr. பிரியா என்று அழைப்பதில்லை...? எங்கே... உமது விடை?

❖ **நாடு கெட்ட கேட்டிற்கு நாசமாய்ப் போன உம் மூளையை என்ன செய்வது?**


*சசிகாந் — ஏழாலை*

வி.....! சுற்றிவளைத்துப் பேசுவது உங்களுக்குப் பிடிக்குமா?

❖ **சீ.....பிடிக்காது.**

*வி.ராஜா — கிளிநொச்சி*

எந்த வயதில் உங்களுக்குப் பொறுப்புணர்ச்சி வந்தது வியாசரே?




❖ **நீங்கள் கேள்வி கேட்டதில் இருந்து.**

*J.வேணுஜா — பருத்தித்துறை*

நிமிர்ந்து நின்றால் 'திமிரா' என்று பேசுகிறார்கள். படுத்தால் ஏறிமிதிக்கிறார்கள். நான் என்ன தான் செய்வது...?

❖ **நல்ல (பதவி) கதிரையாகப் பார்த்து இருந்து கொள்ளும். எல்லாம் சரிவரும்.**

*P.பானு — சாவகச்சேரி*

வியாத்தம்பி! 'குறட்டை' என்கிற கொடுமையை நிறுத்த ஏதாவது வழி சொல்லுங்களேன்?

❖ **நித்திரை செய்வதை நிறுத்திப் பாருங்கள் சரிவரும்.**

*V.வித்தியாசங்கர் — அளவெட்டி*

வியா முனிவரே! அரசியல் வாதிகளை ஏமாற்றுவதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்?




❖ **வித்தியா! எலி பூனையைப் பிடிப்பதற்கு வழி கூறுமாறு கேட்கலாமா?**

## வியா அங்கிள்! பெண்களிற்கு மீசை முளைத்தால்...?

*சயந்தன் — மண்டைதீவு*

வியாக்குட்டி! உலகம் நாளைக்கு அழியப்போகிறதென்றால் உங்கள் 'றியாக்ஷன்' எப்படியிருக்கும்?

❖ **ஆ.....அது இன்றைக்காக இருக்காதா? இறைவா! ஏன் இந்தத் தாமதம்...........?**


*வே.விஷ்வா — தம்பசிட்டி*

அப்பனே வியாசா! சிறந்த கலைஞர்களுக்குக் கோபம் அதிகமாக வருவதுஏன்?

❖ **தாம் சிறந்த கலைஞர்கள் என்பதைக் காட்டுவதற்கு.**

*கறுப்புநிலா — நல்லூர்*

வியாசர் அங்கிள்! எனக்கும் உங்களைப்போல் பெரிய ஆளாக வரவேண்டுமென்று ஆசை. அதற்கு என்ன செய்ய வேண்டும்?




❖ **நீண்ட தாடி வளர்க்க வேண்டும்.**

*த.ராகவி — சுன்னாகம்*

வியாசப்பா! சுயநலவாதிகளைத் திருத்தச் சரியான வழி கூறுங்கள்?

❖ **நான் கூறும் வழி மட்டும் சுயநலமாக இருக்காதென்பதற்கு என்ன உத்தரவாதமுண்டு.**

*விமல் — புங்கன்குளம்*

காதலியிடம் தொலைபேசி மூலம் பேசுவது, கடிதம் மூலம் பேசுவது, நேரில் பேசுவது இதில் எந்த வழி சிறந்தது?

❖ **கைவிடும் காதலாயின் கடிதம் நல்லதல்ல. அது கையில் விலங்கை மாட்டி வைத்துவிடும்.**

*கவிப்பிரியா — திருகோணமலை*

மனைவிக்குப் பயந்து நடுங்கும் ஆண்களுக்கு இதய நோய் உண்டாகும் சந்தர்ப்பம் அதிகமாம்? உமக்கு எப்படி வியா?

❖ **மனைவிக்கு பயந்துமட்டுமல்ல, மணம் முடித்த ஆண்களுக்கே இதயநோய் ஏற்படுவதாகப் புதிய கண்டுபிடிப்புக்கள் வெளியாகியுள்ளன.**

*வினோத் — இளவாலை*

வியா! ஐ.சி.சி கிரிக்கெற்றில் இந்திய - இலங்கை அணி பற்றிய உங்கள் கருத்து என்ன?


❖ **இந்தியாவின் கஷ்ரகாலம் மழை வந்து விட்டதே. என்ன செய்வது.**

*சந்திரன் — மானிப்பாய்*

என் மனைவி என்னுடன் எப்போதும் சண்டை போடுகின்றாள். அதை நிறுத்துவதற்கு என்ன வழி? வியா சார்!

❖ **அயலவரை அழைத்து அவரை நடுவராகக் கொண்டு சண்டை நிறுத்தம் செய்து கொள்ளும்.**

## எந்த வயதில் உங்களுக்குப் பொறுப்புணர்ச்சி வந்தது வியாசரே?




**சங்குநாதமே!**
**வாரம் ஒரு முறை வலம் வரும்**
**உனக்கு வந்த சங்கடந்தான்**
**என்ன? உன்னை எதிர்பார்த்து**
**எதிர்பார்த்து நாம்**
**ஏமாற்றமடைகின்றோம்.**
**இனிமேலாவது எம்மை**
**ஏமாற்றாமல் வாரம் ஒரு முறை**
**வலம்வருவாயா?**
**நீ வளமுடன் வலம் வர என்**
**வாழ்த்துக்கள்.**

N.நட்சத்திரா,
வட்டுக்கோட்டை.

மானிட வாழ்வின் மகத்தான நாயகன்
மகாத்மாவின் மாகதையை காதலில்
வீழ்த்தி கஸ்தூரியை பிணைத்து
கனியாகத் தரும் படைப்பாளிக்கும்
கனி தரும் மரமாய்... சங்குநாதமே!
உனக்கு என் இனிய வாழ்த்துக்கள்.

க.நிரோஷினி ,
தென்மட்டுவில்.

வலம்புரி பெற்றெடுத்த மைந்தனே!
உன் ஆக்கங்கள் எம்மைப் பிரமிக்க
வைக்கின்றன.
எத்தனை இதழ்கள் வந்தால் என்ன?
இலை மறைகாயாய் இருக்கும்
கலைஞர்களை ஊக்குவிக்கும் உன்
பணிக்கு நிகர் எதுவும் இல்லை.
உன்னுடைய வருகைக்காய்
எம்முடைய இதயங்கள்
ஏங்கிக் கொண்டேயிருக்கும்.
எம் ஏக்கத்தைத் தணிக்க
தவறாமல் வந்துவிடு

K.கௌரி,
அளவெட்டி.

சங்குநாதமே!
நீ தாங்கி வரும் படைப்புகள்
அனைத்தும் சூப்பர். அதிலும் நான்கு
வர்ணத்தில் உன்னைப் பார்த்து நாம்
எமை மறந்தோம்.... ஆகா..!
தொடந்தும் உன்னை இந்நிலையில்
பார்க்கக் கர்த்தர் அருள்புரிவாராக.

A.அன்ரனி,
குருநகர்.

**வாரமலரே! சங்குநாதமே!**
**உன் கவிதை பார்த்து**
**களிப்புக் கொண்டோம்.**
**உன் தேடல் பார்த்து**
**தெளிவு கொண்டோம்**
**காந்தி பார்த்து**
**கனிவு கண்டோம்**
**சிறுகதையில்**
**சிலிர்ப்புக் கொண்டோம்**
**குருஷேத்திரத்தில் பலதைப்**
**புரிந்து கொண்டோம்.**
**இன்னும் கண்டோம்**
**கண்டோம் ஆயிரம் கண்டோம்.**
**நீ வாழ்க! நின் பணி வாழ்க.**

அஹமட்,
மட்டக்களப்பு.

வலம்புரியின் வார மலரே!
நீ தரும் விடயங்கள்
எம்மை அசர வைக்கின்றன.

ஆனாலும் ஒரு சந்தேகம்
உன் வருகைக்கு என்ன தாமதம்?
வாசகர் எம் கண்பட்டதால்
தானோ என்னவோ...!

வாரம் ஒரு முறை வந்து
எங்களை மகிழ்விப்பாய்
என நம்புகிறோம்.

வாசகன்,
வெள்ளவத்தை.

*பல்சுவை அம்சங்களைத் தாங்கி வரும்*
*சங்குநாதமே! உனது ஓசை எங்கும்*
*ஒலிக்கட்டும்.*
*நீ சுமந்து வரும் அம்சங்களான*
*கவிதைக்கலசம், குருஷேத்திரம்,*
*வியாசர் பதில்கள், விளையாட்டரங்கம்,*
*விஞ்ஞானப்புதிர்கள் அனைத்தும்*
*சிறப்பானவை.*

*ரசிகப்பிரியா,*
*வண்ணார்பண்ணை.*

எத்தனை எத்தனை போட்டிகள் உனக்கு வந்தாலும் அத்தனை போட்டிகளிலும் வென்று நீ வாகை சூடுவாய். போட்டியாளனுக்கு வரும் தடைகள் போல் எத்தனை தடைகள் உனக்கு வந்தாலும் அவற்றையெல்லாம் தாண்டி வாசகர் கரங்களில் நீ தவள்வாய் என்பதில் ஐயமில்லை. என்னையும் உன் வாசகனாக்கிய சங்குநாதமே!
உன் பணி என்றும் சிறக்க வாழ்த்துகிறேன்.

ஆ.கலைவாணி,
அராலி.

*சங்குநாதமே!*
*நீ லேட்டா வந்தாலும் லேட்டஸ்ரா வருகிறாய்.*
*அதுதான்டா சங்குநாதம். உன் படைப்புகளிற்கு*
*என்றும் வாசகர் நாம் 'ஓ' போடுவோம்.*

*ராஜு,*
*திருநெல்வேலி.*

**சங்குநாதமே!**
**உன் முகப்பு வர்ணம் தான் என்னே வாரம்**
**ஒரு தடவை வந்தாலும் உன் வாசகரை**
**வியப்படைய வைக்கின்றாயே.**
**நீ தாங்கி வரும் பக்கங்களின் ஆக்கங்கள்**
**ஒவ்வொன்றும் அற்புதமானவை,**
**அழகானவை.**
**நீ வாரம் ஒரு தடவை எங்கள் கைகளில்**
**தவழ்வது திங்களா? புதனா?**
**சொல்லிடு சங்குநாதமே!**
**உன் பதிலை விரைவாக...**

**ஆரணி,**
**ஊர்காவற்றுறை.**

சங்குநாதமே!
உன் சிறுவர் அரங்கம், கேள்வி பதில், மௌனத்தின் தேடல், கவிதைக் கலசம், குருஷேத்திரம் எம்மை சிந்திக்க வைக்கின்றன. உனது படைப்புக்களிற்கு எனது நன்றிகள்.


தனுஷா,
வடலியடைப்பு.

# ஐசிசி கிண்ணச் சுற்றுப் போட்டிகள்

## ஓர் அலசல்

ஓர் அலசல் ஓர் அலசல்

விசுவரூபம் எடுத்திருந்த விளம்பர ஒப்பந்த சர்ச்சையைத் தொடர்ந்து நடைபெறுமா? அல்லது தடைப்படுமா? என்றிருந்த ICC சாம்பியன் கிண்ணப் போட்டிகள், இறுதியாட்டத்தில் மேகவில்லன் புகுந்து விளையாடும் வரை இனிதே நடந்தேறியுள்ளன. டெஸ்ற் அந்தஸ்துப் பெற்ற பத்துத் தேசங்களுடன் கென்யாவும் ஒல்லாந்தும் மோதித்தீர்த்தன. கடந்த மாதம் 12ஆம் திகதியிலிருந்து 28ஆம் திகதி வரை திட்டமிடப்பட்டு - மழையின் திருவிளையாடலால் மேலும் ஒரு நாள் நீட்டிக்கப்பட்ட இச் சுற்றுப் போட்டி, உலகக்கிண்ணப் போட்டி நெருங்கிக் கொண்டு வரும் நேரத்தில் பலத்த எதிர்பார்ப்புக்கள் மிக்கதொன்றாக முடிவடைந்திருக்கின்றது. கிரிக்கெட் ஆட்டத்தை அதிலும் ஒரு நாள ஆட்டங்களை எப்போதும் குறித்த ஓர் அணி மட்டுமே தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாதென்பதைத் தெளிவாக உணர்த்திய மேற்படி போட்டியின் சுவாரசியம் பற்றி மேலும் விரிவாக ஆராய்வோம்.



ஆஸி அணிக்கு இவரின் சேவை இன்னும் தேவை

### முதற்சுற்று ஆட்டங்கள்

தலா மூன்று அணிகளைக் கொண்ட நான்கு குழுக்களில் பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளே வெளிப்பட்டன. குழு A இனைப் பொறுத்த மட்டில் பங்களாதேசைப் புறக்கணிக்கலாமென்றாலும் கடந்த ICC கிண்ணச் சாம்பியன்களும் தென்னாபிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுடன் தாம் பங்குபற்றிய VB கிண்ண முக்கோணப் போட்டிகளில் ஆஸ்திரேலியாவை ஒரு பிடிபிடித்த அணியுமான நியூசிலாந்து, உலகச் சாம்பியன்களான ஆஸிகளிடம் பரிதாபமாகத் தோற்றது கவனிக்கத் தக்கது. ஏனோ அண்மைக் காலங்களில் பதறிப் பதறித்தான் சிம்பாவேயை வெற்றி கொள்ளும் இந்தியா தனது நட்வெஸ்ற் தொடர் மிடுக்குடன் இங்கிலாந்தை வெற்றியீட்டி குழு Bயிலிருந்து அரையிறுதிக்குத் தெரிவானது.

குழு Cயில் மேற்கிந்தியாவை விட வலுவானதாகவே இருந்த தென்னாபிரிக்கா கடந்த உலகக் கிண்ணப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தை நினைவூட்டுமாற்போல் தடுமாறி விட்டுப் பின்னர் ஒருவாறு சமாளித்து அரையிறுதிக்கு முன்னேறியது. அதே நேரம் கென்யாவின் ஸ்ரீவ் ரிக்கலோ மேற்கிந்தியரை ''மிரட்டிய''தும் குறிப்பிடத்தக்கது. மொரோக்கோ கிண்ணம், கென்ய முத்தரப்புப் போட்டிகளிலிருந்தெல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டு வந்திறங்கிய பாகிஸ்தான் இலங்கையிடம் இலாவகமாகச் சுருண்டது. சர்வதேச ஆட்டங்களில் இப்போதுதான் தத்தித் தவளத் தொடங்கியிருக்கும் ஒல்லாந்து, இலங்கை பாகிஸ்தானைக் கொண்ட குழு D யில் இன்னொரு பங்களாதேசானது!

### காலநிலையும் களநிலையும்

மிகமுக்கியமான சுற்றுப் போட்டியொன்றில் இடம்பெற்ற மிக முக்கியமான அரையிறுதியாட்டங்கள் பற்றி ஈண்டு உற்று நோக்கியே ஆக வேண்டும். முதலில் நடந்த தென்னாபிரிக்க - இந்திய மோதலில் காலநிலையால் தென்னாபிரிக்கா காலாவதியாக அடுத்து நிகழ்ந்த ஆஸ்திரேலிய - இலங்கை ஆட்டத்தில் களநிலையால் ஆஸ்திரேலியா களையிழந்தது. ஆம்! இலங்கையின் உஷ்ணத்தால் கிப்ஸின் உடலிலிருந்த நீர்ப்பற்று ஆவியாகிப் போக ஆரம்பித்தபோதே கங்குலியின் வயிறும் குளிரத் தொடங்கியது. அவ்வாறே நாளாக நாளாகச் சுழற்பந்து வீச்சிற்குச் சாதகமாகிக் கொண்டு வந்த ஆடுகளத்தினால் ஆஸ்திரேலியாவும் சுருண்டு வீழ்ந்தது. ஆனாலும் ஏதோ அவ்விரு காரணங்கள் மட்டுமே தோல்விக்கு வழிவகுத்தன எனவும் கூறிவிட முடியாது.

எவ்வளவுதான் திறமையான அணியான போதிலும் தொடர்ச்சியாக முக்கியமான போட்டிகளில் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடி வெற்றி இலக்கை எட்டுவதில் தென்னாபிரிக்கா இன்னுமே தேறவில்லை. அன்றைய அரையிறுதி ஆட்டத்தில் கூட நிர்ணயிக்கப்பட்ட ஓட்ட வீதத்தைச் சற்று ஏற்ற இறக்கங்களுடன் பேணிய போதும் ஒரு திட்டமிட்ட முறையில் தென்னாபிரிக்காவின் துடுப்பாட்டம் அமையவில்லை. விளைவு, துரதிஷ்டவசமாகக் கிப்ஸ் வெளியேறிய பிற்பாடு ஜோன்ரி ரோட்ஸிற்கே அல்வா என்பது போல் யுவராஜ்சிங் பிடித்த இரு ''காட்ச்''கள், ஹர்பஜன், ஷேவாக்கின் மாயச் சுழற்பந்துகள், களத்திலே நிதானமிழக்காமல் கங்குலி வெளிப்படுத்திய தலைமைத்துவத்தின் முன் பொலக்கும் குழுவினரும் பொலி விழந்தனர்.


மறுபுறம் அடுத்த அரையிறுதிப் போட்டியில் சமிந்த வாஸிற்கும் புலஸ்தி குணரட்ணவிற்கும் வாழ்க்கையே வெறுக்க வைத்த ஆஸி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள், அரவிந்த மற்றும் தர்மசேனாவின் முன் தடுமாறிச் சாய்ந்தனர். அரவிந்த போன்றோரின் வீச்சுக்கள் கூட முரளியினுடையதைப் போன்று அபாரமான ''திரும்பல்''களைப் பெற ஆடுகளமே சாதகமாக அமைந்தது என்ற போதும் கெய்டனும் கில்கிறிஸ்ட்டும் தற்கொலைத்தனமான முயற்சிகளில் இறங்கியே ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. அது போக, இரண்டு ரன் - அவுட்கள் உட்பட ஆஸ்திரேலிய அணியின் மத்திய துடுப்பாட்ட வரிசையின் மெத்தனப் போக்கும் அவர்களிற்குப பாதகமானது. உலகச் சாம்பியன்கள் என்ற உற்சாகமும் கிண்ணத்தைக் கைப்பற்றும் வலுமிக்கவர்கள் என்ற கணிப்பு ஏற்படுத்திய களிப்பும் ஒன்று சேர வந்திருந்த ஆஸி அணி, சமயோசிதம் மிக்க வட்மோரின் படைகளிடம் தமது அஜாக்கிரதையான ஆட்டத்தால் அநியாயமாகச் சின்னாபின்னமானது.

### மழை செய்த பிழை!

ஒரு பெரும் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் - அதிலும் பலத்த சவால்களிற்கு மத்தியில் முன்னேறிய இரு அணிகளிற்கிடையான போட்டியில் பெரும்பாலும் ஒத்த விளையாட்டுச் சூழ்நிலைகளைக் கொண்ட இரு அயல்நாடுகளிற்கிடையேயான விறுவிறுப்பான போட்டியை எதிர்பார்த்த இரசிகர்களின் ஆராவாரத்தின் மத்தியில்...... உஹீம், இந்த மழைக்கு விவஸ்தையே கிடையாது. பதினான்கு போட்டிகள் நிகழ்ந்து முடியும் வரை எட்டியே பார்க்காதிருந்த மழைத்துளிகள், செப்ரெம்பர் 28, 29ஆம் திகதிகளில் பிறேமதாஸ அரங்கையே நீராட்டி ஓய்வது போல பொழிந்து தள்ளியமை மனதை என்னவோ செய்தது. அங்கும் வேடிக்கை யாதெனில் இரு தடவைகளும் இலங்கை முழு 50 ஓவர்களும் ஆடிமுடிந்த பின் இந்தியா துடுப்பெடுத்தாட இறங்கிய நேரத்திலெல்லாம் மழை ''சோ'' வென்றிருக்கின்றது. அட, இந்த மேகம் கூட ஆட்டநிர்ணய சதியில் பங்கு பற்றுமா?!

மழையால் குழம்பலுற்றாலும் ICC கிண்ணத்திற்கான அந்த இறுதியாட்டங்களில் சில சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெற்றேயிருக்கின்றன. ஏதோ சொல்லி வைத்துச் செய்வது போல் சங்கக்கார, ஆர்னல்டு, சந்தன ஆகியோர் அதிலும் சங்கக்கார தொடர்ச்சியாக இரு நாட்களும் ஆடுகளத்தின் குறுக்கே கிளறிக்கொண்டு ஓடியது ஸ்ரீவ் பக்னரிற்கு வெறுப்பேற்படுத்தியது மட்டுமன்றி புதுமையான தொன்றாகவும் அமைந்தது. அதே நேரம் இதற்கு முன் இந்தியாவும் இலங்கையும் மோதிய சமீபத்திய இறுதிப் போட்டிகள் போன்று இதிலும் இந்தியப் பந்து வீச்சாளர்களை துவம்சம் செய்ய முடியும் என்ற கணக்கும்தப்பானது. குறிப்பாக ஸாகீர்கான், ஹர்பஜனின் பந்துகளிற்கு இலங்கை வீரர்கள் மதிப்பளிக்க வேண்டியேயிருந்தது. முன்பு களத்தடுப்பென்றாலே சோபையிழந்து நின்ற இந்தியா, இப்போது யுவாராஜ், கைஃப் பின் அசகாயத்தனத்தினாலும் அகார்கர், ஹர்பஜனின் பங்களிப்பாலும் பலம் பெற்றிருப்பது போல் பந்து வீச்சிலும் சில ஆற்றல்மிக்க புனரமைப்புக்களை மேற்கொண்டால அடுத்த உலகக் கிண்ணத்தை நோக்கித் துணிவாக வீறுநடை போட முடியும்.

மழை சொதப்பிய இந்த ICC கிண்ண இறுதிப் போட்டியில் பெரும்பாலும் இந்திய அணிக்கே வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. ஏழாவது இலக்கத் துடுப்பாட்ட வீரர் வரை மிகப்பலமான மட்டை வீச்சாளர்களைக் கொண்டிருந்த - தான் இறுதியாகப் பங்கு பற்றிய 13 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 8போட்டிகளில் 250 ஓட்டங்களை (300 இற்கு மேற்பட்ட இரண்டு அடங்கலாக) இலகுவாகக் கடந்திருந்த இந்திய அணிக்கே சாதகங்கள் அதிகம் இருந்தன. இலங்கையின் சுழல் பந்து வீச்சாளர்களின் சவாலைப் பற்றிக் கவனிக்க வேண்டியிருந்தாலும் உலகிலேயே தமது அலாதியான Foot - work மூலம் சுழற்பந்துகளை இலகுவாகச் சமாளிக்க வல்லவர்கள் இந்திய அணியினரே என்ற கணிப்பையும் மறந்துவிட முடியாது. ஆனாலும் அப்பேர்ப்பட்ட இந்திய அணியே சார்ஜாவில் ஓட்டு மொத்தமாக ஏழு இலக்குகளை முரளிக்கு வாரி வழங்கிய வரலாறுகளும் குறிப்பிடத்தக்கவை.



ச்சீ! என்ன மழையிது...? என்கிறார்களோ!

தென்னாபிரிக்காவும், நியூசிலாந்தும் கடந்த தடவைகள் கைப்பற்றிய ICC கிண்ணத்தை ஏற்கனவே உலகச் சாம்பியனாகிய ஏதாவதோர் அணி இம்முறை கைப்பற்றுமா என்ற எதிர்பார்ப்பு, அப்படிபட்ட இரு அணிகள் ஒரே தடவையாக இணை வெற்றியாளர்களாக வந்ததன் மூலம் இரசிக்கத்தக்க முறையில் பூர்த்தியாகியிருக்கின்றது. தமது சொந்த அணியின் வெற்றிக்காக் காத்துக் கிடந்த இரசிகர்களிற்கு இது பெருத்த ஏமாற்றமே. விமர்சகர்களது நோக்கும் கணிப்புக்களின் போக்கும் இந்தியாவிற்குத் தெம்பூட்டினாலும் இப்படியான இறுக்கமான சந்தர்ப்பங்களெல்லாம் முன்னர் சாதனைகள் படைத்துள்ள இலங்கைக்கும் வாய்ப்புக்கள் இருந்தமையையும் புறக்கணிக்க முடியாது. ஏனெனில் கிரிக்கெட் ஆட்டத்தின் முடிவுகளும் ஸ்திரமற்றவையாகக் காணப்படுவது கண்கூடு. ஆகவே நாம் தான் ஜெயிப்போம், இந்த அணிதான் வெல்லும் என எவரும் கூற முனைவது அவர்கள் ''க்ளீன்ஷேவ்'' எடுக்கவே வழி வகுக்கும்! (விழுந்தும் அதில் ஏது ஒட்டாமலிருக்கத் தான்!)

### உணர்த்திய பாடங்கள்

ஏற்கனவே ஒரு முறை இந்த விளையாட்டு நிரல்ப் பகுதியில் குறிப்பிட்டது போல் சமகால ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்த அணிதான் வெல்லும் என உறுதியாகக் கூற முடியாத நிலை உருவாகியுள்ளதென்பதை இச்சுற்றுப் போட்டியும் உணர்த்தியுள்ளது. விளையாடப்படும் சூழ்நிலை, ஆடுகளத்தின் சார்புநிலை, காலநிலைத் தாக்கங்கள் என்பன ஆட்டத்தின் போக்கில் கணிசமான பாதிப்பை ஏறபடுத்தும் என்பதும் நிரூபணமாகியுள்ளது. காற்காப்பில் பந்து பட்டாலே துடுப்பாட்டக்காரர்கள் கிடு நடுங்கும் வண்ணம், விஞ்ஞானத் தொழில் நுட்பத்தின் தயவு அதிகளவில் உபயோகிக்கப்பட ஆரம்பித்திருக்கும் இன்றைய கிரிக்கெட் உலகில் வெற்றிக் கனியைச் சுவைப்பதாயின் அதிகப்படியான சிரத்தை அவசியமாகின்றது.

பலம்மிக்க அணிகளையெல்லாம் வெற்றி கொண்டு இலங்கையும் இந்தியாவுமம் இறுதிப் போட்டிக்குள் பிரவேசித்த போதிலும் தென்னாபிரிக்காவில் இடம் பெறவிருக்கும் அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகளிற்கு இப்பெறுபேறுகள் மட்டும் திருப்திதரப் போவதில்லை. வேகப் பந்து வீச்சிற்கே மிகவும் சாதகமான தென்னாபிரிக்கக் களங்களில் துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் பிரகாசிக்க இவ்விரு அணிகளும் தயாராக வேண்டும். அடுத்த உலகக் கிண்ணப் போட்டியைப் பொறுத்தவரை பெரும்பாலும் ஓர் அணிக்கு அதிகம் அவசியமானவராகக் கருதப்படும் துல்லியமான மித வேகப்பந்து வீச்சும் சிறந்த துடுப்பாட்டத்திறனும் கொண்ட ஒரு சகலதுறை வீரரை இன்னமும் இனங்காணாத நிலையில் இருக்கும் அவ்வங்களையாவது மேலும் மெருகூட்ட முனைவது மேற்படி இரு அணிகளிற்கும் இன்றியமையாததாகும்.

### க.சேந்தன்

தனது அடுத்த சுற்றுப் பயணங்களாக தென்னாபிரிக்க மற்றும் ஆஸ்திரேலிய விஜயங்களை வைத்திருப்பது இலங்கைக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அடுத்த உலகக் கிண்ணத்தை நோக்கிய தயார்ப்படுத்தலிற்கு அற்புதமாகப் பொருந்தியிருக்கும் இச்சந்தர்ப்பத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதே இப்போது இலங்கைக்கிருக்கும் கடப்பாடாகும். மறுபுறம் மேற்கிந்தியாவுடன் உள்ளூரில் மோதிவிட்டு நியூசிலாந்திற்குப் பயணிக்கப் போகும் இந்தியா, அக் காலகட்டத்தில் அணியில் சில புனரமைப்புக்களைச் செய்தே ஆக வேண்டும். குறிப்பாக துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் ஒரு சமநிலையை உருவாக்குவதில் அவர்கள் பாடுபட்டே தீர வேண்டும்.


எப்படியோ கிளைமாக்ஸில் மழையால் குழப்பம் வரும் வரை ICC கிண்ணப் போட்டிகள் சுமுகமாக நடந்தேறியுள்ளன. இதில் பெற்ற அனுபவங்களை வைத்துக் கொண்டு இனித் தொடரப் போகும் குறுகிய இடைவெளியில் தம்மைத் தயார்ப்படுத்தலே எதிர்வரும் உலகக் கிண்ணத்திற்கு இலக்கு வைத்திருக்கும் ஒவ்வோர் அணியின் முயற்சியாக இருக்கும்.

❄ ❄ ❄

### ஜோக்

கணவன்:- நாம் கணவன் மனைவியானாலும் நண்பர்கள் போல் நடக்க வேண்டும்.

மனைவி:- சரிடா மச்சி!






# சிறுவர் அரங்கம்

## படம் பார் படம் படி




ஹொங்கொங் மற்றும் தாய்வான் இணைந்து நடத்தும்''காமிக் ..பெஸ் டிவல்'' இல் எடுக்கப் பட்ட ஒரு காட்சி. இந்த கண்காட்சியை இது வரை சுமார் 3 1/2 இலட் சம் பார்வையாளர்கள் பார்த்துச் சென்றுள்ளனர்.



நயிதுனியா' நிறுவனத்தால் வழங்கப்படும் புகைப்பட விருது - 2002 போட்டியில் ராஜேந்திர மாளவியா எடுத்த இந்தப் புகைப் படத்திற்கு இரண் டாம் பரிசு கிடைத் துள்ளது.



வீதியைக் கடக்க அணி வகுத்து நிற்கும் வாத்துகள் இவை. இப் புகைப்படம் அமெரிக்காவின் பேசேமோர், அலா பாமாவில்உள்ள ஜல் முர் கியா வீதியில் எடுக் கப்பட்டது.இங்கு பறவைகள் அதி கம் ஆதலால் அவற்றைப் பாது காக்கும் பொருட்டு வீதி ஓரத்தில் வைக்கப்பட்டுள்ள எச்சரிக்கைப் பலகையில், ''இது பறவைகள் அதிகம் வாழும் பகுதி'' என அறிவிக்கப்பட்டுள்ளது. பலகைக்கு அருகே வீதியைக் கடக்கக் காத்திருக்கும் வாத்துக்களைப் பார்த்தீர்களா? என்ன சிறுவர்களே! இந்த வாத்துக்களுக்கும் வாசிக்கத் தெரியுமா? என்று வியக்கின் றீர்களா...?



அ.சஞ்ஜீவ்
யா.டிறிபேக் கல்லூரி



S. சுதன்

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்




அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப் பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத் தயார்தானே?



## இவ்வாரக் கணிதப்புதிர்

இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



(விடை மறு இதழில்....)

*அ.சேவியர்றவ்பாயெல்,*
*யா.யூனியன் கல்லூரி.*

வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## அம்மா! பாருங்கள் அங்கே...

அம்மா பாருங்கள் அங்கே - நண்பர்கள்
சும்மா நிக்காது விளையாடுகிறார்கள்
நானும் விளையாடப் போறன் - அம்மா
வீணே இதில் நீங்க தலையிட வேண்டாம்

கூட்டாகச் சேருவோம் நாங்கள் - நல்ல
பாட்டோடு கைதட்டி பகிடிகள் சொல்வோம்
கூத்தொன்றில் பாடுற பாட்டு - நண்பன்
கொச்சையாய்ப் பாடிட பொறுமையாய்க் கேட்டு

படிப்புக்கு முதலிடம் கொடுப்போம் - ஆசான்
பகிர்கின்ற பாடத்தை காதினில் மடுப்போம்
அடிதடி சண்டைகள் இல்லை - எங்கள்
அன்பென்ற வீட்டுக்கு வானமே எல்லை

பழம் பறிக்கத் தாண்டி - சட்டை
கிழியவே அயல் வீட்டார் அடியையும் வேண்டி
அழுது கொண்டோடி வருவோம் - அன்று
நடந்ததை எண்ணி நாளுமே சிரிப்போம்

கெந்தி கிளித்தட்டுக் கபடி - எல்லே
விளையாட களைப்பேதும் எமக்கினி இல்லை
அந்தி சாயும் பொழுது மட்டும் - நண்பர்
ஆர்ப்பாட்ட கூச்சல்கள் வானையுமே எட்டும்

சக்கரை போல் கல்வி இனிக்கும் - நாளை
சாதனை செய்யவே நம்முள்ளம் கொதிக்கும்
அக்கறையுடனே எம் பள்ளி - சென்று
அறிகமாய்க் கற்று வருவோமே துள்ளி.

*நோ. அஸ்பீன், நெடுந்தீவு*

## சிந்தித்துச் செயற்படு......!

ஓர் ஊரில் ஒருவன் புதிதாக மீன் கடை வைத்திருந் தான். தான் கடை வைத்திருப் பது எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகப் பலகை ஒன்றில் மிக அழகாக மீன் படம் வரைந்து அதன் கீழே 'நல்ல மீன் இங்கே விற்கப்படும்' என்று எழுதிக் கடைக்கு வெளியே வைத்திருந்தான்.

சிறிது நேரத்தில் அவன் நண்பன் ஒருவன் அங்கே வந்தான். பலகையைப் பார்த் தான். பிறகு அவனைப் பார்த் தான், ''நீ வேறெங்காவது கடை வைத்திருக்கிறாயா?'' என்று கேட் டான்.

''இல்லையே'' என்றான் அவன்.


''அப்படியானால், தேவை யில்லாமல் பலகையில் ஏன் 'இங்கே' என்ற சொல் உள்ளது? அதை அழித்துவிடு'' என்றான்.

நண்பனின் கருத்தை ஏற்றுக் கொண்டான் அவன். இப்பொழுது, பலகையில் மீன் படத்துடன் 'நல்ல மீன் விற்கப் படும்' என்று இருந்தது.

அங்கு வந்த மற்றொரு வன் பலகையைப் பார்த்தான். பிறகு அவனைப் பார்த்து, 'நீ பழுதடைந்த மீனை எப்போதும் விற்பது இல்லையே, எதற்காகத் தேவை இல்லாமல் 'நல்ல' என்ற சொல். அதை அழித்துவிடு'' என்றான்.

இப்பொழுது 'மீன் படமும் கீழே மீன் விற்கப்படும்' என்ற தொடரும் இருந்தது.

அப்போது வந்த வேறொரு வன், ''மீன் என்று எழுதி இருக்கும் போது மேலே எதற்கு ''மீன் படம்?'' என்று கேட்டான்.



பலகையில் இப்பொழுது 'மீன் விற்கப்படும்' என்று மட்டுமே இருந்தது.

நான்காவதாக வந்தவன், ''மீனை யாருக்கும் இலவசமாகக் கொடுப்பதில்லையே, எதற்காக 'விற்கப்படும்' என்ற சொல்?'' என்று கேட்டான்.

இப்பொழுது பலகையில் வெறும்'' மீன்'' என்ற சொல் மட் டுமே இருந்தது.

அடுத்து வந்தவன், ''தூரத்திலிருந்து வரும் பொழுதே மீன் நாற்றம் மூக்கைத் துளைக் கிறதே, பின்பு ஏன் 'மீன்' என்று எழுதியிருக்கிறாய்?'' என்று கேட் டான்.

கடையின் முன் இப் பொழுது வெறும் பலகை மட்டும் தான் இருந்தது.

அங்கே வந்த இன்னொரு வன், ''என்ன கடைக்கு முன்னே வெறும் பலகையை வைத்திருக் கிறாய்? இதில் ஒரு மீன் படம் வரைந்து, கீழே 'நல்ல மீன் இங்கே விற்கப்படும்' என்று எழுதி னால், எவ்வளவு நன்றாகவும், வியாபாரத்திற்குப் பயனாகவும் இருக்கும்'' என்று சொன்னான்.

**சிறுவர்களே!**

**கதையைப் படித்தீர்களா? நீங்கள் எந்த விடயமானாலும் நன் றாகச் சிந்தித்துச் செயற்படுங்கள். உங்களின் தீர்க்கமான சிந்தனை உறுதியான முடிவுகளிற்கு வழி வகுக்கும்.**

**தொகுப்பு:- சுஜா**

## 'அ' முதல் 'ஒள' வரை வாழ்க்கைக்கு உகந்த பொன் மொழிகள்

- அரண்மனை அடிமைகளை விட குடிசை வாழ் ஏழை உயர்ந்தவன்.
- ஆண்பாதி பெண்பாதி என்பது வாழ்வின் நியதியாகும்.
- இனாம் எதிர்பார்ப்பவன் ஒரு போதும் முன்னேற மாட்டான்.
- ஈன்ற தாயும் நாடும் போற்ற நட.
- உன் வீடாயினும் கொல்லை வழி நுழையாதே.
- ஊக்கம் என்பது வெற்றியின் முதற் படி.
- எது நீ செய்யினும் விளைவு நலம் தரணும்.
- ஏனென்ற கேள்வியுடன் எதையும் ஆராய்ந்து பார்.
- ஐக்கியம் இல்லாவிட்டால் வெட்கித் தலை குனிவாய்.
- ஒழுக்கம் குறைந்தவர் இழுக்கை அடைவர்.
- ஓய்வற்று இயங்கும் இயந்திரம் விரைவில் தேய்ந்து விடும்.
- ஒளடதம் என்பது கசந்த பின் இனிக்கும்.

*ஸ்ரீ. சொரூபிகா, வட்டு / மத்திய கல்லூரி.*

## விடுகதைகள்

☼ முத்து முத்துச் சேலைக்காரி, உற்று உற்றுப் பார்த்திடுவா, அவ ளைத் தொடுவானேன், அவதிப்படு வானேன். அவள் யார்?

*தேள்*

☼ பூ காயாகும், காய் கனியாகும், கனி காயாகும். அந்தக் காய் என்ன காய்?

*தேங்காய்*

☼ தலை தெரியும், உடல் தெரியாது. கை பட்டால் உருத் தெரியாது. அது என்ன?

*நீர்க்குமிழி*

*இ. சாருகி.*

நண்பனை பலருக்கு நடுவில் புகழ்ந்து பேசுங்கள். தனிமையில் கண்டித்துத் திருத் துங்கள்.

*- ஆங்கிலப் பழமொழி*

தீய மனிதர் பயத்துக்குக் கீழ்ப்படி கிறார்கள். நல்ல மனிதர்கள் அன்புக்குக் கீழ்ப்படிகிறார்கள்.

*- அரிஸ்டாட்டில்*

## இவரைத் தெரியுமா - பரிசுப்போட்டி இல:- 30



**படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?**

இடையழகி என்று அழைக்கப படும் நடிகை இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 20 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கக் கூடிய தாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :-

'இவரைத் தெரியுமா
போட்டி இல:- 30'
"சங்குநாதம்"
இல.15,வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: — 30**

படத்தில் உள்ளவரின் பெயர் :-.....................................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-.....................................

அனுப்புபவரின் முகவரி :-.....................................
.....................................
.....................................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 29**
**சரியான விடை**



நடிகை மீனா

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 29 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

முதற்பரிசு :— T.S. சயந்தன்
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

இரண்டாம்பரிசு:— ப.தனோஜா
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

மூன்றாம்பரிசு:— க.றஜீவன்
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.


**சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**

*இ.தேவகி சுழிபுரம், சோ.பத்மறஞ்ஜினி வட்டுக்கோட்டை, ச.தர்சினி யாழ்ப்பாணம், வ.நளினா மானிப்பாய், ப.யோகச்சந்திரன் யாழ்ப்பாணம், லோ.சுரந்திரதேசிகர் கரவெட்டி, நா.சரண்யா நாவாந்துறை, செ.சிறிகௌரி தொண்டமானாறு, இ.கடாட்சம் யாழ்ப்பாணம், K.புஸ்பராணி பருத்தித்துறை.*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

### பஸ்சிமோத்தாசனம்


விரிப்பில் மல்லாந்து படுத்த நிலையில் இரு கால்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்ளவும். பின் இரு கைகளையும் தலைப்பக்கம் நீட்டி காதுகளுடன் ஒட்டியவாறு சுவாசத்தை உள் ளிழுத்து ஒரே முயற்சியில் இடுப்புக்கு மேல் உடலையெழுப்பி கால்களை நீட்டி உட்கார்ந்த நிலைக்கு வரவும். பின் இரு கைகளிலும் உள்ள ஆள் காட்டி விரலினால் கால்களின் பெரு விரலை இறுக்கிப் பிடிக்க முயற்சிக்கவும். விரல்கள் எட்டவில்லையாயின் கால்களை உள்ளே இழுத்து பெருவிரலைப் பிடிக்கவும். பின் முகத்தை கால்களின் மூட்டுக்களை தொட முயற்சிப்பதோடு மூச்சை வெளியே விட்ட நிலையில் எக்கவும். ஒரு முறைக்கு பத்து வீநாடிகள் செய்யவும். ஒவ்வொரு முறைக்கும் சற்று இளைப்பாறி மீண்டும் செய்யவும்.




**பலன்கள்:-** வயிற்றுப் பகுதித் தசைகள் பலம் பெறும். கல்லீரல், மண்ணீரல், இரப்பை என்பன புத்துணர்ச்சி பெற்று தமது கடமைகளை சரிவரச் செய்யும். பசியின்மை நீங்கும். நீரிழிவு நோய் அணுகவே அணுகாது. இளமை மேலிடும். பெண்கள் இவ் வாசனத்தைச் செய்து வந்தால் இடுப்புவலி, தலைவலி, மலட்டுத் தன்மை, முதலியவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

(தொடரும்........)


## பேனா நண்பர்கள்




ச.கிரிசாந்தன்
வயது :- 16
316, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
பத்திரிகை, கவிதை, சங்கீதம்.



ச.சதீஷ்
வயது :- 21
G.P.S. றோட்,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
கிரிகெட், பத்திரிகை, T.V



V.தமிழன்பன்
வயது :- 23
மே/பா S. விஜயராஜா,
ஐயனார் வீதி, கச்சேரி கிழக்கு,
கிளிநொச்சி.
சமூக சேவை, பத்திரிகை,
கதைப்புத்தகம்.




கி.பிரியா
வயது :- 16
"இலக்குமி வாசா" வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.
வானொலி, தொலைக்காட்சி,
பத்திரிகை.



இ.ஜெயந்தன்
வயது :- 18
ஆடியபாதம் வீதி,
மாஞ்சோலை எதிர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
பேனாநட்பு, பாடல் கேட்டல்

## குறுக்கெழுத்துப் போட்டி

### இல. 31



*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல -31**
*'சங்குநாதம்',*
*இல:- 15, வெள்ளாந்தெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

*பெயர் :-* .....................................
*விலாசம் :-* .....................................
.....................................
.....................................

................ *இங்கே வெட்டுக*......................................

### இடமிருந்து வலம்

(1) கலை மான் - இதனை இப்படியும் அழைப்பர் (4) கவலை-எதிர்ச சொல் (5) சாமர்த்தியம் - இதனைக் குறிக்கும் (6) °°ாழனை இப் படியுமழைப்[illegible] (7) மாறுபாடு - இதனைக் குறிக்கும் (9) அடைமானம் என்றும் சொல்வர் (10) மாதங்களிலொன்று

### மேலிருந்து கீழ்

(1) சான்றோர் கூறும் இவற்றிற்கேற்ப நாம் ஒழுக வேண்டும் (2) உண்மை (3) அழகு சாதனங்களில் ஒன்று (4) இதில் நல்ல எண்ணங்கள் உருவாக வேண்டும் (8) இது அற்றவன் மூடன் (9) ஒரு வகை வியாதி

**குறுக்கெழுத்துப்போட்டி இல.30 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**
1. சம்சாரம் 4. ஏரி 5. கலக்கம் 6. நிதி 8. மேம்பாடு 9. வடு 10. மைல்

**மேலிருந்து கீழ்**
1. சங்கரன் 2. சாணக்கியம் 3. சாரித்திரம் 7. கொடுமை 8. மேடு

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

முதற் பரிசு :~ சி.சிவஜனனி
17/2, பிரதான வீதி,
சங்கானை.

இரண்டாம் பரிசு :~ அ.மீனலோசினி
கிராம்புவில்,
சாவகச்சேரி.


மூன்றாம் பரிசு :~ ச.பாரதி
வேலணை வடக்கு,
வேலணை.

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.**

*கே.அரசேஸ்வரன் யாழ்ப்பாணம், கே.இராஜகோபால் வட்டுக்கோட்டை, பா.செல்வராணி மூளாய் வீதி, அ.சாந்தன் கிளிநொச்சி, க. பாஸ்கரன் திருநெல்வேலி, ய.வேல்நம்பி கொட்டடி, த.சர்மிளா வவுனியா, தி.சிவகுமாரன் மன்னார், வ.சந்திரசேகரம் வெள்ளவத்தை, பொ.சறோஜினி யாழ்ப்பாணம்.*

குறிப்பு:~
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.31" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 20-10-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |




# ஆவுஸ்திரேலியாவில் இருந்து வந்த வில்லனுடன் மோதல்



இன்போகஸ் பட நிறுவன சார்பாக உஷாராணி, வாசு மிகப் பிரம்மாண்டமான முறையில் தயாரிக்கும் படம் 'திரி ரோசஸ்'!

இப்படத்தில் ரம்பா, ஜோதிகா, லைலா மூவரும் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள். மற்றும் விவேக், ராஜன் பி. தேவ், விஜய் ஆதிராஜ், மதன்பாப், மனோபாலா, ராஜசேகர், அனுமோகன், வின்சென்ட் ராய், ராம்கோபால் வர்மா, ஊர்வசி, சித்ரா, மீரா கிருஷ்ணா, ஜெயா முரளி, ரேகா, பூஜா நடிக்கிறார்கள்.

இப்படத்துக்காக ஆஸ்திரேலியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட வில்லன் நடிகருடன் ரம்பா, ஜோதிகா, லைலா மூவரும் மோதும் பயங்கரமான சண்டைக் காட்சி ஒன்று வாஹினி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. ராஜன் பி. தேவின் ரகசிய பங்களாவில் அடைத்து வைக்கப்பட்ட விஜய் ஆதிராஜ், ரேகா இருவரையும் காப்பாற்ற ரம்பா, ஜோதிகா, லைலா மூவரும் அந்த பங்களாவுக்குள் நுழைய அந்த ஆஸ்திரேலிய வில்லன் ரம்பா, ஜோதிகா, லைலா மூவரும் அடித்துஉதைத்துப் போட்டு விட்டு விஜய் ஆதிராஜ், ரேகா இருவரையும் காப்பாற்றும் அதிபயங்கர சண்டைக் காட்சியில் மூவரும் டூப் போடாமல் நடித்தனர். இந்த சண்டைக் காட்சியை ஸ்டண்ட் மாஸ்டர் கனல்கண்ணன் படமாக்கினார்.



ஒளிப்பதிவு – ராஜராஜன் இசை – கார்த்திக் ராஜா

எடிட்டிங் – வி.டி. விஜயன் கலை – பாலன் ஸ்டண்ட் – கனல்கண்ணன் வசனம் – பாண்டியன் கதை, திரைக்கதை, இயக்கம் – பரமேஷ்வர் தயாரிப்பு – உஷாராணி, வாசு தயாரிப்பு மேற்பார்வை – ஜெயராம், அபிமன்யூ

தீபாவளித் திருநாளன்று திரைக்கு வர உள்ள படமே "திரிரோசஸ்"

# மாஸ்கோவில் படப்பிடிப்பு சிபிராஜ் -ஷெரீன் பாடல் காட்சி



சத்யராஜின் மகன் சிபிராஜ் முதன் முதலாக கதாநாயகனாக அறிமுகமாகும் படம், 'ஸ்டூடண்ட் நம்பர்–1'.

இந்த படத்தின் படப்பிடிப்பு 10' நாட்கள், சென்னையில் பல்வேறு இடங்களில் நடந்தது. இதைத் தொடர்ந்து 2 பாடல் காட்சிகள் ரஷிய தலைநகரான மாஸ்கோவில் படமாக்கப்படுகின்றன.


கபிலன் எழுதி திப்பு – கல்பனா பாடிய "காதல் தோழி காதல் தோழி காதில் சொன்னேன் காதல் செய்தி" என்ற பாடலும், முத்துகுமார் எழுதி எஸ்.பி.பி. சரண் – சித்ரா பாடிய "விழாமலே இருக்க முடியுமா. . . விழுந்து விட்டேன் காதல் வலையில். . ." என்ற பாடலும் அங்கு படமாகின்றன.

2 பாடல் காட்சிகளிலும் சிபிராஜ் – ஷெரின் பங்கேற்றார்கள். சுஜாதா நடனபயிற்சி அளித்தார். சிபிராஜ் – ஷெரின் ஜோடியுடன் நாசர், மணிவண்ணன், 'நிழல்கள் ரவி', 'தலைவாசல் விஜய்', வனிதா மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

வேகமாக வளர்ந்து வரும் இந்த படத்துக்கு யு.கே. செந்தில்குமார் ஒளிப்பதிவு செய்கிறார். பாடல்களை நா. முத்துகுமார், தாமரை, கபிலன் ஆகியோர் எழுதியிருக்கிறார்கள். எடிட்டிங் : ரகுபாபு, கலை : ரெமி.

பிரிதிவிராஜ் எழுதிய கதைக்கு, திரைக்கதை – வசனம் எழுதி டைரக்டு செய்கிறார் செல்வா. சேனா பிலிம்ஸ் சார்பில் சி. சரத் தயாரிக்க, தயாரிப்பு மேற்பார்வை : சரண், ஜெ.எஸ். சேகர்.

# கார்த்திக்கின் ஜோடி பிரியங்காவுக்கு பதிலாக ரக்ஷா



சென்னையில் நடுத்தரக் குடும்பம் வசிக்கும் பகுதியில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்தான் ஜீவா. அவனுடன் அவனது நண்பர்களும் தங்கினர். இசையில் சாதனை படைத்து, அமெரிக்காவில் மிகச் சிறந்த இசைக் கலைஞருக்கு வழங்கப்படும் கிராமி விருதைப் பெற வேண்டும் என்பதே ஜீவாவின் லட்சியம். ஒருநாள் வீட்டில் சக நண்பர்கள் கையில் இசைக் கருவிகளை வைத்துக் கொண்டு, தங்கள் மனம் போன போக்கில் பாடினர். அதைக் கண்டு கோபமடைந்த ஜீவா, "இதென்ன பாட்டா?" என்று கேட்டுவிட்டு, இனிமையான பாடல் ஒன்றைப் பாடினான். அவனது பாடலைக் கேட்டு நண்பர்கள் மகிழ்ந்தனர். வீட்டுக்கு அருகேயுள்ள மெக்கானிக் ஷாப்பில் மோட்டார் சைக்கிளை ரிப்பேர் செய்ய வந்திருந்த நந்தினி மெய்மறந்து ரசித்தாள்.

உதயா சினி ஆர்ட்ஸ் சார்பில் ஏ.ஆர்.எம். மோகன், நன்னிலம் ஜோதி இணைந்து தயாரிக்கும் 'காஷ்மீர்' படத்துக்காக இந்தக் காட்சி படமானது. கதை, திரைக்கதை எழுதி கவுரி மனோகர் இயக்கினார். ராஜாராஜன் ஒளிப்பதிவு செய்ய, லியாகத் அலிகான் வசனம் எழுதினார். தேவா இசை அமைப்பில் பா. விஜய், பழனிபாரதி, மு. மேத்தா, காமகோடியன், சிதம்பரநாதன் பாடல்கள் எழுதுகின்றனர். இதில் ஜீவாவாக கார்த்திக், நந்தினியாக ரக்ஷா (ஏற்கனவே பிரியங்கா திரிவேதி நடிப்பதாக இருந்த கேரக்டர்), மெக்கானிக் ஷாப் ஓனராக செந்தில், நண்பர்களாக தாமு, வையாபுரி, குமரேசன் நடித்தனர்.

மற்றும் ரகுவரன், சரண்ராஜ், மணிவண்ணன், ஸ்ரீவித்யா, மந்த்ரா நடிக்கின்றனர். இந்தப் படத்தின் முக்கிய காட்சிகள் காஷ்மீர், குளுமனாலி ஆகிய பகுதிகளில் படமாக்கப்படுகிறது.

# பி.சி. ஸ்ரீராம் இயக்கும் வானம் வசப்படும்




ஆர்.கே. பிலிம் அன்ட் டிஜிட்டல் மூவி மேக்கர்ஸ் சார்பில் ஆர்.கே. ரகுநாத் மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் 'வானம் வசப்படும்'. இந்தப் படத்தை ஒளிப்பதிவு செய்து பி.சி. ஸ்ரீராம் இயக்குகிறார். விக்ரம் நடித்த 'மீரா', கமல்ஹாசன் – அர்ஜூன் நடித்த 'குருதிப்புனல்' ஆகிய வெற்றிப் படங்களை இவர் இயக்கியுள்ளார்.

காதல். . . பிறகு திருமணம். . . திடீரென்று தாக்கும் பிரச்சினைகள். . . அவற்றை காதலர்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதை விளக்கும் இந்தப் படத்தில் கார்த்திக், கவுதம் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். எம்.ஏ. படிக்கும் சென்னை கல்லூரி மாணவி பூங்கோதை கதாநாயகியாக அறிமுகமாகிறார் மற்றும் புதுமுகம் ரஞ்சித், பீம்சிங், ரகுவரன், நாசர், தலைவாசல் விஜய், விஜயகுமார், ரேவதி உள்பட பலர் நடிக்கின்றனர்.

எழுத்தாளர் சுஜாதா கதை எழுத, மகேஷ் இசை அமைக்கிறார். வைரமுத்து பாடல்கள் எழுத, ராகவன் அரங்கம் அமைக்கிறார். பி.சி. ஸ்ரீராம், லாரன்ஸ் இணைந்து திரைக்கதை எழுதுகின்றனர். விஸ்வநாத் – ராமராவ் எடிட்டிங் செய்ய, லாரன்ஸ் வசனம் எழுதுகிறார். விக்ரம் தர்மா சண்டைப்பயிற்சி அளிக்க, பிருந்தா நடனக்காட்சி அமைக்கிறார். சிவராஜ் தயாரிப்பு மேற்பார்வை செய்கிறார்.

இந்த மாத இறுதியில் சென்னையில் படப்பிடிப்பு தொடங்கி இடைவிடாமல் நடந்து, வருகிற ஜனவரி மாதம் 'வானம் வசப்படும்' படம் வெளியாகிறது.

# காதல் வைரஸ் படப்பிடிப்பில் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ்சில் 2 பாடல் காட்சிகள்




இதயம், உழவன், காதல் தேசம், காதலர் தினம் அகிய படங்களை டைரக்டு செய்த கதிர் இப்போது 'காதல் வைரஸ்' என்ற படத்தை உருவாக்கி வருகிறார்.

இந்த படத்தில் ஷாலினி – ஷாமிலினியின் சகோதரர் ரிச்சர்டு, கதாநாயகனாக அறிமுகம் ஆகிறார்.

படத்தில் அவர் ஏழை மாணவராக இருந்து, சினிமா டைரக்டராக உயரும் உயிர் துடிப்பான பாத்திரத்தில் நடித்து இருக்கிறார்.

அவருக்கு ஜோடியாக விஜயகுமார் – மஞ்சுளா தம்பதிகளின் கடைசி மகள் ஸ்ரீதேவி நடித்து இருக்கிறார். குழந்தை நட்சத்திரமாக பல படங்களில் நடித்த ஸ்ரீதேவி, இந்த படத்தின் மூலம் கதாநாயகி ஆகியிருக்கிறார்.

"இந்த படத்துக்காக 'சொன்னாலும் கேட்பதில்லை கன்னி மனசு' என்ற பாடல் காட்சி முழுக்க முழுக்க கம்ப்யூட்டர் கிராபிக்சில் படமாக்கப்பட்டு இருக்கிறது.

மேகக் கூட்டத்திற்குள் கதாநாயகன் – கதாநாயகி ஆடிப்பாடுவது போல், இந்த பாடல் காட்சி அமைக்கப்பட்டு இருக்கிறது. இதேபோல், 'வான் நிலா தரும் ஒளி அவள் விழி...' என்ற பாடல் காட்சியும் கம்ப்யூட்டர் கிராபிக்சில் படமாகி இருக்கிறது.

ஏ.ஆர். ரகுமான் இசை அமைக்க, வாலி பாடல்களை எழுதியிருக்கிறார்.

கலை – தோட்டாதரணி, ஒளிப்பதிவு – அர்ஜுன் ஜெனா, எடிட்டிங் – வி.டி. விஜயன், கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் – கதிர்

இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# மழைக்காலத் தொற்று நோய்கள்

வெளியே மந்தாரமாய் பொழுது விரிந்திருந்தது. மழைக் கால மாலைப் பொழுது. தூசிகள் கழுவப்பட்ட வெண்ணிறப்பசுமை கண்ணை நிறைத்தது. மெதுவாய்த தடவிச் சென்ற காற்றின் சிலிர்ப்பு உடலை ஊடுருவிற்று. நகுலனின பார்வை வாசற்பக்கம் ஓடிற்று.

''அம்மா நிண்டிருந்தால் ஒரு ரீ குடிச்சிருக்கலாம்.....'' வாய் முணு முணுத்தது. அம்மா தன் தங்கை வீடு சென்றிருந்தாள். சித்தியின் கடைசிப் பையனை ஏதோ காய்ச்சல் என்று வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாய் சித்தப்பா காலையில் சொல்லியிருந்தார்.

மந்தாரப் பொழுதில் இருளின செறிவு கனத்துக் கொண்டிருந்தது. மழைத் துளிகள் மெதுவாய் மண்ணில் இறங்கத் தொடங்கின. நகுலன் வாசற் கதவை மூட எத்தனித்த போது அம்மாவும் கீதாவும் - பெரியம்மாவின் மகளும்-வருவது தெரிந்தது.

''என்னவாம்? தம்பிக்கு இப்ப எப்படி இருக்குது....?'' நகுலன கேட்டான். ''இப்ப பறவாயில்லை... டெங்குவோ டிங்குவோ.... அந்தக் காய்ச்சலாம்...'' அம்மா சொன்னபடியே உடைமாற்றச் சென்று விட்டாள்.

''எப்ப காய்ச்சல் தொடங்கினது அவனுக்கு...?''

''ஆறு ஏழு நாள் இருக்கும் அண்ணா...... சரியான காய்ச்சல், தலையிடி சத்தியும், உடம்பு முழுக்க ஓரேவலி. மூட்டுகளெல்லாம் நோகுது எண்டு தொடக்கத்தில் சொல்லிக் கொண்டிருந்தான். பிறைவேற்றா ஒரு தரம் மருந்தெடுத்தும் குறையேல்ல. பிறகு கண்ணெல்லாம் சிவந்திட்டுது. கண்ணில் தண்ணி வடிஞ்சு கொண்டிருந்தது.... ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக அங்க கடுமை எண்டு சொல்லி மறிச்சுப்போட்டினம்.....'' கீதா கவலை தோய்ந்த குரலில் சொன்னாள்.


''ம்...ம்.. டெங்குக் காய்ச்சலின்ரை எல்லா அறிகுறியும் இருந்திருக்குது...'' நகுலன் யோசனையில் ஆழ்ந்தபடி சொன்னான்.

''பயங்கரமான வருத்தமோ இது அண்ணா?''

''பொதுவா 5-7 நாளிலை மாறிடும். சிலநேரம் டெங்கு இரத்தப் போக்குக் காய்ச்சல் எண்ட நிலைமைக்கு மாறினால், மலம், வாந்தி, சலத்தில் இரத்தம் போகும்... முரசில் இரத்தம் வடியும், பிறகு டெங்கு அதிர்ச்சி நிலைக்குட்பட்டு இறப்பும் ஏற்படலாம். தென்னிலங்கையில் கன பேர் இதால செத்திருக்கினம். யாழ்ப்பாணத்திலயும் இது சில இடங்களில் பரவத் தொடங்கிட்டுது.''

''இது எப்படி அண்ணா வருகுது...?''

''வைரஸ் பற்றி நீ கேள்விப் பட்டிருப்பாய் தானே....ஆபோவைரஸ் (Arbovirus) என்ற வைரஸால் தான்



இது வருது. ஆனபடியால் நுண்ணுயிர்க் கொல்லியைப் பாவிச்சு இதைக்கட்டுப்படுத்த ஏலாது.''

''இந்த வைரஸ் எப்படி ஆக்களைத் தொத்துது?''

''ஈடிஸ் (Aedes) என்கின்ற நுளம்பு உடலில் கறுப்பு நிற புள்ளிகள் இறகில் கறுப்பும், வெள்ளையும் உள்ள சின்ன நுளம்பு - புலி நுளம்பு எண்டு தமிழில் சொல்லுறது - அது தான் இந்த வைரஸைக காவித் திரிந்து காலையிலயும் மாலையிலயும் கடிக்கேக்க ஆக்களிட்ட தொத்தச் செய்யுது.''

''இதை எப்படி அண்ணா தடுக்கலாம்...''

''நோய் வரமுன் காக்கிறது தான் நல்ல வழி. அதுக்குச் சுத்தம் அவசியம். நுளம்பு இருக்கிற இடங்களை - நீர்தேங்கி நிக்கிற சிரட்டை, தகர டப்பாக்கள், உடைந்த போத்தல்கள், சட்டிகள், மரப் பொந்துகள், தென்னங் கோம்பைகள், பழைய டயர்கள், பூச்சாடிகள் போன்றவற்றை அழிக்க வேணும். நோய் வந்தால் ஆரம்ப அறிகுறிகளோடேயே வைத்தியசாலைக்கு கொண்டு போய் விட வேணும். தாமதிக்கக்கூடாது....''

நகுலன் சொல்லி முடிக்க கீதாவின் முகத்தில் துல்லியமாய் கவலை தெரிந்தது.

''அப்ப தம்பிக்கு ஆபத்தான நிலைமை ஏற்படுமோ.....''

''இல்லை கீதா... நீ ஏன் பயப்படுகிறாய்..... அவன் ஆரம்ப அறிகுறிகளோடேயே ஹொஸ்பிற்றலுக்கப் போட்டான் தானே.......''

''பொல்லாத மழைக்காலம. அது தான் இப்படிப் பொல்லாத வியாதிகளும் வருகுது...''

அம்மா சொன்னபடியே வந்தாள்.

''வேற என்ன வருத்தம் அண்ணாமழை காலத்திலவரும்..?''

''மலேரியா, நெருப்புக் காயச்சல், ஹெபரைரிஸ் - ஏ என்கிற ஈரலழர்ச்சி அல்லது செங்கண்மாரி இதுகளெல்லாம் பொதுவாய் வரும்''

''மலேரியாவையும் அனோபிலிஸ் என்கிற நுளம்பு தான் பரப்புமாம் எண்டு நான் படிச்சனான்..'' கீதா சொன்னாள்.

''நீ சொன்னது சரி. பிளாஸ்மோடியம் என்கிற நோய்க்கிருமி தான் மலேரியாவுக்குக் காரணம். அதிலயும் பிரிவுக்ள் இருக்குது. பிளாஸ்மோடியம் பல்சிபாரம், பிளாஸ்மோடியம் வைவக்ஸ் எண்டு இரண்டு இலங்கையில் இருக்குது.''

''மலேரியாவில் காய்ச்சல் எப்படித் தொடங்கும் அண்ணா?''

''மலேரியா நுளம்பு கடிச்சு 7 -17 நாளுக்குள்ள திடீர்க் காய்ச்சலும், குளிர் நடுக்கமும் வரும். இதில் மூன்று நிலை இருக்கு. முதலாவது குளிர் பருவம். இதில் நடுக்கம், பல் கிட்டுதல், தலையிடி, வாந்தி, உடல் வெப்பநிலை உயருதல் என்பன இருக்கும். இது 1/4 - 3 மணித்தியாலங்களுக்கு இருக்கும். இரண்டாவது உஷ்ண பருவம். இதில் உடம்பு வெப்பமாய் இருக்கும். தோல் வரண்டிருக்கும். சுவாசம் அதிகரிக்கும். இது 1/2 - 6 மணித்தியாலம் வரை இருக்கும். கடைசியாய் வியர்க்கும். உடல் வெப்பநிலை குறையும். காய்ச்சல் விட்டுவிட்டது போல இருக்கும்.''

''அப்படியே விட்டு விடுமோ அண்ணா?''

''இல்லை.. பிறகு திரும்பவும் இந்த வட்டம், மறுநாளோ, அடுத்த நாளோ தொடரும்....''

''இதையும் நுளம்பைக் கட்டுப்படுத்தித் தடுக்கலாம். அப்பிடித் தானே அண்ணா?''

''ஓம் நுளம்பு, குடம்பிகளை அழித்தல், சரியான முறையில் சிகிச்சை அளித்தல் என்பன இதற்கு உதவும்........''

''அப்ப ஈரழர்ச்சி எண்டு சொன்னியே....... அது என்ன மாதிரித் தம்பி..?'' அம்மா ஆர்வமாய்க் கேட்டாள்.

''இது வழமையாய் சின்னப் பிள்ளையளுக்குத் தான் வரும். இதுக்கு மூலகாரணம் தண்ணீர் தான். அழுக்கான குடிநீரில் உள்ள கிருமிகள் தான் இதுக்கு மூல காரணம்.

''இதில் என்ன அறிகுறிகள் இருக்கும்.?''

''காய்ச்சல், பசியின்மை, வயிற்றுப் புரட்டு, மஞ்சட் காமாலை, கடுமையான நிறமுள்ள சலம், வெளிறிய மலம் என்பன இருக்கும். இது கிருமி தொற்றி 3-4 கிழமைக்குப் பிறகு வரும். பிறகு 2-4 கிழமைகளில் தானாய் மாறிவிடும்.''

''மருந்து ஏதும் இல்லையோ அண்ணா?''

''இல்லை நீர்ப்பீடன

**வே. தமிழ்வாணி**
**மருத்துவ பீடம்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

முறைகள் இருக்கு. சுகாதாரமான பழக்க வழக்கங்களால் இதைக் கட்டுப்படுத்தலாம். மலத்தில் இந்தக் கிருமிகள் காணப்படுகிற தால் மலம் கழித்தபின் சவர்க்காரம் போட்டுக் கைகழுவுறது முக்கியமான முறையாகும். சுத்தமான குடிநீர்ப்பாவனையும் அவசியம்.''

''இதைப் பரப்புற வைரசுக்கு என்ன பெயர் அண்ணா........?''

''என்டீரொ ரைவஸ்.... (Entero virus)''

''நெருப்புக்காய்ச்சலும் ஒரு ரைவஸ் நோய் தானோ அண்ணா....?''

''இல்லை. இது ஒரு பற்றீறியாவால் ஏற்படுற நோய். 'சல்மனெல்லா ரைபி' என்ற பற்றீறியா தண்ணிர், பால், அசுத்த உணவு என்பவற்றின் மூலமாய் தொற்றிக் கொள்ளும் இது வேகமாகப் பரவக் கூடிய ஒரு நோய். நோயாளியின் கையால் தொடப்படும் பொருட்கள் மூலம் கூட நோய் பரவ முடியும். பெருவாரி நோயாய் கூட இது ஏற்பட முடியும். நோயாளிகளால் கையாளப்படும் சமைத்த உணவுகள், பால் பழங்கள், ஐஸ்கிறீம் மூலமும் இது பரவும்.''

''இந்த நோய் எப்படி அண்ணா ஏற்படுகிறது?''

''நோய்க் கிருமி தொற்றி 10-14 நாளுக்கும் பிறகு தொடர்ச்சியான உயர்கின்ற காய்ச்சல், தலையிடி, களைப்பு, கைகால் நோ, இருமல், ஆரம்பத்தில் மலச்சிக்கல் பிறகு வயிற்றோட்டம் என்பன ஏற்படும். முதல் வாரத்திலிருந்து மூன்று மாதம் வரைக்கும் நோயாளியில் இருந்து நோய் தொற்ற முடியும்.''

''இதுவும் தடுக்கப்படக் கூடிய ஒரு நோய் தானே அண்ணா?''

''ஓம் நிச்சமயாய். தற்செயலாய் மலம் உட்கொள்ளப் படும் நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்வதால் இது முடியும். அதாவது, கிணற்றுத் தண்ணீரை சூடாக்கிப் பாவித்தல், பச்சைக் காய்கறி பழங்களைக் கழுவிச் சாப்பிடுதல், ஈ, கரப்பான் என்பவற்றிலிருந்து உணவை மூடிப் பாதுகாத்தல், கழிவுகளை சுகாதார முறைப்படி அகற்றுதல், தனிநபர்ச் சுகாதாரம் பேணுதல், நோயாளியை தனிமைப் படுத்துதல் என்பன மூலமாக தொற்று தலைத்தவிர்த்துக் கொள்ளலாம்.''

''இது மிக ஆபத்தான நோயா அண்ணா...?

''எப்போதும் இல்லை. ஆனால் உடனடி வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும். போதிய நீர் அருந்துதல், ஏற்ற உணவுகளை உள்ளெடுத்தல் என்பன முக்கியமாகும். இதன் பிந்திய நிலைமைகளில் தேகத்தின் எல்லா உறுப்புக்களும் பாதிக்கப்படலாம். குடற்சுவரில் துளைகள் ஏற்படலாம். இரத்தப் பெருக்கம் ஏற்படலாம். உடனடி மருத்துவக் கவனிப்பு இந்த நிலைமைகளில் அவசியம்........''

நகுலன் சொல்லி முடித்தான்.

''எவ்வளவு தேவையான விடயங்களை உன்னால் அறிந்து கொள்ள முடிந்தது. நன்றி அண்ணா....'' கீதா சொன்னதை நகுலன் புன்னகையோடு ஏற்றுக் கொண்டான்.

வெளியே மழை குறைந்திருந்தது. கீதா குடையைக் கைகளில் எடுத்துக் கொண்டாள். ''தம்பிக்கு எப்படி இருக்கோ தெரியேல்ல.'' போய்ப் பார்க்க வேணும்..'' சொல்லியபடியே வாசலில் இறங்கினாள்.

# அறிவிற்கு வித்தாகும் நூலகங்கள்

அமெரிக்காவில் ஹார்வாட்டு பல்கலைக்கழக நூலகம் 1638இல் உருவானது. இங்கு 75 லட்சம் நூல்கள் உண்டு. அமெரிக்காவில் போல் பல்கலைக்கழகம் 1701இல் நிறுவப்பட்டது. இங்கும் 1 லட்சத்திற்குமேலான நூல்கள் உண்டு.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 3,000,000லட்சம் நூல்களும் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 4,000,000 நூல்களும் உண்டு.

கனடாவில் மக்கீல், டொரொன்டோ பல்கலைக்கழகங்களில் 32,500,00 நூல்கள் உண்டு.

பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலை நூலகம் 1753இல் நிறுவப்பட்டது. பலதுறைப்பட்ட பல லட்சம் நூல்கள் உண்டு. இது 1757 இல் அரசாங்க நூலகத்துடன் இணைக்கப்பட்டது. 1828இல் நான்காம் ஜோர்ஜ் மன்னரின் பெரும் நன்கொடையினால் பிரிட்டிஷ் அரச நூலகம் விரிவாக்கப்பட்டு மன்னரின் நேரடி நிர்வாகிகளால் பராமரிக்கப்பட்டது. இந்த அரச நூலகத்தில் அச்சுப் பிரதிகள், கையெழுத்துப் பிரதிகள், கீழ்க்கலை நூல்கள், சாசனங்கள், பிறமொழி சார்ந்த நூல்கள் எனப் பல பிரிவு சார்ந்த நூல்கள் காணப்படுகின்றன. பிரிட்டிஷ் கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகம் 13ஆவது நூற்றாண்டில் ஆரம்பமானது. இங்கு 25 லட்சம் நூல்கள் வரை உண்டு.

பிரித்தானிய ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகத்திலும் பார்க்க பல மடங்கு நூல்களைக் கொணடதாக உள்ளது.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பல கல்லூரிகளும் ஆங்காங்கே எண்ணற்ற நூல்களைச் சேமித்து வைத்துள்ளன.

பிரிட்டிஷ் அரசியல், பொருளியல் துறைப்பட்ட நூலகங்களில் உள்ள நூல்களும், துண்டுப் பிரசுரங்களும் பத்து லட்சத்திற்கும் அதிகமானவையாகும்.

ஸ்கொட்லாண்டு தேசத்திலும் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்திலும் 5 லட்சத்திற்கு மேலான நூல்கள் உள்ளன. மேலும் மான்செஸ்டர், லிவர்பூல் போன்ற பல்கலைக்கழகங்களும் லட்சக்கணக்கான பல்துறை சார்ந்த நூல்களை மேித்து வைத்தள்ளன.

பிரான்ஸிலுள்ள நூலகங்கள் உலகிலேயே மிக நேர்த்தியானவையாக விளங்குகின்றன. இது ஜான் மன்னர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1380 இலும், பின் 1411 இலும்,1424இலும், பிரான்ஸ் பல்கலைக்கழக நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நெப்போலியன் காலத்தில் 1740 ஆண்டளவில் மிகச் சிறந்தனவாக நூலகங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

உலகிலேயே உள்ள மிகப் பெரிய நூலகம் மாஸ்கோவிலுள்ள லெனின் நூலகமாகும். 1862இல் பொது நூலகமாக்கப்பட்ட லெனின் நூலகம் 3000க்கு. மேற்பட்ட கிளை நூலகங்கட்குத் தலைமை இடமாக செயற்படுகிறது. இங்கும் பல லட்சக்கணக்கான நூல்கள் உள்ளன.

ருஷ்யாவிலுள்ள யு.எஸ். எஸ்.ஆர்.விஞ்ஞான அக்கடமியிலுள்ள நூல்கள் 180 லட்சத்திற்கும் அதிகமாகும். லெனின் கிராட் பொது நூலகத்திலும் 110 லட்சம் நூல்கள் உள்ளன. இதை விட கார்ள்மாக்ஸ் நூலகத்திலும் பல லட்சம் நூல்கள் உள்ளன.

அவுஸ்ரேலியாவிலும் பொது மக்கள் நூலகங்களில் பல லட்சம் நூல்களும், 50,000 அடிக்கு மேற்பட்ட தேசப்படங்களும், 25 லட்சம் அடிக்கு மேற்பட்ட நீள பிலிம்களும், பல லட்சம் தஸ்தா வேசுகளுமாக காணப்படுகின்றன.

சிட்னி பல்கலைக்கழகத்திலும், மெல் போர்ண் பல்கலைக்கழகத்திலும் 50,லட்சத்திற்கு மேலான நூல்கள் காணப்படுகின்றன.

225 ஆண்டுகட்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கல்கத்தாவில் தேசிய நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. இது பொது மக்கள் நூலகம் என அழைகப்பட்டது.1903இல் இது சாம்ராஜ்ய நூலகம் என அழைக்கப்பட்டது. 1948 சுதந்திரத்தின் பின் இந்திய தேசிய நூலகம் ஆனது. இங்கும் பல லட்சம் நூல்கள் சேமிக்கப் பட்டுள்ளன. இங்கு ஆயிரக்கணக்கான சஞ்சிகைகள் காணப்படுகின்றன. நூற்றுக்கணக்கான பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

இன்றைய இந்தியாவின் பல மாகாணங்களிலும், பன்மொழி சார்ந்த பல்கலைக்கழங்களிலும் லட்சோப லட்சம் நூல்கள் சேமிக்க ப்பட்டுள்ளன. பல துறைப்பட்ட கலை, கலாச்சார, பண்பாட்டு விஞ்ஞான, தொழில் நுட்ப நூல்கள் எண்ணற்ற வகையில் இந்தியாவின் பல்வேறு நூலகங்களிலும், தமிழ் நாட்டின் தேசிய நூலகத்திலும், பல்கலை க்கழக நூலகங்களிலும் அறிவுச்சு ரங்கங்களாகச் சேமித்து வைக்கப் பட்டுள்ளன.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திற்தான் நூலகங்கள் பரவலாக ஏற்பட்டன. பண்டைய மன்னர்கள் ஏடுகளையும், புராதன சின்னங்களையும் தத்தம் அரண்மனைகளில் சேமித்து வைத்திருந்தனர். இலங்கை அர சின் தேசிய நூற்சுவடி அலுவலகமும் கொழும்பு, பேராதனை, யாழப்பாணம், பல்கலைக்கழ ங்கள் பலவும் பல்லாயிரக்கான நூல்களைச் சேமித்து வைத்துள்ளன.

தொகுப்பு
**நீர்வை மணி**

மாநகரசபை, பிரதே சசபை, கிராமசபை நூலகங்களும், பாடசாலை நூலகங்களும், வாசிகசாலை சனசமூக நிலையங்களும் ஆங்காங்கே பெருமளவான நூல்களைச் சேமித்து வைத்திருப்பதைக் காணலாம்.

பல துறை சார்ந்த பெரியார்களும் பலர் நூல்களைச் சேமித்து வைப்பதில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பதனையும் இன்று காணலாம்.

* * *

# புற்றுநோய்க்கு மருந்தாக முட்டைக்கோஸ்

**நம்மில் அநேகர் வீட்டுத் தோட்டங்களில் காய்கறி பயிரிடுகின்றோம். அதில் சில காய்கறிகள், நாம் புற்று நோயைப் பற்றிக் கொண்டிருக்கும் பயத்தை, குறைக்கக் கூடியனவாக இருக்கின்றன என்பது நாம் அறியாத ஒன்று.**



**அமெரிக்காவிலுள்ள தேசிய விஞ்ஞான சங்கத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களின் இரண்டு வருட ஆராய்ச்சிக்குப் பின், அநேக புற்று நோய்கள், ஆகாரத்தின் மூலமாக வருபவையே என்று, முடிவு செய்திருக்கிறார்கள். மேலும், விற்றமின்கள் A,C போன்றவை ஏராளமாக அடங்கியிருக்கும் காய்கறிகளையும் பழங்களையும் சாப்பிடுவதாலும், முட்டைக்கோஸ், காலிபிளவர் போன்ற காய்கறிகளை, உணவிலே சேர்த்துக் கொள்வதாலும், புற்று நோயால் அவதிப்படும் சாத்தியக் கூறுகளைக் குறைத்துக் கொள்ளலாமென்று கண்டறியப்பட்டுள்ளது.**

# இவ்வார இராசி பலன்கள்

**(14.10.2002 முதல் 20.10.2002வரை)**

| | | | |
|---|---|---|---|
| | | ராகு சனி | |
| | இராசிச் சக்கரம் | | குரு |
| சந் | | | |
| | கேது | சு | செ. சூ.பு |

## மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் சந்திரன் யோகஸ்தானங்களிலும், புதன் செவ்வாய் 6இலும் சுக்கிரன், சூரியன் 7 இலும் சந்திப்பது நன்மையாகும். தைரியம், தன்னம்பிக்கை, சுய உழைப்பு, காரிய சித்தி வெகுமானம், கல்வி, மாதாசுகம், வாகன விருத்தி முதலியன உண்டாகும். தனம், பொருள், மனை குடும்ப விருத்திகள் ஏற்படும். உறவினர், நண்பர், அயலவர், பெரியோர், உதவி, ஒத்தாசைகள் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு ஓரளவு அகலும். வியாபாரிகள் புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் நன்று. புதிய வியாபாரம் தொடங்கலாகாது. விவசாயிகள் சந்தைப்படுத்தல் மூலம் மனநிறைவைப் பெறுவர். குடும்பப் பெண்களுக்கு இவ்வாரம் சௌபாக்கிய யோகம் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் பிரயாசை ஏற்படும். ஆசிரியர் - மாணவர் உறவு சீர்நிலையடையும்.

## இடபம்

**(கார்த்திகை, 2,3,4, ரோகினி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்)**

உங்களுக்கு இவவாரம் சந்திரன், யோகஸ்தானங்களிலும், ரவி 6, 7ஆம் ஸ்தானங்களிலும், புதன், செவ்வாய் 5ஆம் யோகஸ்தானத்திலும்சஞ்சரிப்பதால் நன்மையான யோக பலன்களை எதிர்பார்க்கலாம். செய்யும் தொழிலில் இலாபமும் முன்னேற்றமும் உண்டாகும். செய்யும் காரியங்கள் ஜெயமாகும். தனது சுய முயற்சி கொண்டு பிறருடன் இணைந்து எவ்வகையிலும் பிரயோசனமுடையதாகச் செய்து கொள்வீர்கள். இவ்வாரம் உங்களைக் கௌரவிக்கக் கூடிய அளவுக்கு ஏதேனும் பதவியோ, கௌரவமோ, கிட்டும். தொழில்களுக்குரிய சிக்கல்களில் நிவராணம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் இவ்வாரம் ஏற்றம் காண்பர். உத்தியோகப் பெண்களுக்கு பதவிச் சிறப்பு ஏற்படும். கன்னிப் பெண்களுக்கு ஆட்சி வெள்ளியால் காதல் விவகாரம் கைகூடும். குடும்பப் பெண்களுக்கு குடும்பத்தில் அமைதியும் நிம்மதியும் தோன்றும். மாணவர்க்கு கல்வியில் ஏற்றமுண்டு.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதம்)**

உங்களுக்கு சந்திரன் ஸ்தானங்களிலும் சுகஸ்தானத்தில் புதன் செவ்வாயும், 5இல் ரவி வெள்ளியும் இவ்வாரம் சஞ்சரிப்பது விசேட யோகமாகும். தனலாபம், பொருள், மனை விருத்தியுண்டு. உச்ச குரு 2இல் இருப்பதால் களத்திர சுகம், இல்லற சுகம் கிடைக்கும். புத்தி, புத்திர ஸ்தானத்தில் ஆட்சி, வெள்ளி, ரவி சேர்க்கையால் புத்திக் கூர்மையும், புத்திர வழிமூலம் அனுகூலமும் கிட்டும். 6ஆம் சத்திரு ஸ்தானத்தில் பாவக்கிரகங்களின் நோக்கால் இடையிடையே வயிற்று நோய் அல்லது வயிற்றுக் கோளாறு உண்டாகும். ஜீவனஸ்தானத்தை குரு, புதன், செவ்வாய் நோக்குவதால், உத்தியோகத்தர்க்கு ஏற்றம் உண்டு. மேலதிகாரிகளின் பாராட்டும், சக ஊழியர்கள் ஒத்துழைப்புக்களும் கிடைக்கும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம், தொழிலால் இவ்வாரம், மிக்க இலாபம் பெறுவர். பெண்களின் எண்ணங்கள் பெரும்பாலும் நிறைவு பெறும். மாணவர்க்கு தடை தாமதங்கள் அகன்று தம் படிப்பைத் தொடர முடியும்.

## கடகம்

**(புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்)**

உங்களுக்கு இவ்வாரம் சந்திரன், ஸ்தானங்களிலும், குரு ஜென்மத்திலும் 4ஆம் சுகஸ்தானத்தில் வெள்ளி, ரவியும், சஞ்சரிக்கும் போது நன்மை, தீமை கலந்த பலாபலன்களே உண்டாகும். சிலருக்கு உஷ்ண ரோகம் இடையிடையே ஏற்படும். மாதா சுகம் கல்வி விருத்தி உண்டு. ஜீவன - கர்மஸ்தானத்தை ஆட்சி வெள்ளியும் ரவியும், நேரடியாக நோக்குவதால் தொழில் காரியங்கள் வெற்றியாகும். நன்மதிப்பு, மரியாதை கிடைக்கும். தூரதேச வாசம் அல்லது அயல் நாட்டு பிரயாண வசதிகள் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைக் கஷ்டம் அகன்று மன நிம்மதி தோன்றும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற இலாபம் பெறுவர். விவசாயிகள் சந்தைப்படுத்தலால் வங்கியிருப்புக்கள் மன நிறைவைத் தரும். பெண்களுக்கு ஜென்மராசியையும், குருவையும் சனி நோக்குவதாலும் 4 இல் சூரியன் இருப்பதாலும் இடையிடையே தேக நலம் பாதிப்பால் வைத்தியச் செலவுண்டு. மாணவர்கள் கஷ்டத்தின் மத்தியில் தம் படிப்பை தொடர முடியும்.

## சிங்கம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

உங்களுக்கு சந்திரன் மறைவு ஸ்தானத்திலும் குரு 12இல் மறைவிலும் ரவி, வெள்ளி 3 இல் மறைவிலும் சஞ்சரிப்பதால் இவ்வாரம் நன்மையான பொது பலன்களை எதிர்பார்க்கலாகாது. இடையிடையே ஆரோக்கியக் குறைவினால் வைத்தியச் செலவு ஏற்படும். இனசன நண்பர் விரோதம் உண்டு. உழைப்புக்கேற்ற ஊதியம், அடிக்கடி பயணம், அல்லது, வெளியூர் பிரயாணம் உண்டாகும். 3இல் வெள்ளி, மறைவால் களத்திர சுகக் குறைவு, கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் ஏற்படும். ஜீவன ஸ்தானமாகிய 10ஆம் இடத்தில் பாவக் கிரகங்கள் நோக்குவதால் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டும். உத்தியோகத்தர்க்கு வேலை அழுத்தங்களும் வியாபாரிகளுக்கு தம் முயற்சிக்கேற்ற பலன் கிட்டும். விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை முடங்கும். பெண்களுக்கு வரவுக்கு மிஞ்சிய செலவும், பணவிரயமும் உண்டாகும். மாணவர்கள் கஷ்டத்தின் மத்தியில் படிப்பைத் தொடர்வர். இவர்களுக்கு விடா முயற்சியும் ஊக்கமும் தேவை.

## கன்னி

**(உத்தரம்: 2, 3, 4 அத்தம், சித்திரை 1,2ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் யோகஸ்தானங்களில் சந்திரனும் தன இலாபஸ்தானங்களில் ரவி, சுக்கிரன் வியாழனும் சஞ்சரிப்பதால் நன்மை தீமை கலந்த பலன்களை எதிர்பார்க்கலாம். நினைத்த கருமம் ஜெயமளிக்கும். தனவரவும், உறவினர், நண்பர், பெரியோர் உதவி, ஒத்தாசைகளும் கிட்டும். இல்லற சுகம், குடும்ப நிம்மதி அமைதி திகழும். சத்துரு ஜெயம், நோய் நிவர்த்தி, கடன் தொல்லை அகலும். வழக்கு விடயங்கள் அனுகூலமாகும்.செய்தொழில் மேன்மையும், இலாபமும் ஏற்படும். உத்தியோகததர்க்கு வேலைக் கஷ்டங்கள் நீங்கும். வியாபரிகளுக்கு குரு இலாபத்தில் இருப்பதால் வியாபார இலாபம் அதிகரிக்கும். விவசாயிகள் சந்தைப்படுத்தலால் வங்கி யிருப்புக்கள், நிதி வரவு திருப்தியளிக்கும். பெண்களுக்கு மனம் போல கருமங்கள் யாவும் நிறைவு பெறும். வார இறுதியில் துர் அதிஷடமான பலன்கள் நடைபெறும். மாணவர்க்கு கல்வியில் விருத்தியும் பரீட்சைச் சித்தியும் உண்டாகும்.

## துலாம்

**(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதம்)**

உங்களுக்கு சந்திரன் 4, 5, 6ஆம் ஸ்தானங்களிலும் வெள்ளி, சூரியன் ஜென்மத்திலும் குரு 10 இலும் சஞ்சரிப்பதால் தொழில் முனனேற்றமும் செய்யும் காரியங்களில் ஊக்கமும் விடா முயற்சியும் இவ்வாரம் தொடரும். ஜென்ம ரவியால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. களத்திர சுகம் கிட்டும். தனலாபம், பொருள் விருத்தியுண்டு. 8இல் பாவங்கள் இருப்பதால் வரவுக்கு மிஞ்சிய செலவு இருப்பதால், செலவு கட்டுப்படல் வேண்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழுவின் மத்தியில் சக ஊழியர்களின் உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு 10இல் `உச்ச வியாழன் இருப்பதால் இலாபம் அதிகரிக்கும். புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகளுக்கு அரச மானியங்கள் தங்கு தடையின்றி வந்து சேரும். பெண்களின் கருமங்கள் யாவும் நிறைவு பெறும். மாணவர்க்கு கல்வி வளர்ச்சி படிப்படியாக முன்னேற்றமடையும். புலமைப் பரிசில்களுக்கேற்ற படிப்பு உயர்வு பெறும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4, அனுஷம், கேட்டை)**

உங்களுக்கு சந்திரன் 3,4,5 இல் யோக ஸ்தானங்களிலும். 11இல் செவ்வாய், புதன் சஞ்சரிப்பதும் விசேட யோகமாகும். 4இல் (பிதிர் ஸ்தானத்தில்) உச்ச குரு இருப்பதால் பிதுர் வழி உதவிகள் கிட்டும். தான, தரும காரியங்களில் ஈடுபட விருப்பு உண்டாகும். 12இல் ரவி, வெள்ளி ஸ்தல யாத்திரையையும், சிலருக்கு தூரதேச வாசம் அல்லது தூரப் பிரயாணத்தையும் ஏற்படுத்தும். கண்டக ஸ்தானங்களில் பாவக்கிரகங்கள் சஞ்சரிப்பதால் உத்தியோகத்தர்களுக்கு இவ்வாரம் வேலைப்பழு அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு முதலுக்கேற்ற இலாபம் கிடைக்கும். விவசாயிகள் விவசாயப் பண்ணைகளால் இலாபம் பெறுவர். சந்தைப்படுத்தல் வங்கி இருப்புக்களை அதிகரிக்கும். பெண்களுக்கு இடையிடையே தேகம் பாதிப்படைவதால் வைத்தியச் செலவுண்டாகும். மாணவர்க்கு இவ்வாரம் படிப்பில் ஊக்கமும், விடா முயற்சியும் அவசியமும் ஆசிரியர் - மாணவர் உறவு சீராகவிருக்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் 2,3,4 இல் சந்திரனும், 10இல் புதன், செவ்வாயும், 11இல் வெள்ளி, ரவியும் சஞ்சரிப்பது விசேட யோகமாகும். தனலாபம் பொருள், தொழில விருத்தி அதிகரிக்கும். செய்யும் கருமங்கள் யாவும் ஜெயமளிகக்கும். 6ஆம் ஸ்தானத்தில் பாவர்களும், 8 இல் குருவும் இருப்பதால் இடையிடையே இவ்வாரம் பிணி, பீடை உண்டாகும். வைத்தியச் செலவுண்டு. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் அழுத்தங்கள் ஏற்படும். உத்தியோகப் பெண்களுக்கு இவ்வாரம் உத்தியோகச் செல்வாக்கு ஏற்படாது. கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கடைப்படும். குடும்பப் பெண்களுக்கு குடும்பச் சுமை இவ்வாரம் உண்டு. தேகாபிமானம் இல்லாவிடில் வைத்தியச் செலவு ஏற்படும். வியாபாரிகளுக்கு நிலுவைகள் ஸ்தம்பிதமடையும், விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைகளில் பாதிப்புண்டாகும. மாணவர்க்கு இவ்வாரம் கல்வியில் சிரத்தை தேவை.

## மகரம்

**உத்தராடம் 2,3,4 திருவோணம் அவிட்டம் 1,2)**

இவ்வாரம் சந்திரன் 1,2,3ஆம் ஸ்தானங்களிலும், 10 இல் ரவி, வெள்ளியும், 9இல் செவ்வாய், புதனும் சஞ்சரிப்பதால் செய்தொழில் மேன்மையும், விருத்தியும் ஏற்படும். உச்சகுரு நேரடியாக மகரராசியை நோக்குவதால் தேகசுகம் ஏற்படும். தனம், பொருள், .மனை, வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். சிலருக்கு தூரதேச வாசம் அல்லது சஞ்சாரம் உண்டாகும். உத்தியோகத்தர்க்கு வேலைக்கஷ்டம் நீங்கும். உத்தியோகப் பெண்களும் ஏற்றமடைவர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம், திருமணப் பேச்சுக்கள் கைகூடும். குடும்பப் பெண்களின் இல்லத்திற்குரிய கருமங்கள் யாவும் தங்கு தடையின்றி நிறை வேறும். குடும்பச் செலவும் வரவும் சமமாக இருக்கும். இல்லத்தில் சுபமங்கள கொண்டாட்டத்திற்கு இடமுண்டாகும். மாணவர்க்கு கல்வியில் அதிக நாட்டம் ஏற்படும். படிப்பைத் தொடர ஊக்கமும் விடா முயற்சியும் தோன்றும்.

## கும்பம்

**(அவிட்டம், 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்)**

உங்களுக்கு வியாழன் 6இல் மறைவும், செவ்வாய் புதன் 8இல் மறைவும் நன்மையல்ல. சந்திரன் 12, 1,2ஆம் ஸ்தானங்களின் சஞ்சாரம மத்திமமாகும். உங்களுக்கு இவ்வாரம் நன்மை, தீமைகள் கலந்த பலாபலன்களே உண்டாகும். வரவுக்கு மிஞ்சிய செலவு ஏற்படும். கண்டக ஸ்தானங்களில் பாவங்கள் இருப்பதால் இடையிடையே தேக சுகம் பாதிப்பதால் வைத்தியச் செலவுண்டாகும். உத்தியோகத்தர்க்கும்

**த.சத்தியதாஸன்**
(சத்யா)

வேலை பழு அதிகரித்துக் காணப்படும். சக உத்தியோகத்தர்களின் உதவி ஒத்துழைப்புக்களை எதிர் பார்க்க முடியாது. அதிகாரிகளால் அழுத்தம் உண்டாகும். வியாபரிகளுக்கு வியாபாரம் மந்த நிலை பெறும். புது வியாபாரம் தொடங்கலாகாது. நிலுவைகள் வந்து சேராது. விவசாயிகளுக்கு உற்பத்திகள் பாதிப்படையும். சந்தைப் படுத்தல்களிலும் கஷ்டம் ஏற்படும். பெண்கள் இல்லத்தில் பொறுப்புள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும். மாணவர்களுக்கு கலவியில் ஊக்கமும் விடா முயற்சியும் அவசியம்.

## மீனம்

**(பூரட்டாதி 4 உத்திரட்டாதி, ரேவதி)**

சந்திரன் 11, 12, 1ஆம் ஸ்தானங்களிலும் குரு 5இலும் புதன், செவ்வாய் 7இலும், சூரியன் வெள்ளி 8ஆம் இடத்திலும் சஞ்சரிக்கும். இவ்வாரத்தில் நன்மை, தீமைகள் ஏற்படும். 7இற செவ்வாய் தோஷமும், 8இல் ரவியும் இருப்பதால் களத்திர தோஷமும் உண்டு. இல்லற சுகம் கிட்டாது. கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் உண்டாகும். குரு ஜென்ம ராசி மீனத்தைப் பார்ப்பதால் தேக நலம், மன அமைதி குடும்ப அமைதி கிட்டும். சிந்தித்து செயலாற்றும் திறமை ஏற்படும். உத்தியோகத்தர்க்கு இவ்வாரம் உத்தியோகச் செல்வாக்கு உண்டாகும். உத்தியோகப் பெண்களுக்கு பதவிச் சிறப்பும் உத்தியோக அதிகார்மும் தோன்றும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் மந்த நிலை பெறும். குடும்பப் பெண்களுக்கு கணவன் மனைவி பிள்ளைகள் பாசபந்தங்கள் நிலவும். 8 இல் ரவி இருப்பதால் தேகாபிமானம் தேவை. விவசாயிகள் வியாபாரிகள் தத்தம் தொழிலால் கணிசமான இலாபமடைவர்.

* * *

# உணவே மருந்து

நமது நாட்டில் இன்று நாட்டு வைத்தியம் அழிந்து வருகின்றது. மேலைத்தேய வைத்தியம் தலை சிறந்ததாகக் கருதப்படுவதற்கு முக்கிய காரணம் மாறி வரும் யுகத்திற்கு அமைய நொடிப் பொழுதில் நோய் குணமாகிவிட வேண்டுமெனக் கருதி பழைமையை மறந்து புதுமையை நாடிச் செயற்படுகின்றமையே.

நாட்டு வைத்தியத்தில் நோயின் தன்மைகள் அழிவதற்கு ஒரு மண்டலம் மருந்து உண்ண வேண்டுமென ரிஷிகளும், சித்தர்களும், முனிவர்களும் தம் அனுபவத்தால் உணர்த்திய உண்மைகள் இன்றும் அழியாமல் இருந்து வருகின்றது. சித்தமருத்துவத்தில், ஒவ்வாமை கிடையாது, 'பூரண சுகம் உண்டாகும்' என உறுதியாகக் கூறலாம். மேலைத்தேய மருத்துவத்தில் இப்படிக் கூறிய வைத்தியர்களை நாம் இன்னும் காணவில்லை. 'உயிரைக் காப்பாற்ற முயற்சிக்கின்றோம்' என்ற வைத்திய நிபுணர்களையே காண்கின்றோம்.

எமக்கு இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகளை நாம் உண்ணவில் சேர்க்க மறந்த காரணத்தால், 'அன்ரிபயடிக் நுண்ணுயிர்களை செயற்கையாக உடலில் செலுத்த வேண்டிய பயங்கரமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

உணவே மருந்து என்ற நிலையை மறந்தமையால், உயிர் கொல்லி நோய்களுடன் மனிதன் போராடி வருகின்றான்.

அதனால் நாட்டு வைத்தியத்தின் சிறப்புக் கருதி இங்கு சில வைத்தியக் குறிப்புகள் பிரசுரிக்கப்படுகின்றன.

❄ எதிர்ப்புச்சக்தி குறைவுக்கு வேப்பங்கொழுந்துத் துவையல், காச நோய்க்கு தூதுவளைக்காய் வறுவல், தோல் சுருக்கத்திற்கு வெந்தய இட்லி, மார்பக வளர்ச்சிக்கு வாழைப் பொத்தித் துவையல், தாய்ப்பால் சுரக்க முட்டைக்கோஸ் சூப், கர்ப்பப்பைப் புற்றுநோய்க்கு பப்பாசிக் காய்க் கறி, மார்பகப் புற்று நோய்க்கு வல்லாரைத்துவையல், வெள்ளைப் போக்குக்கு நீத்துப் பூசனிக்காய்ச் சாம்பார், முகப்பருவுக்கு பப்பாசிப் பாயாசம், முடி உதிர்வதற்கு கரிசாலைதுவரைக்கறி.

❄ சுக்கும் கருப்பட்டியும் சேர்த்து குடிநீராக்கிக் குடித்துவர உடல் தளர்ச்சி நீங்கும், நன்கு பசி எடுக்கும்.

❄ சுக்கைச்சுட்டு, பனங்கட்டி நாலில் ஒரு பங்கு சேர்த்து, அரைத்து, குழம்புப் பதமாக எடுத்து காலை, மாலைகொட்டைப்பாக்களவு சாப்பிட்டு வர வயிற்றுப் பொருமல், ஏப்பம் தீரும்.

❄ சுக்கு (வேர்க் கொம்பு) டன் சிறிது உப்பு சேர்த்து அரைத்துச் சாப்பிட, வாயு, ஓங்காளம், இரைச்சல் தீரும். நன்கு பசி எடுக்கும்.

❄ தூதுவளைக் கீரை, ஞானகீரை என சிறப்புப் பெயர் பெற்றது. நெய்யுடன் சேர்த்து இந்தக் கீரையை சமைத்துச் சாப்பிட்டு வர புத்திக் கூர்மையாகும். விந்து துரிதமாக வெளியேவது, தூக்கத்தில் விந்து வெளியேறுவது நின்று உடல் உறுதியாக இருக்கும்.

❄ முருங்கைக்கீரையுடன் கச்சானைச் சேர்த்து சமையல் செய்தால் பாதாம் பருப்பின் சத்து இருக்கும்.


❄ வல்லாரை இலைகள் ஐந்துடன் மிளகு மூன்று சேர்த்து மென்று காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர மூலம் குணமாகும்.

❄ மூட்டுவலி போக்கும் முடக்கற்றாழை இலை, மூலம் தீர்க்கும் வல்லாரையிலை ஒரு பழமொழி. படைகள் நீங்கும் தகரையிலை; பக்கவாதம் போக்கும் தாளியிலை என்பது எவ்வளவு உண்மை.

❄ உடலைக்காக்க உழுந்து; ஏப்பத்தைப் போக்க ஓமம்; உடல் வலுக்க எள்ளு.

(தொடரும்)


# உலகப்புகழ் பெற்ற LG மின்சார சாதனங்களை இப்போது யாழ் நகரில் உங்களின் விருப்பத்திற்கு ஏற்பவும் வசதிக்கேற்பவும் வாங்கலாம்.



**LG** வர்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் மின்சாரத்திலும் பற்றரியிலும் இயங்கக் கூடியவை. (Televisions) **LG** தட்டையான திரை தொலைக்காட்சிகள் கண்ணுக்கு இதமானதுடன் பார்வை திறனை பாதுகாக்கின்றது. (Flatron Televisions)

**LG** குளிர்சாதனப் பெட்டிகள் உணவின் தரத்தை பாதுகாக்கின்றது. துருப்பிடிக்காத உலோகத்தாலானது. உணவின் ஊட்டச்சத்து இழப்பை தடுக்கின்றது. (Refrigerators)






**LG** சலவை இயந்திரங்கள் பாதுகாப்பானதும் உறுதியானதுமான அடித்தளத்தைக் கொண்டது. கடினமான அழுக்கையும் இலகுவில் சலவை செய்யக்கூடியது. துருப்பிடிக்காத உலோகத்தாலானது. (Washing Machines)


**LG** குளிரூட்டிகள் சுத்தமான சூழலை ஏற்படுத்துகின்றது. கிருமிகளை அழிக்கவல்லது. துருப்பிடிக்காத உலோகத்தாலானது. குறைந்த மின்சார நுகர்வில் இயங்கக் கூடியது. (Air-Conditioners)





**LG** இன்ரலோவேவ் மைக்றோவேவ் அவன்கள் அதி விரைவாகவும் ஆரோக்கியமாகவும் சுகாதாரமாகவும் சமைக்கக்கூடியது. குறைந்த மின்சார நுகர்வில் இயங்கக் கூடியது. (Microwave Oven)

**LG** வீடியோ டெக் மின்சாரத்திலும் பற்றரியிலும் இயங்கக் கூடியதுடன் பல நவீன அம்சங்களையும் கொண்டது. (VCR)



LG

Abans

498, காலி றோட், கொழும்பு-03. தொலை பேசி: 565265-79.

யாழ் நகரில் எமது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்.

யாழ்ப்பாண மின்னகம் (Jaffna Electricals), 94(6)-ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். உஷா ஏஜென்சி (Usha Agency), 145, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## விடுதலைப் புலிகளின் தளபதிகள் சகிதம்

# வன்னிப் பெரு நிலப்பரப்பில் பெண்கள் படையணி அணிவகுப்பு

## ஆணுக்குப் பெண் சமன் என்று முரசு கொட்டிய பெண்கள் எழுச்சி



இரண்டாம் லெப்.மாலதியின் 15ஆம் ஆண்டு நினைவு தினமும், தமிழீழப் பெண்கள் எழுச்சி தினமும் கடந்த வியாழக்கிழமை வன்னிப் பெருநிலப்பரப்பில் மிகவும் எழுச்சி பூர்வமாக நடைபெற்று முடிந்தது.

தமிழீழப் பகுதியில் இடம் பெற்ற வரலாறு காணாத மாபெரும் எழுச்சி நிகழ்வு என்று வர்ணிக்கும் அளவுக்கு ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடலில் அலையெனத் திரண்டிருந்தனர்.

அன்றைய தினம் கரடிப் போக்குச் சந்தியிலிருந்து சுமார் ஒரு மைல் தூரம் வரையில் வீதிகளின் இருமருங்கும் சிவப்பு மஞ்சள் நிறக் கொடிகளால் அலங்கரிப்பட்டு வர்ண மின்குமிழ் விளக்குகள் அப்பகுதி எங்கும் ஒளி பாய்ச்சிய வண்ணம் இருந்தன.

ஏற்கனவே திட்டமிட்டபடி 3.30 மணிக்கு கரடிப் போக்குச் சந்தியில் இருந்து வறு நடையுடன் ஆரமபமான பெண் புலிகளது 11 படையணிகளின் அணிவகுப்பு ஒவ்வொரு அணியாக மத்திய திடலை வந்தடைந்தன.

ஆண் போராளிக[illegible]ன் அணிவகுப்புக்கு நிகராக அ[illegible]ந்திருந்த வீரப பெண்புலிகளி[illegible] அணி வகுப்பு பார்பபோர் மனங்க[illegible] கொள்ளை கொண்டது.

அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வதற்காக வ[illegible]லி உடையுடனும், கம்பீர நடையுடனும் மெய்ப பாதுகாவலர்கள் புடைசூழ மைதானத்திற்கு புலிகளின் தளபதிகள் வருகை தந்த காட்சி பார்வையாளர்களை சலனம் ஏதுமின்றி,அவர்களின் மனதை அப்படியே உறைய வைத்து விட்டது. மைதானம் எங்கும் இனம் புரியாத அமைதி.

தமது அணி வகுப்பின் மூலம் பார்வையயாளர்களை ஒரு முகப் படுத்திய படையணிகள் கம்பீர நடையுடன் பாண்ட் வாத்தியம் முழங்க எவ்வாறு மைதானத்திற்குள் நுழைந்தனவோ, அதே கம்பீரத்துடன் மைதானத்திலிருந்து வெளியேறின.

கடற் கரும்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை,கிட்டுப் பீரங்கிப் படையணித் தளபதி கேணல் தீபன், மகளிர் படையணியின் தளபதி கேணல் விதுஷா, கேணல் சொர்ணம், கேணல் பானு, கேணல் ஜெயம், புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், புலிகளின் பிரமுகர் ஜோய் மகேஸ்வரன், காவல்துறைப பொறுப்பாளர் நடேசன் மற்றும் கேணல் துர்க்கா உட்பட புலிகளின் தளபதிகள் பலர் நிகழ்வில் கலந்து கொண்டு அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.

புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம் பரிதியும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

மைதானத்தின் கிழக்குப் புறமாக பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த தமிழர் வரைபடத்தின் நடுவே தமிழீழத் தேசியக் கொடி காற்றில் அசைந்தாட,அதன் இருமருங்கிலும் மாலதி படையணி, சோதியா படையணி, கடற்புலிகளின் மகளிர் படையணி, மகளிர் தேசிய துணைப் படையணி, லெப்.கேணல் குட்டிசிறி மகளிர் படையணி, லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடியகற்றும் படையணி, லெப்.கேணல் விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி, கனரக ஆயுத மகளிர் படையணி, திலகா படையணி, அன்பரசி படையணி, தமிழீழ காவல் துறை மகளிர் படையணி ஆகிய பதினொரு படையணிகளதும் கொடிகள் காற்றில் மெல்ல அசைந்து ஆடி,தேசியக் கொடியை வாழ்த்துவது போல் அமைந்திருந்தது.



இவ்வாறு மிகவும் கண்களைக் கவரும் விதமாக அலங்கரிக்கப்பட்ட மைதானத்திலிருந்து அணிவகுப்புப் படையினர் வெளியேறியதும், கரைபுரண்டு ஓடும் வெள்ளம் போன்று ஜனத்திரள் மைதானத்தை நோக்கி விரைந்துதது.

மைதானத்தை நோக்கி விரைந்த மக்கள் கூட்டத்தை, மைதானத்தில் அமரச் செய்யும் முயற்சியில் தமிழீழக் காவல்துறையினர் ஈடுபட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து வீரர்களது நிகழ்வுகளும், கலை நிகழ்ச்சிகளும் ஆரம்பமாகின. முதல் நிகழ்வாக மன்னம்குளச்சமரில் புலிகளின் பெண்கள் படையணி நிகழ்த்திய வீர வரலாறு மீண்டும் கண் முன்னே கொண்டுவரப்பட்டது.

இம்மாதிரிச் சமரை நிகழ்த்திக் காட்டுவதற்காக ஏற்பாடாகியிருந்த பகுதியினுள் இளைஞர், யுவதிகள், தாய்மார்கள் என வயது வேறுபாடின்றி முட்டி மோதியடித்துப் பாய்ந்து சென்றனர். இது ஒரு புறம் இருக்க, நிகழ்வு நடைபெறவிருந்த பகுதியினுள் நின்றிருந்த பாரிய மரங்களில் இருந்து மாதிரிச் சமரைக் கண் குளிரப் பார்ப்பதற்காக இளைஞர்கள், சிறுவர்கள் அம்மரங்களில் ஏறிக் கொண்டனர். அவர்களது ஆதங்கம் தீரும் வரை மரத்தில் இருக்கட்டுமே எனக் கருதி காவல் துறையினர் அவர்களை சிறிது நேரம் அப்படியே விட்டு விட்டனர்.

இதனைத் தொடர்ந்து நிழல் தாக்குதலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியான நிலையில், விரைந்து வந்த காவல்துறையினர் தாக்குதல் நடைபெறும் இடத்திலிருந்து பொதுமக்களை அப்புறப்படுத்தினர். தாக்குதல் நடத்துவதற்காக மரங்களில் போராளிகள் ஏறிக் கொள்ள அது வரை மரங்களில் இருந்த இளைஞர்கள் சிறுவர்களைக் காவல் துறையினர் ஒருவாறு இறக்கினர்.

அதனைத் தொடர்ந்து நிழல் தாக்குதல்கள் ஆரம்பமாகின. சிறிலங்கா இராணுவத்தினருடன் களமாடி வீரச்சாதனை படைத்த பெண் புலிகள் இங்கும் சாதனை படைப்பதாகவே தோன்றியது. முற்று முழுதாக இராணுவத்திலும் புலிகளின் சீருடையுடனும் களமிறங்கிய பெண் புலிகள் சரமாரியான வேட்டுக்களைத் தீர்த்தபடி ஷெல் தாக்குதல்களிலும் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் நிஜமாக சண்டை தொடங்கி விட்டதென நினைத்து அதிர்ந்து போய் நின்ற பொதுமக்கள் இல்லை இது நிழல் சண்டை என மனதிற்குள் ஞாபகப்படுத்தியவாறு நின்றனர்.

இடையிடையே வானத்தைப் பிரகாசிக்க வைத்த பராலைட் வெடி ஓசை பார்வையாளர்களை திடுக்கிட வைத்தன.

சுமார் அரை மணித்தியாலத்திற்கும் மேலாக நடைபெற்ற மாதிரிச் சண்டையை பொதுமக்கள் தமது அனுபவத்திற்கு ஏற்றவாறு வன்னிச் சண்டையா? தென்மராட்சிச் சண்டையா? அல்லது நாவற்குழிச் சண்டையா? என வகைப்படுத்தியிருப்பர்.

இடையிடையே மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கண்ணி வெடித் தாக்குதல்களால் அப்பகுதி எங்கும் புகை மண்டலமாகக் காட்சியளித்ததுடன் கிபிர் விமானங்கள் சீறிப்பாய்ந்து வந்து தாக்குதல் நடத்துவது போன்ற பிரமையை அந் நேரம் ஏற்படுத்தியது.

இவற்றைத் தமது வீடியோ கமெராக்குள் பதித்துக் கொள்வதற்காகபடப்பிடிப்பாளர்கள் மரங்களிலும் ஏற்கனவே அமைக்கப் பட்டிருக்கும் பரண்களிலும் ஏறியிருந்து தாக்குதல் நடவடிக்கைகளை அங்கம் அங்கமாக உள்வாங்கிக் கொண்டனர். இத் தாக்குதல் நடவடிக்கைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து விசேடமாக அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான மேடையில் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. முன்னதாக மாலை 6.30 மணியில்இருந்து அதிகாலை 3 மணி வரையிலும் வெளிச்சக் கூண்டுகள் வானில் பறக்க விடப்பட்ட வண்ணம் இருந்தன. சுமார் 60 இற்கும் அதிகமான சிறிய, பெரிய வெளிச்சக கூண்டுகள் வானில் கைய ணுத்துச் சென்றன.

இறுதியாக இராட்சத வெளிச்சக் கூண்டு ஒன்றை வானத்தில் பறக்க விட முற்பட்ட போது பொது மக்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். அந்த ஆரவாரத்திற்கு நாவூறு பிடித்தற் போல் வானத்தில் மெல்ல மெல்ல மிதந்த இராட்சத வெளிச்சக் கூண்டு மீண்டும் தரையுடன் முத்தமிட்டது. அதனைப் பறக்க விடுவதற்கு இறுதி நேரம் வரை முயற்சி மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. எனினும் அம்முயற்சி கை கூடவில்லை.

இதனிடையே நிகழ்வில் கலந்து கொண்ட இலட்சக் கணக்கான மக்கள் மத்தியில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சாதாரண உடையில் மக்களோடு மக்களாக நின்று புலனாய்வு நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியிருந்தமையும் உற்று நோக்க முடிந்தது.



தமிழீழ இசைக்குழுவின் பிரபல பாடகர் சாந்தன் உட்பட பாடகர்கள் சிலர் தமிழீழ எழுச்சிப் பாடல்களைப பாடிப் பார்வையாளர்களை ஒரு கணம் ரசனையில் ஆழ்த்தினர்.

தமிழீழக் காவல் துறையினர் சிறப்பான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளிலும், கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

எழுச்சி நிகழ்வில் எதுவித அசம்பாவிதங்களோ அல்லது கோஷ்டி மோதல்களோ இடம் பெறவில்லை.

களத்திலிருந்து
டொறிங்ரன்

இது தமிழீழக் காவல் துறையினரின் நிர்வாக ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு மகுடம் சூட்டுவதாக அமைந்திருந்தது.

நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெளிமாவட்டங்களில் இருந்து பொது மக்கள் திரண்டிருந்ததுடன் குடாநாட்டிலிருந்து பேருந்துகள், மினியஸ்கள், லொறிகள், தட்டிவான்கள் என்பவற்றின் மூலம் சென்று ஆயிரக்கணக்கான பொது மக்கள், மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வெளிநாட்டவர்கள் சிலரும் இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்தனர். விடுதலைப் புலிகளின் இராணுவக் கூட்டமைப்பு, பெண்படை அணிகளின் அதீத வளர்ச்சி கண்டு அவர்கள் வியப்படைவதுடன் தமிழீழ விடு தலைப் புலிகளின் பின்னால் தமிழ் மக்கள் அணி திரண்டுள்ளனர் என்பதை மகளிர் எழுச்சிதின நிகழ்வு மூலம் மனதில் பதித்துச் சென்றிருப்பர் என்பதில் ஐயமில்லை.

---

## நடுவர்கள் நடுநிலை தவறுகிறார்கள்

# போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள் பரிசுக்குப் பதில் மனவேதனை பெறுகிறார்கள்

கல்வி என்பது அறியாமை எனும் அஞ்ஞானத்தைப் போக்கி, உண்மைத் தெளிவு எனும் மெய் ஞானத்தை ஏற்படுத்தி மனிதனை சமூகத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதாகும்.

இந்த வகையில் பாடசாலைகள் அறிவைப் புகட்டும் ஆலயங்களாகவும்,ஆசிரியர்கள் அங்கு தெயவங்களாகவும் விளங்கி அறியாமையால் இருக்கும் மனிதனை முழு மனிதனாக மாற்றுகின்றனர்.

பாடசாலைகள் ஆசிரியர்கள் அதனோடு இணைந்து கல்விச் சேவை ஆற்றும் அதிகாரிகள் நிர்வாக பீடத்தவர்கள் அனைவருமே சமூகத்தின் ஒளியைப் பரப்பும் கண்கள்.

இக் கண்களுக்கு பாடசாலைகள் மாணவர்கள் அனைவரும் சமமாகவே தெரிய வேண்டும். அவ்வாறு நோக்கப்படுவதே பொது நீதியுமாகும்.

மாணவர்களின கல்விச் செயற்பாட்டை வளர்க்கவும், அவர்களின் ஆளுமை ஆற்றலை மிளிரச் செய்யவும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பல புதிய புதிய அணுகு முறைகள் புகுத்தப்படுகின்றன.

இவற்றுக்காக பல்வேறு விதமான போட்டிகள் ஆளுமைத் திறன் வெளிப்படுத்தல் நிகழ்வுகள் பாடசாலை மட்டத்திலும் அதன் நிர்வாகப் பிரிவுகளான கோட்ட, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டங்களிலும் நடத்தப்படுகின்றன.

இப்போட்டிகளும் திறன் வெளிப்படுத்தல்களும் உண்மையில் மாணவர்களின் உண்மையான வெளிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பட வேண்டும். இவற்றில் வேறுபாடுகள களையப்பட்டு திறமை எங்கிருந்தாலும் அதனைப் பாராட்டி தட்டிக் கொடுத்து வளர்க்க கல்விச் சமூகம் எப் போதும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

இந்த அடிப்படையில் யாழ் குடாநாட்டில் ஆங்காங்கே இடம் பெறுகின்ற சில குறைபாடுகள் தவறுகள் இங்கு உள்ளக் குமுறலாக சிதறுகிறது.

இவை நீக்கப்பட வேண்டும் என்பதற்காக சுட்டிக் காட்டப்படுகின்றனவே தவிர இதன் மூலம் யாரையும் புண்படுத்தும் நோக்கம் எள்ளளவும் கிடையாது.

### வென்றவர் தோற்றார்

இதன் வெளிப்படையாக அணமையில் யாழ் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையே கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கான ஆங்கில நாடகப் போட்டி யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் நடை பெற்றது.

இதில் பங்கு பற்றிய கோப்பாய்க் கோட்டப் பாடசாலை யொன்றும் தேசிய பாடசாலையொன்றும் வழங்கப்பட்ட நேரக்கணிப்பீட்டில் சற்றுக் கூடிக் குறைந்தால் வெற்றி நிலைக்குத் தகுதியற்றவை எனக் குறிப்பிட்டு அவர்களுக்கான போட்டி இடங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

அதற்குப் பின்னர் ஆங்கிலப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்விசார் உயரதிகாரிகளுடன் நிலைமை குறித்து விளக்கப்பட்டதன் அடிப்படையில், கோப்பாய்க் கோட்டப் பாடசாலைக்கும் தேசியப் பாடசாலைக்கும் போட்டியில மூன்றாம் இடம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதனை கோப்பாய் கோட்டப் பாடசாலை, தமது பாடசாலை சிறிய பாடசாலையாக இருப்பினும் தமது முயற்சிக்கும் மாணவர்களின் திறமைக்கும் கிடைத்த பெரு வெற்றியாகக் கருதி மாணவர்களை பாராட்டிக் கௌரவித்தனர்.

இந்நிலையில் ஆங்கிலத் தினப் போட்டி முடிவுகள் பத்திரிகையில் வெளியானது. அதில் மூன்றாம் இடம் என அறிவிக்கப்பட்ட் கோப்பாய்க் கோட்டப் பாடசாலையின் பெயர் இடம் பெறவில்லை, பதிலாக தேசிய பாடசாலையின் பெயரே இடம பெற்றிருந்தது.

இதற்குக் காரணம் என்ன என்புதைக் குறித்த பாடசாலைச் சமூகம் மற்றும் போட்டியில் கலந்து கொண்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் உரிய அதிகாரிகளைக் கேட்ட போது மழுப்பல் காரணம் குறிப்பிடப்பட்டு முடிவில் மாற்றம் செய்யப் படாமல் பிரச்சினை அமுக்கப் பட்டதாக பெற்றோர் தரப்பில் வேதனையுடன் தெரிவிக்கப்படுகிறது.

கோவையூர்
ஜெயன்

### தெளிவற்ற பதில்கள்

கோட்டத்தில் சிறப்பு இடம் பெற்று மூன்றாம் இடம் வழங்கப் பட்டதாக அறிவிக்கப்பட்ட கோப் பாய்க் கோட்டப் பாடசாலையின் முடிவில் ஏன் திடீர் மாற்றத்தை ஏற்படுத்தினீர்கள்.

(02ம் பக்கம் பார்க்க)